www.tamilarangam.net

# எரிமலை



ஜூலை 1998



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# அக்கறைப் பூக்கள்

அன்புடன் எரிமலை ஆசிரியர் குழுவிற்கு!

எரிமலையை தவறாது வாசிக்கும் வாசகர்களில் நானும் ஒருவன். தாய் மண்ணின் கலை, பண்பாட்டு, அரசியல் உணர்வை வெளிப்படுத்தும் சஞ்சிகையாக இருக்கிறது. எரிமலை மூலம் நான் எங்கள் தாய் மண்ணின் உண்மைச் செய்திகளை வாசித்து அறிகின்றேன். எரிமலை சஞ்சிகை தொடர்ந்து வெளிவர எனது வாழ்த்துக்கள்.

நன்றி

இப்படிக்கு
நமச்சிவாயம்
ஜேர்மனி

★★★

எரிமலை ஆசிரியர் அவர்கட்கு!

வணக்கம்.

ஐயா,

எரிமலை இதழை தவறாது படித்து வருகின்றேன். தற்போது புதுப் பொலிவுடன் ஒவ்வொரு இதழிலும் மிகவும் காத்திரமான விடயங்களைத் தாங்கி வரும் எரிமலைக்கு எனது நன்றிகள். தமிழீழத்தில் நடைபெறும் நிகழ்வுகளை, உண்மைச் சம்பவங்களை அறியவென ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும் என் போன்ற வாசகர்களுக்கு எரிமலை இதழ் கிடைப்பது மிக்க மகிழ்ச்சியைத் தருகிறது.

ஆனாலும், எனக்கு ஒரேயொரு மனவருத்தம் என்னவென்றால் எரிமலை எனக்கு தாமதமாகவே வந்து சேருகின்றது. உரிய காலத்தில் எரிமலையை எனக்கு அனுப்பிவைக்கும்படி மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

வாழ்க தமிழ்
மலர்க தமிழீழம்
நன்றி

அன்பு நெஞ்சன்
புதுச்சேரி இரா. தமிழ்மாறன்
இந்தியா

★★★

அன்புள்ள ஆசிரியருக்கு,

பல்லாயிரம் மைல்கள் கடந்தும் தமிழீழத்தின் செய்திகளைத் தொகுத்து வெளிவரும் எரிமலையே நீ இக் காலகட்டத்தில் ஆற்றும் பணி மகத்தானது. சுதந்திரத்தைத் தேடும் எம் மக்களின் சுமைகளைத் தாங்கிவரும் எரிமலையே உனது பணிக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

இங்குள்ள பத்திரிகைகள் மூலம் தமிழீழத்தில் நடைபெறும் உண்மை நிகழ்வுகளை அறிந்துகொள்ள முடியாது. அதனால் எப்போது எரிமலை வந்து சேரும், உண்மையை அறிந்துகொள்ள முடியும் என்ற ஏக்கத்துடனேயே இங்கு நாட்கள் கழிகின்றன. எரிமலையை படிப்பதற்கு இங்கு ஏகப்பட்ட கூட்டம். என் நண்பர்கள் என் மூலமே எரிமலையைப் படித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களது முகவரிகளையும் அனுப்பி வைக்கிறேன். அவர்களுக்கும் எரிமலையை தனியாக அனுப்பி வைத்தீர்களானால் இன்னும் கூடுதலான மக்கள் எரிமலையைப் படிப்பதற்கு உதவியாக இருக்கும்.

நன்றிகள் பல எரிமலைக்கு.

உங்கள் அன்பு வாசகன்
செந்தில் வேல்
திருச்சி
இந்தியா

★★★

அன்புடன் எரிமலை ஆசிரியர் குழுவிற்கு!

வணக்கம்.

அந்நிய மண்ணில் இருக்கும் எமக்கு எமது தாயக சுதந்திரத்தையும் எமது தாய் மண்ணையும் நினைவிலிருத்தும் எரிமலைக்கு எனது நன்றிகள். அந்நிய மண்ணில் எத்தனையோ உண்மைக்குப் புறம்பான செய்திகளை சர்வதேச செய்தி ஊடகங்கள் வெளியிடும் நேரத்தில் உண்மையான செய்திகளை விபரமாக எரிமலை தருவதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

நன்றி.

சிவா
லண்டன்

★★★

அன்புடன் ஆசிரியருக்கு!

வணக்கம்.

தாயகச் செய்திகளை எழிதாக எடுத்தியம்பும் எரிமலையே உன்னைத் திறந்தவுடன் என் நெஞ்சின் பாரம் குறைகிறதே. ஏக்கத்தால் தவிக்கும் எனக்கு ஆதரவாய் நான் பிறந்த மண்ணின் நிகழ்வுகளை ஒன்றுவிடாமல் உண்மையாக ஒப்புகிறாயே. புதிய புறநானூறு படைக்கும் எம் புலிகளின் தியாகங்களை மதித்து உரைக்கின்றாயே உன் பணி தொடர என் வாழ்த்துக்கள்.

வாழ்த்துக்கள் பல கூறும்

சுதர்சன்
இத்தாலி

★★★

எரிமலை ஆசிரியருக்கு,

மாதாந்தோறும் எரிமலையை தவழவிடும் உங்களுக்கு எனது பாராட்டுக்கள். தேசியத் தலைவரின் பேச்சுக்களையும் அறிவுரைகளையும் அடிக்கடி எரிமலையில் பிரசுரிப்பீர்களானால் என் போன்றவர்களுக்கு மிகவும் மகிழ்சியாக இருக்கும். இது இக்காலத்தின் தேவையுமாகும்.

நன்றி

பாலன்
பிரான்ஸ்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உள்ளே...




தமிழீழத்தின் சர்வதேச அரசியல் — பக்கம் 04





ஜனாதிபதி தேர்தலா மாகாணசபைத் தேர்தலா — பக்கம் 14





ஜயசிக்குறு முன்னேயா ? பின்னேயா ? — பக்கம் 18





ஜயசிக்குறுவை விரைவுபடுத்த காலம் கொடுக்கும் நிர்ப்பந்தம் — பக்கம் 24





இஸ்லாமிய அணுகுண்டை அமெரிக்காவால் தடுக்க முடியவில்லை — பக்கம் 44





★ ஜூலை 83-முதல் செம்மணி வரை சிங்களத்தின் போர்க் குற்றங்கள். – பக்கம் 08

★ கரும்புலிகள். – பக்கம் 10

★ மூன்று வருடம் காத்திருந்த கொக்கு. – பக்கம் 16

★ ஜயசிக்குறுவின் புதிய தந்திரோபாயம் புலிகளின் பதிலடியால் பெரும் சிக்கலில். – பக்கம் 21

★ பெரும் இழப்பை சந்தித்துள்ள சந்திரிகாவின் யுத்த மூலதனம். – பக்கம் 27

★ பதவியில் ஏற்றிய ஏணிகளை எட்டி உதைக்கும் சந்திரிகா அரசு. – பக்கம் 29

★ பெரும் சோதனைக்களமாகிவிட்ட தலைநகரில் தமிழர் வாழ்வு. – பக்கம் 32

★ குடாநாட்டில் சுதந்திரம் பெற்ற துரோகிகளும் சமூகவிரோதிகளும். – பக்கம் 34

★ நாற்பது ஆண்டுகளும் தமிழர்களும். – பக்கம் 36

★ ஜே.வி.பி யின் மூன்றாவது கிளர்ச்சி. – பக்கம் 39

★ சிறுகதை – உறவு – பக்கம் 41

★ முடிவிற்கு வந்த சுகாட்டோவின் ஆட்சி. – பக்கம் 47




தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தெய்வப் பிறவிகள்தான் கரும்புலிகள்



பலவீனமான எமது மக்களின் மிகவும் பலம்வாய்ந்த ஆயுதமாகவே கரும்புலிகளை நான் உருவாக்கினேன். கரும்புலிகள் எமது இனத்தின் தற்காப்புக் கவசங்கள், எமது போராட்டப் பாதையின் தடைநீக்கிகள். எதிரியின் படைபலத்தை மன பலத்தால் உடைத்தெறியும் நெருப்பு மனிதர்கள்.

கரும்புலிகள் வித்தியாசமானவர்கள். அபூர்வமான பிறவிகள். இரும்பு போன்ற உறுதியும் பஞ்சு போன்ற நெஞ்சமும் கொண்டவர்கள். தங்களது அழிவில் மக்களது ஆக்கத்தைக் காணும் ஆழமான மக்கள் நேயம் படைத்தவர்கள்.

ஒரு கரும்புலி வீரன் தன்னைவிட தன் இலட்சியத்தையே காதலிக்கிறான். தனது உயிரைவிட தான் வரித்துக் கொண்ட குறிக்கோளையே நேசிக்கிறான். அந்த குறிக்கோளை அடைவதற்கு தன்னை அழிக்கவும் அவன் தயாராக இருக்கிறான். அந்தக் குறிக்கோள் அவனது சுயத்திற்கு அப்பால் நிற்கும் மற்றவர்களின் நலன் பற்றியது, நல்வாழ்வு பற்றியது. மற்றவர்கள் இன்புற்றிருக்க வேண்டும் என்பதற்காக தன்னை இல்லாதொழிக்கத் துணிவது தெய்வீகத் துறவரம் அந்தத் தெய்வீகப் பிறவிகள் கரும்புலிகள்.

முகத்தை மறைத்து பெயரையும் புகழையும் வெறுத்து, இலட்சிய மூச்சாக தமிழீழ விடுதலைக் காற்றுடன் கலந்துவிட்ட இந்த சரித்திர நாயகர்களை நான் சிரம் தாழ்த்தி வணங்குகிறேன்.

தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




கலை பண்பாட்டு

அரசியல் சமூக ஏடு

★

பதினைந்தாம் ஆண்டு

ஜூலை 1998

★

ஆக்கங்கள்

அபிப்பிராயங்கள்

மற்றும் தொடர்புகட்கு

★

எரிமலை

தாய்மண் வெளியீடு

தமிழர் ஒருங்கிணைப்புக் குழு

*C/O T.C.C-France,*

*341, Rue des Pyrenees,*

*75020 Paris.*

*Tel: 01 - 43 58 11 42*

# வெற்றிக்காக உழைப்போம்!

கறுப்பு ஜூலை – 15 வருடங்களுக்குமுன் சிங்கள தேசத்தினால் நடாத்தி முடிக்கப்பட்ட பாரிய இனப் படுகொலை ஒன்றை பதிவு செய்து வரலாறு பூராகவும் அதனை காவிச் செல்லும் தமிழர்களின் தீர்மானத்தை வெளிக்காட்டும் நாட்கள் இவை.

இந்தப் 15 வருட காலத்துள் தமிழர் தேசியம் பல்வேறு மாற்றங்களை எதிர்கொண்டு போராடியது; பல்வேறு மாற்றங்களை உருவாக்கப் போராடியது. தமிழர்கள் என்ற அடையாளத்தை பாதுகாக்கும் உட்கட்டுமானத்துடன் தமிழீழ தேச அமைப்பு ஒன்று இன்று தோற்றம் பெற்றுள்ளது. தனித்துவமான சட்ட அமைப்புகளையும் பொருளாதார – சமூக கோட்பாடுகளையும் பிரதிபலிக்கும் செழுமையான கட்டமைப்புக்கள் தோற்றம் கண்டுள்ளன. இவை அனைத்தையும் பாதுகாத்து வெற்றிக்கு அழைத்துச் செல்லும் பலம் மிக்க தேசிய விடுதலை இராணுவம் ஒன்று உருவாகியுள்ளது.

இந்த சாதனைகளின் பின்னால் இழப்புகளும், இறப்புகளும் பட்டியலிடப்பட்டுள்ளன. பல்லாயிரம் போராளிகளின் உயிர்த் தியாகம், மக்களின் இழப்புக்கள் என்பன தமிழர்கள் தம் விடுதலைக்கு இதுவரை கொடுத்துள்ள விலையாகும்.

1983-ல் சிங்கள அரசும் அதனது இனவாத இயந்திரங்களும் இணைந்து நடாத்திய கோர வெறியாட்டம் அந்தத் தீவில் இருவேறு தேசியங்கள் முரண்பாடுகளுடன் வாழுகின்றன என்பதை உலகத்திற்கு எடுத்துச் சொல்லியது. அன்று முதல் ஐ. நா மனித உரிமைகள் உப ஆணைக் குழு உட்பட பல்வேறு சர்வதேச மன்றங்களுக்கும் தமிழர் வேண்டுதல் எட்டியது. தமிழீழத்தின் சர்வதேச இயக்கப் போக்கு அந்த 83-ஜூலையின் பின்னர் வீரியம் கொண்டது.

தமிழீழ விடுதலைக்கான போராட்டத்தில் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் பங்களிப்பு அன்றுமுதல் இன்றுவரை தொடர்ச்சியாக அதிகரித்து வருகின்றது. தமிழீழத்தின் விடுதலையே முழுத் தமிழ் மக்களினதும் சுபீட்சமான எதிர்காலத்திற்கான அத்திவாரம் என்ற தீர்மானத்துடன் புலம்பெயர் வாழ் தமிழர்கள் செயற்பாடானது இப் 15 வருட காலத்து பதிவுகளில் அடங்குகின்றது.

ஆயினும், எமது தேசத்தின் வெற்றிக்கு முன்னையதிலும் கடுமையாக உழைக்கவேண்டிய கடமைப்பாடு எம்முன் இன்றுள்ளது. இன்று எம் தேசம் வெற்றிக்கு அருகில் நிற்கிறது. இக்கால நகர்வில் இடைப்படும் தடைகளை உடைத்தெறியும் பலத்தை எம் தேசத்து போராளிகளுக்கு வழங்கவேண்டிய வரலாற்று முக்கியம் வாய்ந்த நாட்கள் இவை. இதனை உணர்ந்து கொள்வதே கறுப்பு ஜூலை 98-ல் நாம் பிரகடனப்படுத்த வேண்டிய செய்தியாகும்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழீழத்தின் சர்வதேச அரசியல்

தமிழீழம் என்ற கனவை தமது மனதில் தமிழீழ மக்கள் நிரந்தரமாக்கி தற்போது இருபது வருடங்களுக்கு மேலாகிறது. இந்த இருபது வருடத்தில் எமது போராட்டம் பல தடைகளைத் தாண்டிச் சென்றிருக்கிறது. போராட்டத்தின் பல கட்டங்களில் எமது கனவு நனவாகப் போவதாக நாம் உணர்ந்திருக்கிறோம். பின்னர் பின்னடைவுகள் ஏற்பட்டு எமது தேசத்தின் விடுதலை நழுவிப் போவதாகவும் நாம் பல கட்டங்களில் ஏக்கத்தோடு உணர்ந்திருக்கிறோம். இந் நிலையில் எமது தமிழீழக் கனவு நனவாவது எப்போது என்ற கேள்வி எம் மக்களின் மனங்களில் எழுவதும் எமது விடுதலையைத் தடுத்து நிற்கும் சக்திகள் யாவை என அறிய முற்படுவதும் யதார்த்தமானதாகும்.

சிங்களம் ஒரு பலமான எதிரியாக இருந்த போதும், தனித்து நிற்கும் சிங்கள அடக்குமுறையாளர்களின் இராணுவத்தை முறியடித்து தமிழீழ அரச கட்டுமானத்தை அமைக்கக் கூடிய வலுவை எமது விடுதலை இயக்கம் பெற்றுவிட்டது என்பது இன்று யாவரும் அறிந்த உண்மை. அப்படியிருந்தும் சிங்களம் தொடர்ந்தும் அடக்குமுறையை நடத்துவதற்கும் எமது விடுதலை பின் தள்ளப்பட்டுச் செல்வதற்கும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தைச் சூழ நிகழும் சர்வதேச அரசியல் காரணமாக உள்ளது. ஒவ்வொரு விடுதலைப் போராட்டத்திலும் சொந்த தேசிய நலன்களை அடிப்படையாகக் கொண்டு உலக நாடுகளால் வகுக்கப்படும் கொள்கைகளினூடாக உருவாகும் தடைகளைத் தாண்டுவது என்பதே கடினமானதாகவும் போராட்டத்தின் இறுதிக் கட்டமாகவும் இருக்கும். தமிழீழ விடுதலைப் போராட்டமும் தற்போது இக் கட்டத்தினுள் நுழைந்துள்ளது. இன்று சிங்களம் தமிழீழம் மீது நடத்தும் போர் சிங்களத்தின் சொந்தப் பலத்தில் நடத்தப்படவில்லை. அது முழு உலகத்தினதும் முண்டுகொடுப்பின் உதவியோடு தான் நடத்தப்படுகிறது. இதைத்தான் “உலகத்தின் ஆதரவும் உதவியும் இருப்பதனால்தான் சந்திரிகா அரசினால் இந்தப் போரைத் தொடர்ந்தும் நடத்த முடிகிறது. சிங்களப் படையினருக்குப் பேரிழப்புக்கள் ஏற்பட்டபோதும் போர்ச் செலவீனம் சிகரத்தை எட்டிய போதும் பொருளாதாரம் சீர்குலைந்த போதும் அரசாங்கம் போர் வெறிகொண்டு இராணுவக் கடும் போக்கைக் கடைப்பிடிப்பதற்கு உலகத்தின் ஆதரவு தான் காரணம்” எனத் தலைவர் பிரபாகரன் அவர்கள் குறிப்பிடுகின்றார்.

**தமிழீழ விடுதலைப் போராட்டம் தமிழீழ மக்களின் தேசிய நலன்களைப் பாதுகாக்கும் நோக்கம் கொண்டதே தவிர வேறு எந்த நாட்டினதும் தேசிய நலன்களுக்கு எதிரானது அல்ல**

**தீபன்**

தமிழீழ விடுதலைப் போராட்டம் சர்வதேச சட்டவரம்புகளுக்கு உட்பட்டது. மனித நீதியின் பாற்பட்டது. சிங்கள தேசத்தினதும் அதன் அரசினதும் அடக்கு முறைகளிலிருந்து தமிழீழ மக்கள் விடுபடுவதற்கு, தமிழர்களின் பாரம்பரிய நிலத்தை சிங்கள ஆக்கிரமிப்பிலிருந்து விடுவித்து தமிழீழ அரசைக் கட்டி அமைப்பதைத் தவிர வேறு வழிகள் இல்லை. எனவே தமிழீழ விடுதலைப் போராட்டம் தமிழீழ மக்களின் தேசிய நலன்களைப் பாதுகாக்கும் நோக்கம் கொண்டதே தவிர வேறு எந்த நாட்டினதும் தேசிய நலன்களுக்கு



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எதிரானது அல்ல. ஆயினும் தமிழீழ விடுதலைப் போராட்டம் தமது தேசிய நலன்களுக்கு குந்தகமாக அமையும் என பல உலக நாடுகளின் கொள்கை வகுப்பாளர்கள் கருத்துக் கொண்டுள்ளனர். இதனாலேயே சிங்கள அரசின் அடக்குமுறைகளுக் குத் தமது ஆதரவினை வழங்கி வரு கின்றனர்.

தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடர்பாக வெவ்வேறு உலக நாடு கள் வெவ்வேறு கொள்கைகளைக் கொண்டுள்ள போதும் பிரதான மான மூன்று கொள்கை வகுப்புக் களைத் தற்போது நாம் நோக்கு வோம். பிராந்திய நலன்களை முதன் மையாகக் கொண்ட இந்திய அரசின் கொள்கை வகுப்பும், தென்னாசியப் பிராந்தியம் தொடர்பாகவும் பொது வான உலக போக்கில் கொண்டுள்ள அக்கறை காரணமாகவும் அமெ ரிக்கா வகுக்கும் கொள்கைகளும், வரலாற்று ரீதியான காரணங்களைக் கொண்டு பிரித்தானியாவும் ஐரோப் பிய சமூகமும் வகுக்கும் கொள்கை களும் இங்கு சுருக்கமாக நோக்கப் படும்.

இந்தியாவின் கொள்கை வகுப் பில் அதன் பிராந்திய நலன்களே முதன்மை பெறுகின்றன. சுதந்திர தமிழீழம் இந்தியாவினுள் தேசவிடுத லைப் போராட்டங்களுக்கு உந்து சக்தியாக உருவாகி இந்தியாவின் ஒருமைப்பாட்டிற்கு இடையூறாக அமையும் என இந்திய கொள்கை வகுப்பாளர்கள் பலர் கருதுகின்ற னர். வேறு சிலரோ இந்தியாவினுள் இனங்கள் அடக்கப்படாதவிடத்து அங்கு விடுதலைப் போராட்டங்கள் முனைப்புப் பெறும் என கற்பனை செய்வது பொருத்தமற்றது எனக் கருதுகின்றனர். இவர்கள் பிராந்திய நலன் சார்ந்து வரலாற்று ரீதியான உறவுகளினால் சுதந்திரமாக அமை யும் தமிழீழம் இந்தியாவின் உறுதி யான நேச நாடாக அமையும் என வாதிடுகின்றனர். தென்னாசியப் பிராந்தியத்தில் அமெரிக்கத் தலை யீடுகளைத் தவிர்ப்பதற்கு இந்தியா



தமிழீழ விடுதலையினை ஆதரிக்க வேண்டும் என்பதே இவர்களது வாதமாகும். இந்த இரண்டு கருத்துக் களுக்கும் இடையில்தான் இந்தியா வின் தமிழீழ விடுதலைப் போராட் டம் சம்பந்தமான கொள்கைகள் அமைகின்றன.

அமெரிக்காவின் கொள்கை வகுப் பினை இரண்டு வரையறைகளினுள் நோக்கலாம். ஒன்று தென்னாசியப் பிராந்தியத்தில் உலக வல்லரசாக தனது ஆதிக்கத்தை நிலை நாட்டுதல் என்பது. மற்றையது பொதுவான உலகப் போக்கில் மேற்குலகம் எடுக் கும் கொள்கைகளுக்கு ஏற்ப வரை யப்படும் கொள்கைகள். தென்னாசி யப் பிராந்தியத்தில் அமெரிக்கா விற்கு இந்தியாவுடன் போட்டியுள் ளது. உலக வல்லரசாக அமெரிக் காவும் பிராந்திய வல்லரசாக இந்தி யாவும் இப் பிராந்தியத்தில் தமது நலன்களைப் பேண போட்டியிடு கின்றன. இதற்காக இலங்கைத் தீவில் சிங்கள அரசை தன்னில் தங்கியி ருக்கச் செய்து தனது கைப்பொம் மையாக மாற்றுவது என்பதை ஒரு கொள்கையாக அமெரிக்கா நீண்ட காலமாகவே கொண்டுள்ளது. இக் கொள்கை காரணமாகவே அமெ ரிக்கா சிங்கள அரசிற்கு தனது ஆதர



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வினை வழங்கிவருகின்றது. விடுதலைப்புலிகள் மீதான அமெரிக்கத் தடையினையும் இந்த அடிப்படையில்தான் நோக்க வேண்டும். ஆயினும் சிங்கள அரசு விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாக வென்று இலங்கைத் தீவில் பலமான தனிச் சக்தியாக உருவெடுக்கும் என்னும் சிங்கள அரசின் வாதத்தை அமெரிக்கா நம்பவில்லை. இதனாலேயே அமெரிக்கக் கொள்கை வகுப்பில் விடுதலைப்புலிகளுக்கான ஆதரவு முழுமையாக மூடப்படவில்லை. அத்துடன் விடுதலைப் புலிகள் நேரடியாக இதுவரை அமெரிக்க தேச நலன்களுக்கு எதிராகச் செயற்படவில்லை என்பதையும் இங்கு குறிப்பிடல் பொருத்தமானதாகும்.

இலங்கைத் தீவில் தமிழ் சிங்கள தேசங்களுடன் வரலாற்று ரீதியான தொடர்புகளைக் கொண்டுள்ள இன்னுமொரு நாடு பிரித்தானியாவாகும். இந் நாடு ஐரோப்பிய சமூகத்தில் அங்கம் வகிப்பதால் பிரித்தானியா சார்ந்து ஐரோப்பிய சமூகத்தின் தமிழீழ விடுதலைப் போராட்டம் சம்பந்தமான கொள்கைகளை நோக்கலாம்.

பொதுவாக சிங்கள அரசு மேற்குலகத்திற்கு அப்பிராந்தியத்தில் ஒரு நேச சக்தியாக இருந்து வருகிறது. இது மேற்குலக நாடுகளின் பொருளாதார நலன்களுக்கு அவசியமானதாகவுள்ளது. இதனால் அப்பிராந்தியத்தில் ஒரு பிரச்சினை தராத நேச அரசு என்ற அடிப்படையிலேயே பிரித்தானியாவினதும் ஐரோப்பிய சமூகத்தினதும் சிங்கள அரசிற்கு ஆதரவான கொள்கை வகுப்புகள் அமைகின்றன. ஆயினும் பெருமளவு தமிழர்கள் சிங்கள அடக்கு முறைகளிலிருந்து தப்பி ஐரோப்பிய நாடுகளில் தஞ்சம் புகுந்து வாழ்கின்றனர். தொடர்ந்தும் இவ்வாறு தமிழீழ மக்கள் வந்து கொண்டுள்ளனர். பிரித்தானியாவில் இத் தொகை அதிகமானதாகவும் அத்துடன் பிரித்தானிய தேசத்தின் பொருளாதார வாழ்வுடன் ஓரளவு தம்மை இணைத்துக் கொண்டதாகவும் தமிழீழ சமூகம் வாழ்ந்து வருகின்றது.

இதனால் இத் தமிழீழ சமூகத்தின் கருத்துக்களுக்கு பிரித்தானியாவின் கொள்கை வகுப்பில் ஓரளவேனும் இடம் கொடுக்கப்படுகின்றது. அத்துடன் பிரித்தானியா தமிழ், சிங்கள தேசங்கள் இரண்டினதும் நல்லுறவு தனது எதிர்கால நலனுக்கு முக்கியமானது எனக் கருதுவதால் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் எனும் பாத்திரத்தில் அக்கறை கொண்டுள்ளது. இவ்வாறாக பிரித்தானியாவின் ஓரளவு நடுநிலைமையான கொள்கையினைச் சிதைப்பதற்கு சிங்கள அரசு கங்கணம் கட்டி நிற்கிறது. இதற்காகவே சிங்கள இனவாதிகளைத் தூண்டி பிரித்தானியாவில் விடுதலைப் புலிகளின் அலுவலகத்தினை மூடவேண்டும் என உலகெங்கும் ஆர்ப்பாட்டங்களை நடத்திவருகின்றது.

தமது நலன் சார்ந்து அமெரிக்கா தலைமையிலான மேற்குலக நாடுகளுக்கு உலகின் பல பாகங்களிலும் இயங்கும் ஆயுத எதிர்ப்பு இயக்கங்களினால் நடத்தப்படும் குண்டு வெடிப்புகள் ஒரு தலையிடியாக மாறியபோதே அமெரிக்கா “உலக பயங்கரவாதத்திற்கு” எதிரான கொள்கைகளை வகுக்கத்தொடங்கியது. இந்த அடிப்படையில்தான் 1996–ம் ஆண்டில் பயங்கரவாதக் குண்டுவெடிப்புகளுக்கெதிரான ஐ.நா. உடன்படிக்கை ஒன்று கொண்டுவரப்பட்டது. இவ்வாறான பொதுவான உலக சிந்தனைப் போக்குகளைத் தனது நலன்களுக்காகப் பயன்படுத்த சிங்கள அரசு பெரிதும் முயன்று வருகின்றது. ஒரு அரசு என்ற அந்தஸ்தை இன்னமும் அடைந்துவிடாத நிலையிலும் சிங்கள அரசின் பரப்புரை யுக்திகளை முறியடிப்பதில் விடுதலைப் புலிகள் அமைப்பும் தளராது தனது முயற்சிகளைத் தொடர்கின்றது. நுணுக்கமான இராஜ தந்திர முயற்சிகளூடாக தமிழீழத்தின் சர்வதேச அரசியலில் எழும் தடைகளைத் தாண்டி தமிழீழக் கனவினை நனவாக்கும் சக்தி விடுதலைப் புலிகள் அமைப்பிடம் உண்டு.

இந்த இடத்தில்தான் உலகின் பல பாகங்களிலும் புலம்பெயர்ந்து வாழும் தமிழீழ மக்கள் தங்கள் விடுதலை இயக்கமான தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தம்மை இறுகப் பிணைத்துக் கொள்வதும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வலுவினைப் பன் மடங்கு பெருக்குவதும் அவசியமானதாகும். இந்த போராட்ட வலுவின் முக்கியத்துவத்தைத்தான் “உண்மைகள் நீண்டகாலம் உறங்கப் போவதில்லை என்பது மட்டும்



**உண்மைகள் நீண்டகாலம் உறங்கப் போவதில்லை என்பது மட்டும் உண்மை. என்றோ ஒருநாள் உலக அரங்கில் சந்திரிகாவின் சமாதான வேடம் கலையப் போவது திண்ணம். அவரது பொய்யான முகமூடி கழன்று விழும்போது தான் சிங்களப் பேரினவாதத்தின் அசிங்கமான முகத்தை உலகம் கண்டு கொள்ளும். அப்போது தான் ஒடுக்கப்படும் எமது இனத்தின் விடுதலைக் குரல் உலகத்தின் செவிகளில் நுழையும். அந்தக் காலம் அண்மித்துக் கொண்டிருக்கிறது. அந்தக் காலத்தைக் கனிய வைப்பது எமது போராட்ட வலுவில்தான் தங்கியிருக்கிறது.**

**- தமிழீழத் தேசியத் தலைவர்**
**மேதகு வே. பிரபாகரன் அவர்கள்**



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உண்மை. என்றோ ஒருநாள் உலக அரங்கில் சந்திரிகாவின் சமாதான வேடம் கலையப் போவது திண்ணம். அவரது பொய்யான முகமூடி கழன்று விழும்போது தான் சிங்கள பேரினவாதத்தின் அசிங்கமான முகத்தை உலகம் கண்டு கொள்ளும். அப்போது தான் ஒடுக்கப்படும் எமது இனத்தின் விடுதலைக் குரல் உலகத்தின் செவிகளில் நுழையும். அந்தக் காலம் அண்மித்துக் கொண்டிருக்கிறது. அந்தக் காலத்தைக் கனிய வைப்பது எமது போராட்ட வலுவில்தான் தங்கியிருக்கிறது" எனத் தேசியத் தலைவர் அவர்கள் குறிப்பிடுகின்றார்.

இது சம்பந்தமான தனது கவலையைத் தலைவர் பிரபாகரன் அவர்கள் பின்வருமாறு வெளிப்படுத்துகின்றார். "இன்றைய உலகமானது மனித நீதி என்ற அச்சில் சுழலவில்லை. மனிதம், தர்மம் என்ற தார்மீக அறங்கள் உலக உறவுகளை நிர்ணயிக்கவில்லை. ஒவ்வொரு உலக நாடும் தனது தேசிய நலனுக்கே முதன்மை கொடுக்கின்றது. இந்த நலனை பேணும் அடிப்படையிலேயே இன்றைய உலக ஒழுங்கும் உலக உறவுகளும் அமையப் பெற்றிருக்கின்றன. இதுவே இன்றைய உலக யதார்த்தம். இலங்கையில் நெருக்கடி தீர்ந்து சமாதானமும் நிலையான ஆட்சியும் தோன்றினால் தமது நலன்களைப் பேண வாய்ப்பாக இருக்குமென உலக நாடுகள் கருதலாம். இந்த எதிர்பார்ப்பில் தவறில்லை. ஆனால் இந்த சாதனையை சந்திரிகா அரசு நிலைநாட்டி விடப்போகின்றது என உலகம் நம்புவதுதான் எமக்கு வேதனையையும் ஏமாற்றத்தையும் கவலையையும் கொடுக்கிறது".


★

# சுகாதார தேவைகளை நிறைவேற்ற போதிய நிதி கிடைக்கவில்லை

## வடக்கு_கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு

வடக்கு– கிழக்கு மாகாணங்களுக்கான சுகாதாரத் தேவைகளை நிறைவேற்ற நிதி கிடைக்காத காரணத்தினால் அவற்றை கைவிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக வடக்கு– கிழக்கு மாகாண சபையின் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

தமக்கு அரசிடம் இருந்து எட்டுக்கோடி ரூபா கிடைக்க வேண்டியிருந்தும் அரசு இரண்டு கோடியே 60 இலட்சம் ரூபாவை மட்டுமே ஒதுக்கியதால் பல தேவைகளை கைவிடவேண்டிய நிலை ஏற்பட்டதாகவும், திருகோணமலை, அம்பாறை, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில் அமைக்கப்படவிருந்த நோயாளிகளுக்கான வார்ட், தாதிமார்களுக்கான விடுதிகள், வைத்தியசாலை காரியாலயங்கள் நிதிப்பற்றாக்குறையால் கைவிடப்பட்டுள்ளதாகவும் மாகாண சபையில் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.






தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஜூலை 83– முதல் செம்மணி வரை

# சிங்களத்தின் போர்க் குற்றங்கள்


*"நான் தமிழ் மக்களின் அபிப்பிராயங்கள் பற்றி கவலைப்படவில்லை. இப்போது நாம் அவர்களைப் பற்றி எண்ணிப்பார்க்க முடியாது; அவர்களது உயிர்கள் பற்றியோ அபிப்பிராயங்கள் பற்றியோ எண்ணிப்பார்க்க முடியாது. எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக அழுத்தத்தை வடக்கில் போடுகிறீர்களோ இங்கு சிங்களவர்கள் அவ்வளவு மகிழ்வடைவார்கள். உண்மையில் நான் தமிழர்களை விரட்டியடித்தால் சிங்கள மக்கள் மகிழ்ச்சியடைவார்கள்"*

*முன்னாள் சிறீலங்கா ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா 1983– ஜூலை 11 Daily telegraph.*

**1983** ஜூலை இனப்படு கொலை தமிழ் – சிங்கள தேசங்களுக் கிடையேயான பிணக்கை உலக அரங்கிற்கு வெளிச்சம் போட்டுக் காட்டிய நிகழ்வு ஆகும். அரச ஆதர வுடன் சிங்கள இனவாத இயந்திரம் நடாத்தி முடித்த இப் படுகொலை சிங்கள தேசத்துடன் தமிழ்த் தேசம் சேர்ந்து வாழலாம் என்ற அபிப் பிராயங்களின் மேல் சிங்கள தேசம் தொடுத்த வினா ஆகும்.

15 ஆண்டுகளின் பின் உலகை, சிங்கள தேசத்தின் மற்றுமொரு இனப்படுகொலை உலுக்கியிருக்கி றது. மௌனமாக கொலை செய்யப் பட்டு யாழ் குடாநாட்டில் புதைக் கப்பட்ட பல நூறு தமிழர்களின் விவகாரம் இன்று பகிரங்கமாக தொடங்கிவிட்டன. கிருஷாந்தி என்ற தமிழ் மாணவி மீது நடாத்தப்பட்ட சந்திரிகா அரசின் கொடூரத்தை உலக சமூகத்திற்கு கொண்டு சென்று தமிழர் கள் போராடியதன் விளைவு, சிங்கள அரச இயந்திரத்தை மற்றுமொரு முனையில் உடைக்கத் தொடங்கி யுள்ளது.

இந்த இரு வேறுபட்ட காலகட் டத்து இனப்படுகொலை நடவடிக் கைகளானது, தமிழர்களின் மீதான சிங்கள இனவெறி குரோதம் கால ஓட்டத்தினூடு மாற்றம் காணாமல் ஆழம் பெற்றிருப்பதை காட்டுகின் றது. 15 வருட காலத்து இடை வெளியில் போர் பாரிய அழிவினை சிங்கள இனவெறி ஆதிக்கத்திற்கு கொடுத்துள்ளது. சிங்களத்தின் பொரு ளாதார அடித்தளம் ஆட்டம் கண் டுள்ளது; சிங்கள சமூக பண்பாட்டு வாழ்வின் சமூக நிலைமை சிதறடிக் கப்பட்டுள்ளது; அதனது அரசியல் வாழ்வு கறைபடிந்த – போரை அதி கார லாபங்களுக்காக தொடரும் இனவெறி தலைமைகளிடம் அகப் பட்டுள்ளது. தொடரும் பாசிசத்தின் அடிப்படை நியதி சிங்கள தேசத்தின் தமிழின எதிர்ப்பை அணையாது பாதுகாக்கின்றது.



* * *

செம்மணி புதைகுழிகள் விடய மானது யாழ் குடாநாட்டில் சிறீ லங்கா புரிந்துள்ள போர்க் குற்றத் திற்கு ஆதாரமாகும்.

**உலக இயக்கப் போக்கில் போர்க் குற்றங்களையும், இனப் படுகொலைகளையும் தண்டிக்கும் அதிகாரம் நசுக்கப்படும் – போராடும் மக்கள் கரங்களில் கொடுக்கப்படவில்லை**

தற்போது சர்வதேச நீதி மன்றத் தில் இடம்பெறும் சேர்பியர்களுக்கு எதிராக பொஸ்னியா தொடுத்துள்ள இனப்படுகொலை குற்றங்களுக்கான ஆதாரங்களாக சேர்பியர்களின் பிகக் (Bihac) மற்றும் பகுதிகளில் இரகசியமாக உருவாக்கிய புதைகுழி கள் காட்டப்படுகின்றன. மறுபுறம் றுவண்டாவில் இனப்படுகொலை யில் ஈடுபட்டவர்களை புதிய டுட்சி இன மக்களின் அரசு நீதி விசார ணைகளின் பின் பகிரங்கமாக சுட்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டுக்கொன்று வருகின்றது. இத் தண்டனைகளானது நீதி வழங்கப்படுகிறது என்பதை பகிரங்கமாக வெளிக்காட்டும் நடவடிக்கையென ருவண்டாவின் நீதி அமைச்சர் வர்ணிக்கிறார்.

செம்மணி புதைகுழிகள் இதனை ஒத்த நடவடிக்கையாகும். இடதுசாரி சிங்கள நாளேடான 'யுக்திய' இது தொடர்பாக வெளியிட்ட அதிர்ச்சியூட்டும் தகவலில் இனப் படுகொலைகள் உயர்தலைவர்களினதும், தளபதிகளினதும் உத்தரவின் பெயரில் இடம்பெற்றுள்ளமை தெளிவாகின்றது.

சிறீலங்கா முப்படைகளினதும் கூட்டுத் தளபதி ஜனாதிபதி சந்திரிகா, பாதுகாப்பு இணை அமைச்சர் ஜெனரல் ரத்வத்த ஆகியோர் முதல் யாழ் குடாநாட்டு இராணுவத்தை தலைமை தாங்கிய தளபதிகள் வரை இவ்வாறு இனம் காணப்பட்டுள்ள நிரூபிக்கத்தக்க போர்க் குற்றங்களைப் புரிந்த குற்றவாளிகளாகியுள்ளனர்.

★ ★ ★

உலக இயக்கப் போக்கில் போர்க் குற்றங்களையும், இனப் படுகொலைகளையும் தண்டிக்கும் அதிகாரம் நசுக்கப்படும் – போராடும் மக்கள் கரங்களில் கொடுக்கப்படவில்லை. சர்வதேச நீதி நெறிமுறைகளும் நாடுகளுக்கிடையேயான உறவுகளுமே இனப்படுகொலைகளை தண்டிக்கும் விடயத்தில் 'தீர்மானிக்கும்' அதிகாரத்தை கொண்டுள்ளன.

ருவண்டா இனப்படுகொலைகள் இடம்பெற்றபோது இவ் உலக நீதி அமைப்பும் – மன்றங்களும் அமைதி காத்தன. தத்தமது நலன்களுக்கேற்ற இராஜதந்திர மொழிகளை சர்வதேச சக்திகள் பரிமாறிக் கொண்டன. ஈற்றில் இனப் படுகொலைகளை புரிந்த சக்திகள் தோற்கடிக்கப்பட்டு நசுக்கப்பட்ட மக்களுக்காக அதிகாரத்தை கைகளில் எடுத்தபோது "ருவண்டா இனப்படுகொலையில் தான் சரியாக நடக்கவில்லை" என அமெரிக்கா ஜனாதிபதி கிளிண்டன் மன்னிப்புக் கேட்கின்றார்.

பொஸ்னியாவில் சேர்பிய அரசு இனப் படுகொலைகளை அரங்கேற்றிய போது அதற்கெதிரான சர்வதேச சக்திகளின் நடவடிக்கை காத்திரமானதாக இருக்கவில்லை. பல்லாயிரம் படுகொலைகளும் – இழப்புகளும் ஏற்படுத்தப்பட்ட பின்னரே பொஸ்னியா விடுவிக்கப்பட்டது. இன்று பொஸ்னிய அரசு சர்வதேச நீதிமன்றத்தில் இனப்படுகொலையில் ஈடுபட்ட சேர்பியர்களை குற்றவாளிகளாக முன்நிறுத்தியுள்ளது.



ஜூலை 83 பேரழிவுகள், தமிழ் மக்களின் அனைத்துப் பிரிவினரையும் ஒரே இலட்சியத்தின் கீழ் ஒன்றிணைத்துவிட்டன.

– தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்



இவ்விரு இனப்படுகொலைகளையும் ஒத்த தமிழர்கள் மீதான சிங்கள தேசத்தின் படுகொலைகள் சர்வதேச நிகழ்ச்சித் திட்டத்தில் இன்று உரிய இடம் பெறவில்லை. சிங்கள அரசின் திட்டமிடப்பட்ட பிரச்சார யுக்திகளும் பனிப்போருக்குப் பிற்பட்ட காலத்தில் தென்னாசியப் பிராந்தியத்தில் இழந்துவிட்ட கேந்திர முக்கியத்துவம் இவ் சர்வதேச மந்தப் போக்கிற்கு காரணங்களாகும்.


ஆயினும் இனப் படுகொலைக் குற்றவாளிகள் எதிர்காலத்தில் தண்டிக்கப்பட்டே ஆகவேண்டும் என்ற இயற்கையான விதி இங்கும் பொருத்தமாயுள்ளது. 1983– ஜூலைப் படுகொலை முதல் செம்மணி புதைகுழிகள் வரை பல்லாயிரம் தமிழர்களை கொன்றொழித்த சிங்கள இனவாத குற்றவாளிகளை எமது வரலாறு பதிவுசெய்து வைத்துள்ளது. நாளை நாம் பலம் பெற்று எம் தேசம் விடுவிக்கப்படும்போது சர்வதேச நெறிமுறை எமது விண்ணப்பத்தை அங்கீகரிக்கும். போர்க் குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டுமாயின் நாம் விடுதலைக்கான எமது போரை வெல்ல வேண்டும்.

**நாதன்**



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கரும்புலிகள் உருவாக்கத்தின் பின்னணி

கரும்புலிகள் என்ற வார்த்தைப் பிரயோகம் உலகளாவிய ரீதியில் ஒவ்வொருவராலும் பேசப்படும் சக்திமிக்கதொரு சொற்பதமாகி விட்டது.

கரும்புலித் தாக்குதலை நடாத்தும் விடுதலைப் புலி உறுப்பினரின் பிரமிப்பூட்டும் தியாகங்கள், உலக சமுதாயத்தை அதிர்ச்சியிலும் வியப்பிலும் ஆழ்த்தி வருகின்றன. மனிதன் பிறந்ததே வாழ்வதற்காகத் தான். அப்படியானால் இறப்பதற்காகவே களம் புகும் இக் கரும்புலிகள் யார்? இவர்களது உருவாக்கத்தின் வரலாற்றுப் பின்னணி என்ன?

ஈடு இணையற்ற இவர்களது ஈகமும் மன ஓர்மமும் சமுதாயத்தில் ஏற்படுத்தும் தாக்கம் எத்தகையது என்பன போன்ற கேள்விகளுக்கான விடைகளானது மனித ஆய்வாளர்கள் மத்தியில் ஆராய்ச்சிக்குரியனவாகிவிட்டன. இன்று உலகெங்கும் உள்ள அடக்குமுறையாளர்கள் தங்களுக்குள் கைகோர்த்தபடி சுவாசிக்க நினைக்கும் மக்களை மிருகத்தனமாக அடக்கி ஒடுக்க முனைகின்றனர். இவர்களிடம் ஆள்–ஆயுத பலமுண்டு. ஆட்சி அதிகாரமுண்டு. தொழில் நுட்ப வலுவுண்டு. இவற்றைத் தேவைப்படும் இடங்களுக்கு தேவைப்படும் நேரத்தில் கொடுத்து மாறி போராட்ட சக்திகளைப் பலமிழக்கச் செய்து தங்களது அடக்குமுறைகளை வலுப்படுத்துகின்றனர். இந்த நவீன அடக்கு முறையாளர்களுக்கு ஈடுகொடுக்கக்கூடிய அளவிற்கு ஆள்–ஆயுத–தொழில்நுட்பத் திறன்களை போராட்ட சக்திகள் கொண்டிருப்பதில்லை.

மிகக் குறைந்த அளவில் இவர்களுக்கு இருக்கும் போராட்டத் திறன்களிலிருந்து மிக உச்சப் பயன்களைப் பெற்றால் ஒழிய போராட்டச் சக்கரத்தை ஓர் எல்லைக்கு அப்பால் நகர்த்த முடியாது.

எனவே ஒடுக்குமுறையாளர்களின் நாடியை ஒடுங்கச் செய்யும் அளவுக்கு பல்வேறு திசைகளிலிருந்தும் வெவ்வேறு வடிவங்களில் போர்ச் சக்கரம் நகர்த்தப்பட வேண்டும்.

இந்தப் போர் வடிவங்களுக்குள்ளேயே உயர்ந்ததும் உன்னதமானதுமான விடுதலைப் புலிகளின் போர் வடிவம்தான் கரும்புலித் தாக்குதல் ஆகும்.

தன்னை இழந்து எதிரிகளில் பலரை அல்லது எதிரியின் பலம்மிக்கதொரு இலக்கை அழிக்கக் கூடிய படையணி ஒன்றை அமைக்கும் யோசனையை தமிழீழத் தேசியத் தலைவர் திரு வே. பிரபாகரன் அவர்கள் ஆரம்பத்திலிருந்தே கொண்டிருந்தார்.

அந்த எண்ணக் கருவைச் செயற்படுத்தக் கூடிய ஆற்றலை விடுதலைப்புலி வீரர்கள் மத்தியில் சிறுகச் சிறுக ஏற்படுத்திக் கொண்டு வந்தார். பின்னர் 'ஒப்பரேசன் லிபறேசன்' என்ற பெயருடைய இராணுவ நடவடிக்கை மூலம் வடமராட்சிப் பகுதியை ஆக்கிரமித்த சிங்களப் படைகள் வெற்றிக் களிப்பில் ஆழ்ந்தன. இதன் மூலம் சிங்கள இராணுவத்திற்கு உளவியல் ரீதியான போரிடும் ஆற்றல் திடீரெனக் கூடியது. சிறீலங்கா அரசும் விடுதலைப் புலிகளை அழித்துவிடலாம் எனத் திமிருடன் சிந்திக்கத் தொடங்கியது.

இந்தச் சூழ்நிலைகளில்தான் ஒரு கரும்புலித் தாக்குதலை நடத்த தமிழீழத் தேசியத் தலைவர் திரு வே.பிரபாகரன் அவர்கள் முடிவெடுத்து அதற்கான ஆயத்தங்களைச் செய்தார்.

1987–ம் ஆண்டு ஜூலை மாதம் 5–ம் திகதி நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் அமைக்கப்பட்டிருந்த சிங்கள இராணுவ முகாமிற்குள் முதலாவது கரும்புலி வீரன் புகுந்து அம்முகாமைச் சின்னாபின்னமாக்கினான்.

சிங்கள அரசையும் அதன் இராணுவ இயந்திரத்தையும் கிலிகொள்ளச் செய்த அந்த



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கரும்புலிகள்

முதலாவது கரும்புலித் தாக்குதலை கரும்புலி கப்டன்.மில்லர் செய்து முடித்தான். அன்றி லிருந்து இன்றுவரை பல கரும்புலித் தாக்கு தல்கள் நிகழ்த்தப்பட்டுவிட்டன. அதில் பல கரும்புலிகள் வீரச்சாவு அடைந்துள்ளனர்.

ஒவ்வொரு விடுதலைப்புலி வீரனும், வீராங்கனையும் சாவைச் சந்திக்கத் தயா ரான நிலையில்தான் இருக்கிறார்கள். ஆனால் தங்களுடைய சாவு எப்போது வரும் என்பது அவர்களுக்குத் தெரியாது.

ஆனால் கரும்புலிகளின் நிலை வேறுபட் டது. களம் புகுவதற்குப் பல நாட்களின் முன்பே தங்களது சாவைத் தெரிந்து கொண்டுவிடுகிறார்கள். அடுத்த நிமிடத்தில் சாகப் போகிறேன் என்ற உண்மையைப் பூரணமாகத் தெரிந்து கொண்டுதான் கரும்புலிகள் வெடிமருந்தைத் தங்களுடன் கொண்டு செல்கிறார்கள்.

இராணுவ முகாமிற்குள் இருக்கும் பல நூறு எதிரிகளின் கரங்களிலிருந்து முழங்கிக் கொண்டிருக்கும் துப்பாக்கிகளை கருத்தில் எடுக்காது உடைந்து நொருங்கிப் போய்க் கிடைக்கும் பாதை வழியே சீராக—நிதானமாக —வெடிமருந்து வண்டியை ஓட்டிச் சென்று எதிரி முகாமின் இதயத்திற்குள்ளே புகுந்து தன்னையும் சேர்த்து வெடிக்கச் செய்வது என்பது சாதாரண விடயமல்ல.

இயல்பாகவே அச்சமூட்டும் அலைகளைக் கொண்ட அகண்ட சமுத்திரத்திற்குள் நடு இரவில் எதிரியின் நவீன காவற் கருவிகளையும் புத்திசாதுரியமாக மீறி வெடிமருந்துப் படகு டன் உட்புகுந்து எதிரியின் கப்பலை நெருங்கி முன்னரே தீர்மானிக்கப்பட்ட இலக்கை இனங் காண்பதற்காக ஒரு முறை கப்பலைச் சுற்றி வந்து குறித்த இலக்கின் மீது மோதி வெடிமருந்துப் படகுடன் சேர்ந்து வெடித்துச் சிதற ஒரு மனித மனம் உடன்படாது.



இவைகள் ஒரு சாதாரண வீர னால் செய்யப்பட முடியாதவை. இதைச் செய்வதற்கென்றொரு ஆத் மீக பலம் தேவை. தன்னைத் தற் கொடை செய்யத் தயாரான மனோதிடம் தேவை. தனது இறுதி நேரத்திலும்கூட பதற்ற மின்றி உறுதியுடன் குறி பிசகாது எதிரியைத் தேடி ஓடும் வீரம் தேவை. விரக்தி காரணமாகவோ முட்டாள் தனமாகவோ தன் னை அழித்துக் கொள்ள முனை யும் தற்கொலை முயற்சியைப் போலல்ல இது. அல்லது எதிரி யின் கண்ணோட்டத்தின்படி கொடூரம் மிக்கதும் மானிட இனமாக இல்லாததுமான ஒரு பூதமல்ல இது. அடி மைப்பட்டுக் கிடக்கும் ஒரு தேசிய இயக்க சக்திக்கு உந்துவிசையாக விளங்கும் உயரிய போர் வடிவம்தான் எங்களது கரும்புலிகள்.

உலகின் எந்த ஆயுதங்களாலும் வெற்றி கொள்ளப்பட முடியாததும் உலகின் எந்தத் தொழில் நுட்பத்தாலும் தடுக்க முடியாததும் உலகின் எந்த அரசு இயந்திரத்தாலும் அடக்க முடியாததும்தான் எங்களது கரும்புலிகளின் மனோபலம்.

இந்த மனோபலம் ஒரு வீர உணர்வை வெளிப்படுத்தும் ஒரு குறியீடு மட்டுமல்ல எமது சமுதாய எண்ண ஓட்டத்தில் பிரளயத்தை ஏற்படுத்தப் போகும் சக்தி கொண்ட ஒரு மாபெரும் அரசியல் வடிவமும் ஆகும்.

ஒவ்வொரு கரும்புலியும் தனது உயிரைப் போக்கிக் கொள்ளும் போது நிகழும் பூகம்பம் தமிழீழ விடுதலைப் போராட்டச் சக்கரத்தை முன்னோக்கித் தள்ளி விடுவதுடன் வீரம்மிக்க, யாருக்கும் அடிபணியாத, அடக்க நினைப்ப வரை நடுங்க வைக்கும் ஆற்றல் கொண்ட தமிழ்ச் சமூகத்திற்குத் தேவையான உணர் வையும் ஊட்டிவிடுகின்றது.

தேச பக்தியையும் வீர உணர்வையும் அடித் தளமாகக் கொண்ட இத்தகைய மனோபலம் எமது மக்களிடம் இருக்குமாக இருந்தால் உலகில் எவராலும் எம்மை எதுவும் செய்ய முடியாததுடன் சுதந்திரத்துடனும் கௌரவத் துடனும் வாழும் பலத்தையும் நாம் பெற்றுக் கொள்ள முடியும்.

இன்று பல நூற்றுக்கணக்கான விடுதலைப் புலி வீரர்கள் தங்களைக் கரும்புலி அணியில் இணைத்துக் கொண்டிருக்கின்றனர்.

ஒவ்வொரு முறையும் கரும்புலித் தாக்கு தலுக்கான திட்டம் தீட்டப்படும் போது தன்னைத்தானே தேர்ந்தெடுக்க வேண்டு மென்று ஒவ்வொரு வீரனும் ஒவ்வொரு வீராங்கனையும் முண்டியடிக்கின்றார்கள்.

அலையலையாக கரும்புலித் தாக்குதலுக் குத் தயாராகும் இந்தத் தியாகச் செயலை உலகில் எங்குமே காண முடியாது.

இது உலக அதிசயங்களில் புதியதொன்றா கும்.

களம் புகும் கரும்புலிகளின் பிரமிப்பூட்டும் வீரச் சாதனைகள் சிங்கள ஆளும் வர்க்கத்திற்கு கிலியை உண்டுபண்ணுகின்ற அதே சமயம் அந்த உன்னதமான அர்ப்பண உணர்வு ஏற்படுத்தும் சமூகத் தாக்கம் தமிழீழக் குடிமக்களின் மனதிலிருக்கும் சுதந்திர ஒலியை இன்னும் வளர்த்துச் செல்லும் என்பது உறுதி.

❋



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## பாதையால் பிறக்கும் நாடு!

# கரும்புலிகள் வரையும் பாதை

தமிழீழ விடுதலைப் போரில் கரும்புலிகள் அணியின் செயற்பாடுகள் பற்றி பலர் பல்வேறு கோணங்களில் நோக்கினாலும்கூட, போரும் அதற்குப் பின்னணியாக உள்ள நடைமுறை உலகம் அடைந்து கொண்டிருக்கும் மாறுதலை உற்று நோக்குவோர் கரும்புலிகள் பற்றிய தமது பார்வையிலும் பல புதிய பெறுமானங்களை அவதானிக்க வேண்டியது தவிர்க்கமுடியாததாகிறது. பதினொரு ஆண்டுகளின் முன் கப்டன் மில்லரின் தாக்குதலோடு தன்னை வெளிக்காட்டிக் கொண்ட கரும்புலிகள் அணி அதற்குப் பின் ஒருவர் பின் ஒருவராக வரும் நேர் கோட்டு வடிவில் தனது வளர்ச்சியை அமைத்துக்கொள்ளவில்லை. பெருகும் வீரர்களின் எண்ணிக்கையும், செயற்பாடும் ஓர் 'பிரமிட்' வடிவிலேயே விரிவடைந்து செல்லக் காண்கிறோம்.

எவ்வளவு நீரூற்றினாலும், பசளையிட்டாலும் சில மரங்களால் பூக்கவோ காய்க்கவோ முடிவதில்லை. ஆனால் நீரும் பசளையுமற்ற வரண்ட நிலங்களிலோ சில மரங்கள் பூத்துக் குலுங்குவதுண்டு. இந்த ஒப்புவமையை சிறீலங்கா இராணுவத்திற்கும்; விடுதலைப் புலிகளுக்குமாகப் பொருத்திப் பார்த்தால் எவ்வளவோ பண நீர் ஊற்றி, ஆயுதப் பசளையிட்டாலும் போரின் வெற்றியை தீர்மானிக்கவல்ல கரும்புலிகள் போன்ற உறுதியான கொள்கையே உயிர்நாடியாகக் கொண்ட படையணியொன்றை தருவதற்குரிய தகுதியை சிறீலங்கா இராணுவம் அடையவில்லை. அதேவேளை பொருளாதார வசதிகளற்ற உயர்தர ஆயுத தளபாடங்களின் பற்றாக்குறையோடு நின்று போராடும் விடுதலைப் புலிகள் அணியில் கரும்புலிகள் அணி உருவானது எப்படியென்பதே இன்றும் உலகத்தின் கவனத்தைக் கவர்வதாயிருக்கிறது. தமக்குக் கிடைத்த உச்சக்கட்டப் பொருளாதார வளங்களால் வல்லரசுகள் உலகையே அழிக்கும் ஆயுதங்களைக் கண்டுபிடித்தனர். ஆனால் வல்லரசுகளே அதிசயப்படும்படியாக அவர்களால் உருவாக்கமுடியாத படையணியாக தமிழீழத்தில் விளைந்தது கரும்புலிகள் அணி. இந்த உவமைகளைப் பின்நிறுத்தி அனைவரும் ஓர் உண்மையை விளங்கிக் கொள்வது அவசியம். இன்று சில நாடுகள் சிறீலங்கா அரசிற்கு ஆயுதங்களை வழங்கியும், நேரடியாகப் பயிற்சியுமளித்தும் வருகின்றன. இது அவர்களின் தீர்வுப் பொதியிலும், சமாதானத்திற்கான போரிலும் மயங்கியல்ல.



அணுகுண்டை வைத்திருக்கும் நாடுகள் தாம் சரணடையும் நிலை வந்தால் தம்மிடமிருக்கும் அணுகுண்டுகளைப் பாவனைப்படுத்தாது தோல்வியை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. எனவேதான் ஹிட்லரைப் போல ஓர் இறுதித்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தோல்வியைத் தவிர்க்க முயலும் நாடுகள் அணுகுண்டைத் தயாரிக்க முயல்கின்றன. இதுவே மற்றவரிடம் இல்லாத அதி உயர் பலத்தை தேடும் அறிவியலாகும். இதுபோல அணுகுண்டுகளற்ற நாடுகளின் போர்க்களங்களை அனுமானித்து அதில் பயன்படும் அதிஉயர் பலம் எதுவென்று சீர்தூக்கினால் கரும்புலிகள் படையணியைத் தவிர்த்து வேறு ஓர் படைபலத்தை சுட்டிக் காட்டுவது



இயலாத காரியம். இது ஓர் உண்மை. இதை விளங்கிக் கொண்டமையால்தான் சிறீலங்கா இராணுவ தளபதிகளே யுத்தம் பிரச்சினைக்குத் தீர்வாகாது என்பதை ஒப்புக் கொள்கிறார்கள். உள்ளபடி சிந்தித்தால் எப்படியாவது இப்போரை நிறுத்த வேண்டும்; நியாயமான



தீர்வைக்காணவேண்டும்; இது அரசியலுக்கும், இனவாதத்திற்கும் அப்பாற்பட்ட இன்னோர் காரியம் என்ற உண்மை தெரியவரும். ஆனால் இதை வெளியே கூறவோ, செயற்படுத்தவோ முடியாத நிலையில் உள்ள சிறீலங்கா அரசிற்கு இந்த உண்மை தொண்டைக் குழிக்குள் பெரும் விக்கலாக நிற்கிறது. ஜெயசிக்குறு படையணி தொண்டைக் குழிக்குள் தேங்கி நிற்பது மேற்சொன்ன விக்கலின் இன்னொரு நடைமுறை விளக்கமே. இந்தத் தேக்கத்திற்காக தொடர்ந்து உயிராயுதத்தைப் பயன்படுத்தி வருபவர்கள் கரும்புலிகள்.

சிறீலங்காவின் பெரும் படைகளுக்கும் கவச வாகனங்களுக்கும் யுத்தம் செய்ய சமதரை வாய்ப்பானது. ஆனால், காடும் கடலும் இத்தகைய படையணிக்கு சாதகமாக அமையாது. எதிர்விளைவுகளையே உண்டுபண்ணும். இது வரலாற்றின் அனுபவம். உலர்வலயக் காடுகளையும் அவற்றின் குணாதிசயங்களையும் கற்று, சிறு சிறு படைப்பிரிவுகளாகப் பிரிந்து போரிடும் புலிகளை தெற்கேயுள்ள ஈரவலயக் காடுகளில் கூட பயிற்சிபெற்றிராத சிங்கள இராணுவம் எதிர்ப்பது சாதாரண பணியல்ல. ஏனெனில் உலகில் இதுவரை நடைபெற்ற நாடு பிடிக்கும் போர்களில் பலர் வெற்றி பெற்றிருக்கிறார்கள். அதேபோல பாதை திறக்கும் போரில் ஈடுபட்டு முற்றாக அழிந்து போனதற்கும் உலகில் பல அரசுகள் முன்னுதாரணமாக இருந்துள்ளன. உலகத்தின் பெரும் பகுதியைத் தனது காலடிக்குள் கொண்டுவந்த ஹிட்லர் வரலாற்றில் அழிவைத் தேடிக் கொண்ட இடம்; போலந்திற்கூடாக ஓர் பாதையைத் திறக்க முயன்றதிலிருந்துதான் என்பதை யாரும் மறந்துவிடல் முடியாது. பாதைகளைத் தகர்த்தும் பகைவர் வரும்போது பாலத்தை வெட்டியும் தேசங்களைக் காத்த வீரர் பலர். அத்தகைய வீரர்களால் உருவான நாடுகளும் பல. பாதை



நான் மரணத்தை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்கிறேன்; அதனால் எம் மக்கள் விடுதலை அடைவார்கள் என்பதால்.

– கரும்புலி கப்டன் மில்லர்.



யிலிருந்து பிறந்த நாடுகளின் வரிசையில் தமிழீழமும் ஒன்றாகும் என்றளவிற்கு நிலைமைகள் கனிந்து வருகின்றன. அந்தப் பாதைப் போரில் முன்னணியில் நிற்கும் கரும்புலிகள் தமிழீழ வரலாற்றில் மேலும் ஒரு தடவை புதிதாகப் பதிவு பெறுவார்கள் என்பதில் ஐயமில்லை.

_ கி.செ. துரை.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஜனாதிபதித் தேர்தலா? மாகாணசபைத் தேர்தலா?

## கால் போனால் காரியமில்லை. தலை போனால் எப்படி?

இராணுவம் யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டிருக்கப் போவதில்லை. சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தி தமிழர்கள் தங்களை நிர்வகிப்பதை உறுதி செய்வதே அரசின் நோக்கம். இது, சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா, யாழ்ப்பாணத்தை சிங்கள இராணுவம் ஆக்கிரமித்து கொடியேற்றி கொண்டாட்டம் நடத்திய பின், 95–ம் ஆண்டு டிசம்பர் மாதம் அமெரிக்க ரைம் சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தது.

அதே சந்திரிகா, பின்னர் 96–ம் ஆண்டு பங்குனி மாதம் பத்திரிகைப் பேட்டியொன்றில், **யாழ்ப்பாணத்தில் இராணுவ நிர்வாகமே இல்லை. அங்கே இராணுவம் ஆட்சிசெய்யவுமில்லை. நாம் அங்கே ஒரு நிர்வாகத்தை ஏற்படுத்தியிருக்கின்றோம். உணவு விநியோகம், மருத்துவப் பராமரிப்பு, பாடசாலைகள், வீதிப் புனரமைப்பு, மின்சார விநியோகம் எல்லாமே சிவிலியன்களாலேயே பொறுப்பேற்கப்பட்டுள்ளன** என்றார்.

இப்படி அவர் சொல்லி இரண்டு வருடங்கள் கடந்துவிட்டன. இன்றும், யாழ் குடாநாட்டின் நிலைமை என்ன? சிவில் நிர்வாகமா கொடி கட்டிப் பறக்கின்றது? கிராமம் விட்டுக் கிராமம் செல்லவும், உறவினர் வீட்டில் சென்று தங்கவும் இராணுவம் தடைவிதிக்கின்றது. மாலையானதும் ஊரடங்குச் சட்டம் அறிவிக்கின்றது. மீனவர்கள் தொழிலுக்குச் செல்லும் நேரத்தையும் காலத்தையும், கடலுக்குள் வலை விரிக்கும் தூரத்தையும் அதுவே தீர்மானிக்கின்றது. இதுவா சிவில் நிர்வாகம்?

மாணவர்களின் கல்விக்கூடங்களை, ஆலயங்களை, பொதுக்கட்டிடங்களை, மக்களின் வீடுகளை இராணுவ மையங்களாக்கி, தனது இராணுவ ஆட்சியின் பிடியை, இராணுவ வலையை எல்லாப் பகுதிகளிலும் விஸ்தரித்து விரித்து நிற்கின்றது சிங்களம்.

> கிராமம் விட்டுக் கிராமம் செல்லவும், உறவினர் வீட்டில் சென்று தங்கவும் இராணுவம் தடைவிதிக்கின்றது. மாலையானதும் ஊரடங்குச் சட்டம் அறிவிக்கின்றது. மீனவர்கள் தொழிலுக்குச் செல்லும் நேரத்தையும் காலத்தையும், கடலுக்குள் வலைவிரிக்கும் தூரத்தையும் அதுவே தீர்மானிக்கின்றது. இதுவா சிவில் நிர்வாகம்?

எந்த வீதியில் மக்கள் பயணம் செய்யலாம் என இராணுவம்தான் தீர்மானிக்கின்றது. தீவுப்பகுதிகளுக்கு மக்கள் செல்ல தடைவிதிக்கப்பட்டுள்ளது. மண்டைதீவு மக்கள் ஏனைய பகுதிகளில் இருந்து முற்றாக துண்டிக்கப்பட்டுள்ளனர். அங்கு யாரும் செல்லவோ, அங்கிருந்து யாரும் வெளிச்செல்லவோ முடியாத திறந்த வெளிச் சிறையில் மண்டைதீவு மக்கள் அடைத்துவைக்கப்பட்டுள்ளனர். புங்குடுதீவுக்கூடாக குறிகட்டுவான் செல்ல முடியாதென தடை, வடமராட்சியில் இருந்து பிற பகுதிக்குச் செல்ல தடை, பிறபகுதியில் இருந்து வடமராட்சி வந்து தங்கிச் செல்ல தடை, வடமராட்சி கிழக்கிற்குச் செல்ல பெருந்தடை, நயினாதீவுக்குச் சுதந்திரமாகச் செல்ல பக்தர்களுக்குத் தடை, இராணுவத்தின் விசேட அடையாளஅட்டை பெற்றவர்களே, நயினாதீவு சென்று நயினை நாகபூசனி அம்மனைத் தரிசிக்கமுடியும். அம்மனுக்கு அபிஷேகச் சாமான்கள் எவை எவை கொண்டு செல்லமுடியும் என இராணுவமே தீர்மானிக்கும். அபிஷேகச் சாமான்களை தரையில் கொட்டி விரித்து சோதனை செய்யும் இராணுவமே, எவை எவை அம்மனின் அபிஷேகப் பொருட்கள் எனப் பட்டியலிடுகிறது. மற்றயவை அப்புறப்படுத்தப்படுகின்றன.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இப்படியாக குடாநாட்டில் இராணுவத்தினரின் தடை தடை தடை என்ற குரல்களே எங்கும் ஒலிக்கின்றன. இராணுவத்தின் தான்தோன்றித்தனமான சட்டங்களே குடாநாட்டைக் கட்டிப்போட்டு வைத்திருக்கின்றது.

மாணவர்களின் கல்வி பல இடங்களில் முழுமையாகப் பாதிப்படைந்துள்ளன. பாடசாலைகளில் இராணுவம் குந்தியிருப்பதால் இப்பிரச்சினை. இப்படியாக குடாநாடு, சிங்கள இராணுவப் பிடியில் சிக்கித்திணறிக்கொண்டிருக்கின்றது.

புதிய புதிய இராணுவச் சட்டங்களை சிங்கள இராணுவம் இஸ்டத்திற்கு அறிவிக்கின்றது. அதனை கடும்பிடியாய் நடைமுறைப்படுத்துகின்றது. மக்களை கொடுமையாக வருத்துகின்றது. இதுதான் குடாநாட்டு நிலைமை.

ஆனால், உலகத்தை ஏய்க்க மேற்கொள்ளப்பட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் கடந்த ஜனவரியில் நடத்தப்பட்டன. நூறோ இரு நூறோ வாக்குகளைப் பெற்றவர்கள் உறுப்பினர்களாய்த் தெரிவு செய்யப்பட்டனர். ஆனால், சிவில் நிர்வாகம் மட்டும் தோன்றவில்லை. சிவில் நிர்வாகத்தை முழுமையாக அமுல்படுத்தவென அம்மையாரால் அறிவிக்கப்பட்ட இத்தேர்தலில் தேர்வானவர்கள் வெறும் பொம்மைகளே. இராணுவ நிர்வாகமே கொடிகட்டிப் பறக்கின்றது.

ஆனால், இன்று குடாநாட்டில், சிங்களத்தின் இராணுவ நிர்வாகத்தை காக்கும் இந்த போலி சிவில் நிர்வாகப் போர்வை மெல்லமெல்ல விலக ஆரம்பித்துள்ளது. நீதிமன்றங்கள் தமது செயற்பாடுகளை நிறுத்தியுள்ளன. உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் பலர் இராஜினாமாச் செய்துள்ளனர். வலிகாமம் வடக்கு உள்ளூராட்சி மன்றம், இயல்புநிலை வரும்வரை நிர்வாகப்பணி ஆற்றுவதில்லை என அறிவித்திருக்கின்றது. அண்மையில், இராஜினாமாச் செய்த, யாழ் துணை மேயர், இராணுவ நிர்வாகமே கோலோச்சும் இடத்தில் நமது நிர்வாகத்துக்கு எங்கே வேலை எனக் கேள்வி எழுப்பியுள்ளார்.

அண்மையில், யாழ்ப்பாணம் நாவலர் மண்டபத்தில், இந்தியத் தூதரக அதிகாரிகள் கலந்துகொண்ட கலந்துரையாடலில், யாழ்ப்பாண மாநகரசபை உறுப்பினர்கள், எல்லாக்கட்டிடங்களையும், எல்லா வீதிகளையும் இராணுவமே கட்டுப்பாட்டில் வைத்திருப்பதால், தம்மால் எதுவுமே செய்யமுடியாது என, வருத்தம் தெரிவித்திருந்தனர். அங்கு, யாழ்ப்பாணத்தை எழில்மிகு பிரதேசமாக புனரமைக்கப்போவதாக பேசித்திரிந்த, அண்மையில் சுட்டுக் கொல்லப்பட்ட யாழ் மேயர் சரோஜினி யோகேஸ்வரனும் பிரசன்னமாகியிருந்தார்.

அப்படியானால், சிறீலங்காவின் சிவில் நிர்வாகம் என்ற கோசத்திற்கும், ஜனநாயகமீட்பு என்ற பசப்பலுக்கும் பலியாகிக் கொண்டு, ஏன் இன்னமும் சிறீலங்காவின் இன விரோதச் செயல்களுக்கு, இன அழிப்புக்கொள்கைகளுக்கு இன்னும் தமிழர்கள் துணைபுரிகின்றனர். இதனைப் புரிந்துகொள்ளாமலா இவர்கள் தேர்தல்களில் போட்டியிட்டு, இடையிட்டு ஞானோதயம் பெற்று இராஜினாமாச் செய்கின்றனர். அல்லது இப்படியாக எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். என்ற கேள்விகள், எல்லாவற்றையும் அவதானமாக நுணிகிப்பார்க்கும் பொதுமக்களுக்கு ஏற்படுவதில்லை.

போராட்ட காலத்தில் இந்த வரலாற்றுப் பீடைகள் உருவாவதும், பின் மறைந்துபோவதும் அழிந்துபோவதும் கால இயக்கத்தில் நடப்பவையே என்பது மக்களுக்கு நன்கு தெரிந்ததுதான்.



யாழ் நகரில் வீதியெங்கும் சிறீலங்கா இராணுவத்தினர்

**ஜெயசிக்குறுவின் வெற்றி தோல்விகளை வைத்து, இறுதிநேரத்தில் இம்மாகாணசபைத் தேர்தல் பிற்போடப்படலாம். இதற்காகவே, பல ஜனநாயகவிரோதச் சட்டங்கள், தனி மனித அதிகாரங்கள், சந்திரிகாவிற்கு நிரம்பவே கைகொடுக்கும்.**

சிறீலங்காவின் சகல இன அழிப்பு வேலைகளுக்கும் துணைபோய்க் கொண்டு, தமிழ் மக்களை ஏய்த்து தமது நலன்களைப் பாதுகாப்பதாக இவர்கள் கருதிக்கொள்கின்றனர். ஆனால், இவர்கள்தான் ஏமாற்றப் படுகின்றனர். சிங்களத்தின் அரசியல் விளையாட்டிற்குப் பலியாகின்றனர் என்பதே முற்றிலும் உண்மை.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அண்மையில், இனம்தெரியாத இளைஞர்களால் சுட்டுக்கொல்லப் பட்ட யாழ் மேயர், கொழும்பிற்குக் கொண்டுசெல்லப்பட்டு தகனம் செய் யப்படவேண்டிய நிலை. அவரது உடலைத் தூக்கிச் செல்வதற்குக்கூட ஆட்கள் இல்லை என, கொழும்புப் பத்திரிகையொன்று எழுதியிருந்தது என்பதில் இருந்து, மக்கள் முட் டாள்கள் அல்ல, இந்த, சலுகைக ளுக்காகத் தொங்குவோர்தான் பரிதாபத்திற்கு உரியவர்கள் என்பது புலனாகும். இவர்கள் வாழ்ந்தும் வாழாதவர்கள்! இறந்தும் வாழாத வர்கள்! ஆனால் வரலாற்றில் வாழ் வார்கள் துரோகிகளாக!.

யாழ் குடாநாட்டில், இராணுவச் சூழலில், ஜெயசிக்குறுய் ஆரம்பித்து நடத்தப்பட்டுக்கொண்டிருக்கையில், தமிழ்மக்களினது பூரண எதிர்ப்புக்கு மத்தியில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை, அரசியல் கபட நோக் கத்திற்காக விடாப்பிடியாக நடத்தி முடித்த வீராங்கனை சந்திரிகா, இன்று தெற்கில் தேர்தல் நடத்தப் பின் நிற்கின்றார் என்பது விசித்திரமாக உள்ளது. ஓகஸ்ட் மாதம் நடைபெற வேண்டியுள்ள மாகாணசபைத் தேர் தல்களை பிற்போடுவது குறித்து எதிர்க்கட்சிகளுடன் பேச்சுக்கள் நடந்தது பேரங்கள் நடந்தது.

பேரங்கள் தோற்றதால், மாகாண சபைத் தேர்தலை நடத்துவதாக சந்திரிகா அரசு அறிவித்திருக்கின்றது.

ரணில் விக்கிரமசிங்காவின் ஜனாதி பதித் தேர்தலை முதலில் நடத்துதல் என்ற நிபந்தனையை ஏற்பதைவிட, மாகாணசபையையே நடத்திவிட லாம் என்பது சந்திரிகா அரசின் தற்காப்பு நிலைப்பாடு.

ஆனால், ஜெயசிக்குறுவின் வெற்றி தோல்விகளை வைத்து, இறுதிநேரத் தில் இம்மாகாணசபைத்தேர்தல் பிற் போடப்படலாம். இதற்காகவே, பல ஜனநாயகவிரோதச் சட்டங்கள், தனி மனித அதிகாரங்கள், சந்திரிகாவிற்கு நிரம்பவே கைகொடுக்கும்.

-சுப்பு-

# மூன்று வருடம் காத்திருந்த கொக்கு

“ஜே.ஆர் ஜெயவர்த்தனாவுக்குப் பின் இந்த நாட்டில் தோன்றிய அறிவு ஜீவியான தலைவராக இன்று விளங்குபவர் ரணில் விக்கிரம சிங்காவே. சரியான தலைமைத்துவம், தெளிவான கொள்கை நுணுக்கமான திட்ட மிடல் என்பவற்றை நாட்டு மக்க ளிற்கு வழங்கும் ஐ.தே.கவுக்கு பக்க பலம் சேர்க்க மக்கள் ஒன்று திரள வேண்டும்'' இவ்வாறு தனது கட்சிக் காரரால் புகழ்ந்தேற்றப்படும் ரணில் அரச தரப்பினர் பற்றி என்ன சொல்கிறார்.

“தற்போது அரசாங்கத்தில் மந்த புத்தி உள்ளவர்களே இருக்கிறார்கள். சகல கபினட் அமைச்சர்களும் சேர்ந்து கூட சுதந்திரப் பொன் விழாவை ஒழுங்காக நடத்தமுடிய வில்லை. இந்த மந்த புத்தியாளர்க ளிற்கு கொமிசன் அடிக்க மட்டும் புத்தியிருப்பதாகத் தெரிகிறது. இவர் களினால் நாடு மேலும் பின்னோக்— கிச் சென்று கொண்டிருக்கிறது” இவ் வாறு இழித்துரைத்திருக்கிறார்.

இது சாதாரணமாக எதிர்க்கட்சி ஆளுங்கட்சி மீது சேறு பூசும் வித மான பேச்சுத்தானா? அப்படியல்ல நீண்ட காத் திருப்பின் பின் ரணிலின் கூற்றுப்படி மக்களா ணையை மதித்து 3 ஆண் டுகள் பொறுத்திருந்த பின் அடுத்த நூற்றாண்டுத் தொடக்கத்தில் நடைபெற வேண்டிய பாராளுமன் றத் தேர்தலை குறிவைத்து நடாத்தப்படும் பாரிய பிரச்சார யுத்தமே இது.

ரணில் கூறுவதுபோல அவர் மக்களாணையை மதித்து சந்திரிகா அர சிற்கு அதன் செயற்பாடு களிற்கு விட்டுக்கொடுத்து காத்திருந்தாரா? இல்லவே இல்லை. சந்திரிகா அர சின் செயற்பாடுகளின் கூச்சலை மீறி அவரால், அவரது ஐ.தே.கட்சியால் கத்தமுடியவில்லை. 94–ல் சந்திரிகா வின் பொ.ஐ.முன்னணி ஆட்சிக்கு வந்தவுடன் சிங்கள தமிழ் மக்களின் ஆதரவுடன் ஏன் உலகத்தின் ஆதர வுடனுமே புலிகளுடன் பேசினார். ஏப்ரல் 29–ல் யுத்தம் தொடங்கி யாழ் நகர் கைப்பற்றப்பட்டது, கிளி நொச்சி பிடிபட்டது என நிகழ்வுகள் அவரை வாய்திறக்க விடவில்லை. இந்த நிகழ்வுகளில் அரசின் குத்துக் கரணங்கள் ஆக்கிரமிப்புகளை சிங்க ளப் பேரினவாதம் அங்கீகரித்தால் அந்நிகழ்வுகளை எதிர்ப்பது பேரின வாதத்தை எதிர்ப்பதாகிவிடுமே. எனவே ரணில் காத்திருந்தார்.

காத்திருந்த கொக்கிற்கு வாய்தி றக்கச் சந்தர்ப்பம் வழங்கியவர் ஜென ரல் ரத்வத்தையே. தன் ஆதிக்க மதர்ப்பின் உச்சத்தில் 97–ம் ஆண்டு வெசாக்கிற்குள் மாங்குளத்தில் கொடி யேற்றவென ஜெயசிக்குறுவைத் தொடங்கிச் சிக்கிப் போய் நிற்பதால் ரணிலை வாய்திறக்க வாய்ப்பை அள்ளி வழங்கினார். சிங்களத்தின் நவீன துட்டகைமுனு இது போதா தென்று மூன்று வருடமாய் வெறும் வயிற்றுடன் காத்திருந்த கொக்கிற்கு



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உறு மீனாய் அமைந்துவிட்டது தலதாமாளிகை குண்டு வெடிப்பு.

அரசின் இரு முனை இராஜ தந்திர நகர்வின் ஒருமுனையாகிய தீர்வுப் பொதிக்கான தன் அபிப் பிராயத்தை தெளிவாக வெளியி டாது நழுவிக் கொண்டிருந்த ரணில், மகாநாயக்கர்கள் தமது புனித தந்த தாதுவிற்கே ஆபத்து வந்துவிட்ட கொதியில் தீர்வுப் பொதியினை தூக்கி வீசிவிட, காத்திருந்த ரணில் அதற்கு விட்டார் ஒரு உதை. இது இனப்பிரச்சினைத் தீர்வுக்கு எது விதத்திலும் உதவாது.

அத்தோடு விட்டாரா. சந்திரிகா அரசுடன் தாய்ச்சி மறிக்கவென்று தன் பங்கிற்கு புதியதொரு அதிகாரப் பரவலாக்கல் யோசனையினை பகுதி பகுதியாக வெளியிடுகிறார்.

தம் தரப்புப் புதிய யோசனைகளு டன் அவர்களை மினக்கெட வைத்து விட்டு ரணில் என்ன செய்கிறார்.

"வீழ்ச்சியடைந்து செல்லும் விவ சாயம், கல்வி, கைத்தொழில் துறை களை முன்னேற்றவும் நாட்டில் ஜனநாயகத்தை ஸ்தாபிக்கவும் அரசு தவறிவிட்டது. சவால்களை ஏற்க அரசால் முடியாது. ஆனால் நான் இச் சவால்களை ஏற்றுக்கொள்கி றேன். அதற்குப் பக்க பலமான அறிவு சார்ந்தவர்களின் பின்னணி எனக்கு இருக்கிறது. நாட்டின் ஐக்கி யத்தையும் அமைதியையும் நிலை நாட்ட என்னால் முடியும். 21-ம் நூற்றாண்டில் முன்னேறும் நாடாக இலங்கையைக் கட்டி எழுப்புவேன். நாட்டை சரியாக நிர்வகிக்க முடி யாத அரசாங்கம் பொதுத் தேர்தலை நடத்தத் தயாராக இருந்தால் அதற்கு முகங்கொடுக்க நான் தயாராக இருக்கிறேன்'' இவ்வாறு பிரச்சாரக் கூட்டங்களை நாடெங்கும் ஏற்பாடு செய்து முழங்கி வருகிறார்.

> **சந்திரிகா அரசின் இராணுவ முனைப்புகள் தரும் தொடர் இழப்புகள், அனுமார் வாலாக நீண்டு செல்லும் யுத்தம் ஏற்படுத்திவிட்ட பொருளாதார அழிவு, சரிவு, மனச் சலிப்பு இவற்றை நாடி பிடித்துப்பார்த்து விட்ட ரணில் பொ.ஐ.முன்னணி அரசிற்கெதிராக வீதியில் இறங்க தகுந்த தருணம் இதுவே எனத் தெளிந்திருக்கிறார்; துணிந்திருக்கிறார்.**

**பு. சத்தியமூர்த்தி**

அரசின் மீது 45 ஊழல் குற்றச் சாட்டுக்களைக் குறிப்பிட்டு 'பிரதம மந்திரியின் அலுவலகம், ஒரு சில அமைச்சுக்களைத் தவிர ஏனைய சகல அமைச்சுக்களிலும் ஊழல் தலைவிரித்தாடுகிறது' எனக் குற்றம் சாட்டி அரசிற்கெதிராக 15 இலட்சம் கையெழுத்துக்களை திரட்டும் போராட்டம் ஒன்றிற்காக வீதியில் இறங்கியிருக்கிறார். அதாவது அடுத்த தேர்தலுக்கான ஆரம்பப் பணிப்பு ரைகளைத் தற்போதிருந்தே மூலை முடுக்குகளிலிருந்து தொடர்கிறார் ரணில்.

அத்தோடு விட்டாரா? யுத்தத்தை நிறுத்தி நாட்டை அபிவிருத்திப் பாதையில் முன்னெடுத்துச் செல்ல முடியாத இந்த அரசாங்கமும் ஜனாதி பதியும் மீண்டும் ஒரு பொதுத் தேர் தலை நடத்த வேண்டும். மாகாண சபைத் தேர்தல், மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பு எதுவென்றாலும் தற் போது ஐக்கிய தேசியக் கட்சி அத னைச் சந்திக்கத் தயாராகவே இருக்கி றது என்று சவாலும் விடுகிறார்.

இது எதனைக் காட்டுகின்றது? சந்திரிகா அரசின் இராணுவ முனைப் புகள் தரும் தொடர் இழப்புகள், அனுமார் வாலாக நீண்டு செல்லும் யுத்தம் ஏற்படுத்திவிட்ட பொருளா தார அழிவு, சரிவு, மனச் சலிப்பு இவற்றை நாடி பிடித்துப் பார்த்து விட்ட ரணில் பொ.ஐ.முன்னணி அரசிற்கெதிராக வீதியில் இறங்க தகுந்த தருணம் இதுவே எனத் தெளிந்திருக்கிறார்; துணிந்திருக்கிறார்.

அரசு தன் போக்கில் இனியும் தொடர்ந்து விட்டேற்றித்தனமாகப் போய்க்கொண்டிருந்தால் அது ரணிலுக்கு மேலும் உதவலாம். ★



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


நிலவரம்

# 'ஜெயசிக்குறு'

## முன்னேயா பின்னேயா காத்திருக்கிறது தூக்குக்கயிறு

நடவடிக்கை மூலோபாயம் மாற்றப்பட்டது
நடவடிக்கைத் தளபதி மாற்றப்பட்டார்
ஆனால்; ஓராண்டாகியும் இலக்கு எட்டப்படவில்லை.

இந்த நடவடிக்கையில் வெற்றி கிட்டியவுடன் அந்த வெற்றி அலையில் மக்கள் அள்ளுண்டு கொண்டிருக்கும் போதே சூட்டோடு சூடாக பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலை நடத்தி மூன்றிரண்டு பெரும்பான்மையைப் பெற்றுவிடவும் தனது தீர்வுப் பொதி ஜனாதிபதி முறை ஒழிப்பு அரசியல் சித்து விளையாட்டுக்களின் மீதான அபிப்பிராய வாக்கெடுப்புகளையும் நடாத்தி அரசியலில் அசைக்க முடியாத சக்தியாகப் பரிணமிக்கும் நீண்ட கனவுடன் சந்திரிகா தலைமையிலான பொ.ஐ.முன்னணி அரசால் தொடங்கப்பட்டது ஒப்பரேசன் ஜெயசிக்குறு (வெற்றி நிச்சயம்) இராணுவ நடவடிக்கை.




முழுப் பலத்தையும் பிரயோகித்து பாதை திறப்பிற்கான இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டால் அவை *90–நாட்களைக்* கொண்ட சமராகவே அமையும். ஆட்லறிகள், எறிகணை வீச்சு நடத்தி விமானங்கள் குண்டு மழை பொழிய, கவச பீரங்கிப் படைகளுடன் முன்னேறும் படையினருடன் எவ்வாறு விடுதலைப் புலிகள் முட்டிமோதப் போகிறார்கள். பின்வாங்கவே செய்வார்கள். பாதை திறந்தவுடன், விடுதலைப் புலிகளின் தளப் பிரதேசமாக விளங்கும் வன்னிக்காட்டையும் முல்லைக்காட்டையும் ஒரு கலக்குக் கலக்கி கட்டுவலையில் இருக்கும் பொட்டியான் மீன்கள் மாதிரி லபக்கென அமுக்கிவிடலாம் எனப் படையினரும் படை அதிகாரிகளும் அரசும் நினைத்தனர். (நன்றி தினக்கதிர்) அந்த நினைப்பில்தான் வெற்றி நிச்சயம் எனப் பொருள்பட சிங்களத்தில் ஜெயசிக்குறு எனப் பெயரிட்டு மகிழ்ந்தனர். வன்னிக்குள் புகுந்தவர் *25.05.97*–ம் திகதியன்று வெசாக் தினத்தில் மாங்குளத்தில் கொடியேற்ற வேண்டும் என்று முதலாவது காலக்கெடுவும் விதிக்கப்பட்டது.

பெரும் பலத்துடன் மிக விரைவாக முன்னேற முயன்ற படையினரைத் தடுத்துத் தாக்கும் போர்முறை உத்தியைப் புலிகள் கையாண்டனர். இந்த தாக்குதல் உத்தியின் தீவிரத்தால் *25*–ம் திகதிக்குள் மாங்குளத்துக்குப் போகப் புறப்பட்ட படையினர் ஓமந்தையில் தரித்து நின்றனர். மூன்று MBT எனப்படும் பிரதான சமர் டாங்கிகளையும் ஒரு துருப்புக்காவியையும் (APC) இழந்ததுடன் குறைந்தது *116* படையினரையும் பலிகொடுத்திருந்தனர். ஒரு MBT சேதமானதுடன் *467* படையினர் காயமடைந்தனர். இது முதலாவது காலக்கெடு பிசுபிசுத்த கதை.

இந்தப் பிசுபிசுப்பை மேலும் தீவிரப்படுத்தியது புலிகளின் ஜெயசிக்குறுவுக்கெதிரான முதலாவது தாண்டிக்குள ஊடறுப்பு *400* படையினர் பலியாகி *400* பேர் காயமடைந்தனர். *5* டாங்கிகள் தகர்க்கப்பட்டன. ஆயுதக் களஞ்சியம் அழிக்கப்பட்டது. ஷெல் வீச்சில் MI— *24* சேதமானது. இந்தக் கதையை தொடர்கதையாக்கிக் கொண்டிருக்க



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஜெயசிக்குறு புளியங்குளத்தை நோக்கி மரண அடி வாங்கியபடி மெல்ல மெல்ல நகர இதுவரை தடுத்துக் கொண்டிருந்த புலிகள் புளியங் குளத்தில் நிலையெடுத்து இருந்து தாக்கும் உத்தியைக் கடைப்பிடிக்கத் தொடங்கினர். சிங்களப் படையினர் மலையிற் தலையை மோதிய கதை யாக முட்டி முட்டி மோதி இயலா மல் நுரைதள்ளி நின்றன. நான்கு டாங்கிகள் அழிந்து ஆறு சேதமா யின. ஒரு துருப்புக்காவியைப் புலி கள் சேதமின்றிக் கைப்பற்றினர். இந்தச் சமர்களில் 200–ற்கும் மேற் பட்ட படையினர் கொல்லப்பட்ட னர். இதற்கிடையில் இருவேறு ஊடறுப்புத் தாக்குதல்கள் பெரிய மடுவிலும் தாண்டிக்குளத்திலும் புலிகளால் நடாத்தப்பட்டு 335 படையினர் கொல்லப்பட்டனர். 600 படையினர் காயமடைந்தனர்.

முட்டி மோதி, முட்டிமோதித் தலை உடைந்ததேயல்லாமல் புளியங் குளத்தை தாண்டமுடியாமற் படை கள் திணறின. தார்க்குச்சி போட்டு வால் முறுக்கி ரத்வத்தவும் தளபதி களும் அதிகாரிகளும் அமெரிக்க கிறீன்பெரே சிறப்புப் படையணியும் தூண்டியபோதும் படையினரால் எதையும் சாதிக்க முடியவில்லை. புளியங்குளத்தில் நிலையெடுத்தி ருந்த புலிகளின் தீரமிகு அர்ப்ப ணிப்புப் போர் இதைச் சாதித்தது. அவர்களின் குருதியில் தோய்ந்த புளியங்குளம் புளியங்குளமாகவும் புரட்சிக் குளமாகவும் பரிணமித்தது.

மரபுப் போர் உத்தி பலனளிக் காமலும் பெருஞ்சேதத்தை விளை விப்பதாகவும் அமைந்துவிட கிறீன் பெரேயின் முயற்சிகள் உத்திகளின் படி இராணுவம் தனது மூலோ பாயத்தை மாற்றி கரந்தடிப்படை யாக மாறி இரகசிய முன்னேற்ற முயற்சி களை மேற்கொண் டது.

செப்ரம்பர் 10–ம் திகதி புளியங்குளம் சந்தியை மேற்காகச் சுற்றி அடர்ந்த காடுக ளூடு கடந்து நகர்ந்து புதூரை நோக்கி இரா ணுவம் நகர்ந்தது. (11–ம் திகதி புதூர்ச் சந்தியில் புலிகள் நடாத்திய அதிரடி யில் 40 பேரையும் 56 ஆயுதங்களையும் இழந்தது. புளியங் குளம் நெடுங்கேணி வீதி வழியாக முன்னேறிய 53–வது படையணி நைனாமடுவில் இருந்து கனகராயன் ஆற்றுப் படுக்கையின் பக்கவாட் டாக நகர்ந்து கனகராயன் குளச் சந்தியை அடையமுயன்றனர். செப் ரம்பர் 30–ம் திகதி புலிகளின் அதிர டியில் 50 படையினரை இழந்தும்

பு. சத்தியமூர்த்தி

300 பேர் காயமடைந்தும் இந்த நகர்வு தோல்வியடைந்தது.

அடுத்த முயற்சியாக ஒக்ரோபர் 5–ம் திகதி அடர்காடுகளூடு நகர்ந்து கரிப்பட்ட முறிப்புச் சந்தியை அடைந்தது 53–வது படையணி. அன்றைய தினம் இரவு இவர்களிற் கான வழங்கலிற்கென ஏற்கனவே கரப்புக்குத்தி விஞ்ஞான குளத்தில் கள்ளத்தனமாகக் கொண்டுவந்து வைக்கப்பட்டிருந்த பெருமளவு ஆயுத, இராணுவ தளபாடங்களைப் புலி கள் பெருந் தாக்குதல் ஒன்றின் மூலம் கைப்பற்றினர். இதைத் தொடர்ந்து 5 நாட் சமரில் 500–ற்கும் மேற்பட்ட படையினர் பலியாகினர்.

$5^1/2$ மாதங்களாக தீவிரமாக முயன்றும் பயனில்லாமற்போனது மல்லாமல் பெருமிழப்புகளையும் அழிவுகளையும் ஆயுத விநியோகங்க ளையும் செய்த ஜெயசிக்குறு நடவ டிக்கைத் தளபதி மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தனா வெளியேற் றப்பட்டு மேஜர் ஜெனரல் சிறிலால் வீரசூரிய ஜெயசிக்குறுக் களத் தலைமை தளபதியாக நியமிக்கப்பட் டார். இவரது நியமனத்துடன்



டிசம்பர் 31–ம் திகதியை தரைப் பாதை திறப்புக்கான காலக்கெடு வாக ரத்வத்தை குறிப்பிட்டார்.

இவர் பொறுப்பேற்றபின் 1–வது நகர்வு ரகசிய நகர்வுத் திட்டத்தின் அடிப்படையில் கிறீன்பெரேயால் பயிற்றப்பட்ட ஜங்கிள் கொமாண் டோஸ் எனும் அதிரடிப் படையி னர் முன் நகர டிசம்பர் 4–ம் திகதி இறுதியும் உறுதியுமான தாக்குத லென கனகராயன் குளச் சந்தியைக்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






கைப்பற்றி அங்கிருந்து மாங்குளத்துக்கு நகரும் மிகப்பெரிய திட்டத்துடன் படைகளை நகர்த்தினார் வீரசூரிய. மன்னகுளத்தில் நடந்த தொரு துடைத்தழிப்பில் 350 பேரைப் பறிகொடுத்து 600 பேர் காயமடைய 120–க்கு மேற்பட்ட உடல்களையும் ஏராளம் ஆயுதங்களையும் கைவிட்டுப் படை ஓடியது. ஜங்கிள் கொமாண்டோஸ் படையணி சிதைந்தது.

இதன் பின்னர் பெப்ரவரி 4, மார்ச்14, ஏப்ரல்—30 திகதிகளில் மூன்றுமுறிப்பு ஒலுமடு கனகராயன் ஆற்றுப் படுக்கையிலிருந்து தற்போதைய சம முன்னரங்காக மாறியுள்ள மாங்குளத்தை நோக்கி எடுக்கப்பட்ட முன்னேற்ற முயற்சிகள் முறியடிக்கப்பட்டன. ஆட்லறிப் பிரிவு லெப் கேணல் உட்பட நூற்றுக்கு மதிகமான படையினர் கொல்லப்பட்டனர்.மூன்று பிரிகேடியர்கள் உட்பட பல நூறு பேர் காயமடைந்தனர். மூன்று டாங்கிகளும் ஒரு Mi 24 தாக்குதற் கெலியும் சேதமடைந்தன.

இது ஒரு வருடமாகத் தொடரும் ஜெயசிக்குறுச் சமரின் கதைச்சுருக்கம். அதாவது 3500 படையினரைப் பலிகொடுத்து 9000–ற்கு மேற்பட்டோரைக் காயப்படுத்தி அதிலும் மூன்றிலொரு பகுதியினரை அங்கவீனர்களாக்கி 19 டாங்கிகளை சேதமாக்கியும் அழித்தும் சாதனை படைத்துப் புதை சேற்றில் பதிந்து பொதிந்திருக்கிறது ஜெயசிக்குறு (வெற்றி நிச்சயம்).

இந்தக் கதைச் சுருக்கம் சொல்லும் செய்தி படைமுன் நகர்ந்தால் வரும் விபரீதம் அழிவு. அந்த அழிவு எழுப்பும் எதிரலைகள் அரசுக்கு பாரிய எதிர் விளைவுகளை ஏற்படுத்துகிறது. இது மேலும் தொடர்ந்தால் என்னவாகும். அரசின் இராணுவப் பலவீனமும் முன்னோக்கற்ற போக்கும் சிங்களத்தில் உருவாக்கும் கருத்துருவம் தூக்கு கயிறாக உருமாறி அரசின் முன்னே தொங்குகிறது.

இனியாவது இந்த அழிவுகளின் தாக்கத்தை உணர்ந்து அரசியல் குதிரையோட்டத்துக்கு படைகளை, நாட்டைப் பலியிடும் போக்கை அரசு மாற்றுமா? மாற்றினால் என்ன நடைபெறும். எதற்காக இந்த 3500 சிங்கள இளைஞர்களை வன்னிக் காட்டினுள் பலியிட்டாய்? இவ்வளவு வளங்களை எரித்து அழித்தாய் என்ற கேள்வி பூதமாக எழுந்து விடாதா? அது அரசியல் தூக்குக் கயிறாக அச்சுறுத்தாதா?

எப்பக்கம் திரும்பினாலும் ஜெயசிக்குறு அரசுக்கு தூக்குக் கயிறுகளைப் பிரசவித்துள்ளது. சரி இப்படியே நின்றால் தொடரும் தாக்குதல் நோய் மனவிரக்தி எல்லாம் ஒன்றுதிரண்டு படைகளைத் தின்றும் அது கூடத் தற்கொலைக் கொப்பானதே அன்றி வேறல்ல.

ஆக, எப்பக்கம் திரும்பினாலும் ஜெயசிக்குறு அரசுக்கு தூக்குக் கயிறுகளைப் பிரசவித்துள்ளது. சரி இப்படியே நின்றால் தொடரும் தாக்குதல் நோய் மனவிரக்தி எல்லாம் ஒன்றுதிரண்டு படைகளைத் தின்றும் அது கூடத் தற்கொலைக் கொப்பானதே அன்றி வேறல்ல. நீண்ட வழிபிடித்து கொடியேற்றி மீளவும் அரசேற முற்பட்டோர் இன்று நிற்கின்றார் தூக்குக் கயிற்றின் கீழ். இதைச் சாதித்ததெங்கள் பிள்ளைகள் தீரம்.

★★★




தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஜயசிக்குறுவின் புதிய தந்திரோபாயம்

# புலிகளின் பதிலடியால் பெரும் சிக்கலில்!

மே மாதம் 28–ம் திகதிக்கும் ஜூன் மாதம் 4–ம் திகதிக்கும் இடைப்பட்ட எட்டுத் தினங்களில் சிறீலங்கா இராணுவம் – ஜயசிக்குறுத் துருப்புக்கள் – இரண்டு பெரும் நகர்வுகளை மேற்கொண்டன. இவ்விரு நகர்வுகளும் இராணுவத்திற்கு பெரும் ஆளணி இழப்பை ஏற்படுத்தியதோடு விடுதலைப்புலிகளினால் முறியடிக்கவும் பட்டது.




இதில் முதலாவது நகர்வு – கரிப்பட்டமுறிப்புப்பகுதியில் நிலைகொண்டுள்ள ஜயசிக்குறு படையணிகளினால் மேற்கொள்ளப்பட்டதாகும். மிகவும் இரகசியமான முறையில், பழைய கண்டிவீதிக்கும் கிழக்குப் புறமாகவும் மேற்கொள்ளப்பட்டதாக அந்நகர்வு இருந்தது.

இரண்டாவது நகர்வு – கிளிநொச்சிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டது. நகரின் மேற்குப் புறமாக புலிகளின் பாதுகாப்பு அரண்களையும் உடைத்துக் கொண்டு முன்னேறும் வகையில் இப் படை நகர்வு இருந்தது.

ஆனால், இப் படை நகர்வுகள் – இரண்டும் விடுதலைப்புலிகளினால் முற்றாக முறியடிக்கப்பட்டதோடு இராணுவத்தினருக்குப் பெரிய அளவினதான ஆளணி இழப்பையும் ஏற்படுத்தியது. ஆனால் இவற்றை விட முக்கியமானது – ஓர் ஆண்டு ஜயசிக்குறு நடவடிக்கையின் பின்னர், நன்கு திட்டமிட்டு புதிதாக இராணுவம் மேற்கொண்ட இரு முயற்சிகள் பலமான அடியை வாங்கிக்கொண்டது என்பதே ஆகும்.

மார்ச் மாதம் 20–ம் திகதி மாங்குளம் நோக்கிய இராணுவத்தின் நகர்வு முயற்சி முறியடிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஜயசிக்குறுவின் ஓர் ஆண்டுப் பூர்த்திக்குள் மாங்குளத்தைக் கைப்பற்றுதல் என்ற அரசின், இராணுவத்தின் திட்டம் கைவிடப்பட்டது. இதே சமயம் ஜயசிக்குறு நடவடிக்கைகளைத் தொடர்வதற்கு புதிய தந்திரோபாயம் பற்றிச்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிந்திக்கவேண்டிய நிர்ப்பந்தத்தையும் இராணுவத் தரப்பிற்கு உருவாக்கியது.

இதற்கு முன்னர் இராணுவம் பெரும் தயாரிப்பு வேலைகளில் இறங்கியது. கிழக்கில் குறிப்பாகத் திருகோணமலையிலிருந்தும்,



யாழ்.குடாநாட்டில் குறிப்பாகத் தீவகத்திலிருந்தும் வாபஸ் பெறப்பட்ட படையணிகளும் இராணுவத்திலிருந்து தப்பி ஓடி திரும்பிவந்து சேர்ந்தோர்கள் என ஒரு தொகுதியினரும் ஜயசிக்குறுவிற்கு அனுப்பப்பட்டனர். இவர்களில் ஒரு பகுதியினர் கிளிநொச்சியிலும் குவிக்கப்பட்டனர்.

இதே வேளை ஜயசிக்குறு நடவடிக்கையின் அடுத்த கட்டத்தின் போது குறைந்த அளவினதான உயிர் இழப்புடன் இராணுவத் தலைமைப் பீடம் தமது போர் முனைத் தந்திரோபாயத்தினை மாற்றிக் கொண்டிருந்தமையே வெளிப்படுத்துபவையாக இருந்தன.

இதேசமயம் 'ஜயசிக்குறு' இராணுவ நடவடிக்கையினை ஒரு குறுகிய கால வரையறைக்குள் செய்து முடிப்பதென்பது சாத்தியப்பாடற்றது என இராணுவத் தரப்பு தெரிவிக்கும் நிலை உருவாகியிருந்திருப்பினும் இராணுவத்தைப் பொறுத்து உருவாகி வந்த கால நிர்ப்பந்தங்கள் சில வெளியிடமுடியாத கால நிர்ணயத்தை உருவாக்கியே இருந்தது.

இதன் பிரகாரம் ஆகஸ்ட் மாத நடுப்பகுதிக்குள் மாங்குளத்தை கைப்பற்றுவது அவசியமானதொன்றாக இருந்தது. ஏனெனில், எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலுக்கு முன்னதாக இது சாதிக்கப்படுதல் அரசாங்கத்திற்கு மட்டுமல்ல. இராணுவத்திற்கும் தேவையாக இருந்தது. ஏனெனில் எதிர்க்கட்சிகள் இவ் ஜயசிக்குறு நடவடிக்கை குறித்து கடுமையான விமர்சனங்கள் கொண்டவையாக இருக்கையில், தேர்தலுக்கு முன் கணிசமான அளவில் தானும் முன்னேறாது விடில், தேர்தலில், ஆளும் கட்சிக்கு ஏற்படும் பாதிப்பானது இராணுவத் தலைமையையும் பாதிக்கக்கூடியதாகும்.

இதைத் தவிர, ஆகஸ்ட் மாதத்திற்குள் மாங்குளத்தைக் கைப்பற்றாத நிலையில் இராணுவமும், அரசாங்கமும் எதிர்பார்ப்பது போன்று இவ் வருட இறுதிக்குள்ளாவது ஜயசிக்குறு நடவடிக்கையை முடிவுக்குக் கொண்டுவருதல் சாத்தியமற்றதொன்றாகவே மாறுவது மட்டுமல்ல, தொடர்ந்து வரும் மாரிகாலம் இராணுவத்திற்குப் பாதகமான விளைவுகளையும் ஏற்படுத்தக்கூடியதும் ஆகும்.

ஆகையினால், ஜயசிக்குறுவின் புதிய தந்திரோபாயமானது பல்வேறு



அம்சங்களை உள்ளடக்கியதாக இருக்கும் என இராணுவ ஆய்வாளர்கள் எதிர்பார்த்தனர். அதிலும் குறிப்பாக, இராணுவத்தினரின் உயிரிழப்பைக் குறைப்பதில் இருந்து இராணுவத்தினரின் நகர்வு முயற்சிகள், திசைகள் என்பவற்றிலும் மாற்றங்கள் எதிர்பார்க்கவும்பட்டன. குறிப்பாக கடந்த ஒக்டோபரில் கரிப்பட்டமுறிப்பில் இராணுவம் நிலைகொண்டதன் பின்னர் மேற்கொண்ட நகர்வுகள் யாவும் மாங்குளத்தை நோக்கியதாக இருந்தது. இம் முயற்சிகள் பலவும் தோல்வியடைந்த நிலையில் புதிய தந்திரோபாயம் மாங்குளத்தைக் கைப்பற்றுவதற்கான புதிய யுக்திகளைக் கொண்டதாக இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

இவ் எதிர்பார்ப்பைப் போலவே மே 28–ம் திகதி இராணுவ நடவடிக்கை ஒன்று பழைய கண்டி வீதிக்கு மேற்குப் பக்கமாக பெரும் சுற்றுக்கொண்ட நீள் பாதையில் அடர்காட்டினூடாக மேற்கொள்ளப்பட்டது. இந் நகர்வானது இரு குறிக்கோள்களை அடிப்படையாகக் கொண்டிருந்தது. ஒரு புறம் கரிப்பட்டமுறிப்பிற்கு வடக்குப் புறமாக இருந்த புலிகளின் நிலைகளை குறிப்பாக அம்பகாமம் பகுதியிலிருந்த புலிகளின் நிலைகளிற்குப் பின்புறமாக நகர்வதன் மூலம் புலிகளைச் சுற்றிவளைத்து அழித்தல் என்பதாகவும் அதன் மூலம் அப் பிரதேசத்தைக் கைப்பற்றிக் கொள்வதாகவும் இருந்தது.

ஆனால், இராணுவத்தின் இந் நகர்வுத் தந்திரோபாயம் விடுதலைப் புலிகளினால் முறியடிக்கப்பட்டதோடு மட்டுமல்ல, நகர்வில் இறங்கிய படையணி சிதைக்கவும் பட்டது. இது மன்னகுளம் பகுதியில் இராணுவத்திற்கு கடந்த டிசம்பரில் ஏற்பட்ட ஆளணி இழப்புடன் ஒப்பிடமுடியாதது. ஆயினும் இராணுவத்தினரின் இரகசியமான நீண்ட தூர நகர்வு முயற்சிக்கு விடுதலைப் புலிகள் கொடுத்த பலமான அடியென மதிப்பிடுவதில் தவறு எதுவுமில்லை. இந்த ரீதியில் அடர்காட்டுப் பகுதியில் இராணுவம் மிகப் பெரும் நெருக்கடிகளைச் சந்திக்க வேண்டி வரும் என்பது உணர்த்தப்பட்டது எனலாம்.



இதே சமயம் மற்றொரு போர் முனை கிளிநொச்சியில் திறக்கப்பட இருந்தது. ஜயசிக்குறு ஆரம்பகாலத் திட்டத்தின்படி துருப்புக்கள் மாங்குளம் பிரதேசத்தைக் கைப்பற்றி நிலைகொண்டதன் பின்னரே கிளிநொச்சியிலிருந்து படை நகர்வை மேற்கொள்வதெனத் தீர்மானிக்கப்பட்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டிருந்ததாயினும் ஒரு வருடமாகியும் மாங்குளம் கைப்பற்றப்படாத நிலையில் புதிய தந்திரோபாயத்தில் கிளிநொச்சியிலிருந்தும் நகர்வுகளை மேற்கொள்ளுவதென முடிவு செய்யப்பட்டது. ஆனால் இந் நகர்வு முயற்சியானது கரிப்பட்ட முறிப்பிலிருந்து மேற்கொண்ட நகர்வு முயற்சிக்கு மாறானதாக – புலிகளின் முன்னணி நிலைகளை ஊடறுத்து அதிவேகமாக முன்னேறிச் சென்று சில பகுதிகளைக் கைப்பற்றுவதென திட்டமிடப்பட்டது.

இவ்வாறாக இரு முனைகளில் நிர்ப்பந்தம் கொடுப்பதன் மூலம் புலிகளின் படையணிகள் பிரிக்கப்படவும் – எதிர்ப்பின் பலம் குறைவடையும் எனவும் இராணுவத் தரப்பினால் மதிப்பிடப்பட்டது. இதே சமயம் இக் கிளிநொச்சிப் படை நகர்வானது முதல் நகர்வின் மூலம் அம்பகாமம் பகுதியில் இராணுவம் நிலைகொண்டதைத் தொடர்ந்து நிகழ்வதற்கான வாய்ப்பு இருந்தது எனக் கருத இடமுண்டு. ஆனால் அம்பகாமம் பகுதி நோக்கிய நகர்வானது தோல்வியில் முடிவுற்றதாயினும் – சில தினங்கள் தாமதத்தின் பின்னர் கிளிநொச்சி நகர்வு மேற்கொள்ளப்பட்டது என்றே கருத இடமுண்டு.

ஆனால் கிளிநொச்சியில் இராணுவம் எதிர்பார்த்ததனை விட பலமான அடியினைப் பெற்றது. புலிகள் இச்சமரை மிகவும் மதி நுட்பத்துடன் நடத்தி இராணுவத்திற்கு பலத்த உயிர்ச்சேதத்தை ஏற்படுத்தினர்.

இந்த வகையில் ஒரு வருடத்தின் பின் ஜயசிக்குறு நடவடிக்கைத் துருப்புக்கள் மேற்கொண்ட இரு நகர்வு முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்துள்ளன. புதிய தந்திரோபாய ரீதியில் நன்கு திட்டமிடலின் பின் மேற்கொண்ட முழு முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்தமையானது ஜயசிக்குறு மேலும் மேலும் கடுமையாகிச் செல்வதை இராணுவத் தலைமைக்கு சந்தேகமின்றி உணர்த்தியிருக்கும்.

ஜெயராஜ்

# பிரபல பாடசாலைகளில் இராணுவ ஆட்சேர்ப்பு பிரச்சாரம்

ஸ்ரீலங்கா இராணுவத்தில் அண்மைக் காலமாக இருபெரும் பிரச்சினைகள் இராணுவ அதிகாரிகளால் கவலையுடன் நோக்கப்படுவதாக கொழும்பு பத்திரிகை ஒன்று கூறுகிறது.

முதலாவது, படையில் சேருவோரின் தொகையில் ஏற்பட்டுள்ள பாரிய வீழ்ச்சி. இரண்டாவது படை அதிகாரிகளின் தரத்தில் ஏற்பட்டுள்ள அச்சமூட்டும் வீழ்ச்சிப்போக்கு என அப்பத்திரிகை தெரிவிக்கிறது.

இவற்றை நிறைவு செய்யும் விதத்திலான ஆட்சேர்ப்பு முயற்சியில் இராணுவத்தின் தலைமைப்பீடம் கடந்தவாரம் முதல் இறங்கியுள்ளது.

"நாங்கள் பல வெற்றிகளைப் பெற்றுள்ளோம். எமக்கு உள்ள மிகப் பெரிய பிரச்சினை ஆட்பலப்பற்றாக்குறையாகும். போதியளவு ஆட்பலம் இருந்தால் முழு வெற்றியை நாம் பெற்றுவிடுவோம்" என இராணுவத் தளபதி லெப். ஜெனரல் றோஹான் தளுவத்த தெரிவித்துள்ளார்.

எனினும் இராணுவத்தில் இணைக்கப்படுவோரின் "தரம்" குறித்து இராணுவத் தளபதியுடன் ஆட்சேர்ப்பில் இணைந்து செயற்படும் மேஜர் ஜெனரல் வசந்த பெரேரோ அக்கறை கொண்டுள்ளார்.

"முன்னர் போதிய அளவு ஆட்கள் படையில் சேராததினால் எமது படையினரின் தரம் சிறிது குறைவடைய நேர்ந்தது. அண்மைய இராணுவ நடவடிக்கையில் பெரும் இழப்புகள் ஏற்பட்டதற்கு போதிய "தொழில் திறன்" பெறாத படையினரும் ஒரு காரணமாகும்" என வசந்த பெரேரோ தெரிவித்தார்.

"எம்மால் சரியானவர்களைத் தெரிந்தெடுக்க முடியவில்லை. நாங்கள் ஆட்சேர்ப்புக்குப் பின் தங்கியபகுதிகளுக்கே சென்றோம். இதனால் அதிகாரிகள் மட்டத்திலான படையினரை புதியவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியவில்லை.

அதனால் இப்பொழுது "தரமான" பாடசாலைகளை நாம் அணுகியிருக்கிறோம். அதாவது சென் தோமஸ், றோயல், றினிற், சென் பீற்றர்ஸ் போன்ற கூடிய வசதி படைத்த பாடசாலைகளில் கல்வி கற்கும் நடுத்தர, உயர் தர குடும்பங்களை சேர்ந்தோரை தேவையான அளவில் படையில் சேர்ப்பது அவசியம் என மேஜர் ஜெனரல் வசந்த பெரேரா கூறினார்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 'ஜயசிக்குறு'வை விரைவுபடுத்த

## காலம் கொடுக்கும் நிர்ப்பந்தம்!

ஒரு வருடத்தைப் பூர்த்தி செய்து இரண்டாம் ஆண்டில் தொடர்ந்து கொண்டிருக்கும் 'ஜயசிக்குறு' நடவடிக்கை புதியதொரு தந்திரோபாயத்தையும் முடிவையும் வேண்டி நிற்கின்றது. ஏனெனில் இந் நடவடிக்கையானது அத்தனைதூரம் சுமையானதொன்றாக சிறீலங்கா அரசிற்கும் அதன் இராணுவத்திற்கும் மாறியுள்ளது.

புதிய தந்திரோபாயம் ஒன்றின் தேடலுக்கு இரு அம்சங்கள் காரணமாகியுள்ளன. ஒன்று 'ஜயசிக்குறு' நடவடிக்கை தனது ஓராண்டு கால வரலாற்றில் இழந்துள்ள பெரிய அளவிலான ஆளணி மற்றும் தளபாட இழப்பாகும். அதாவது விரலுக்கு விஞ்சிய வீக்கம் போன்று இவ் இழப்புக்கள் இராணுவத்தின் அளவுக்கு விஞ்சியவையாக அமைந்துவிட்டன.

ஆகக் குறைந்தளவானதான மதிப்பீட்டின்படி 'ஜயசிக்குறு' நடவடிக்கைகளில் இராணுவம் 3000 துருப்புக்களை இழந்துள்ளது. அதேவேளை 7000–க்கும் மேற்பட்ட துருப்புக்கள் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். இவற்றைத் தவிர பலநூறு கோடி ரூபா பெறுமதியான ஆயுததளபாடங்களையும் இழந்தோ அன்றி பறிகொடுத்தோ உள்ளது.

இவ்வாறாக ஒருபுறம் இழப்புக்கள் உயர்ந்தளவாக இருக்கையில் மறுபுறம் இராணுவ நடவடிக்கைகளும் முன்னேற்றம் எதுவுமற்றதாக பல மாதங்கள் ஓரே இடத்திலேயே இராணுவம் தரித்திருக்க வேண்டிய நிலையிலும் உள்ளது. இந் நிலையானது பல விமர்சனங்களையும் கண்டனங்களையும் அரசின் மீதும் இராணுவத் தலைமை மீதும் ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில், இவ் இராணுவ நடவடிக்கை குறித்து தீர்க்கமான முடிவுகளை எடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் அரசிற்கு உருவாகியுள்ளதெனலாம். அதாவது தீர்க்கமான முடிவு எதுவும் எடுக்கப்படாத பட்சத்தில் சிறீலங்கா இராணுவம் பேரழிவுகளைச் சந்திக்க வேண்டிவரலாம் என இராணுவ ஆய்வாளர்கள் எச்சரிக்கும் கட்டத்தை நடவடிக்கை எட்டியுள்ளது.

இதே சமயம் இராணுவ – அரசியல் ரீதியிலும் இவ் 'ஜயசிக்குறு' நடவடிக்கையை விரைவுபடுத்த வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகியுள்ளது. ஒருபுறம், சந்திரிகா அரசாங்கம் இதுவரை கொண்டாடிய இராணுவ வெற்றிகள் யாவற்றையும் 'ஜயசிக்குறு' நடவடிக்கை இல்லாது





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒழித்துள்ளது. இது சந்திரிகா அரசாங்கம் யுத்தத்தை மூலதனமாகக் கொண்டு அரசியல் நடத்த மேற்கொண்ட முயற்சிக்கு விழுந்துள்ள பலமான அடியாக மட்டுமல்ல, நெருக்கடியாகவும் மாறிவருகின்றது.

ஆகையினால் 'ஜயசிக்குறு' நடவடிக்கை விரைவில் முடிக்கப்பட வேண்டும். இதனை அரசியல் மூலதனம் ஆக்கவேண்டும் என்ற குறியுடன் உள்ள ஆளும் கட்சிக்கு இப்படை நடவடிக்கை விரைவில் முடிவுக்கு வரவேண்டிய அவசியம் உள்ளது. அதிலும் ஓகஸ்ட் மாதத்தில் இடம்பெறவுள்ள மாகாணசபைத் தேர்தலுக்கு முன்னதாக ஜயசிக்குறு நடவடிக்கை முடிக்கப்பட வேண்டும் என அரசு எண்ணுகிறது.

**நகரமுடியா நிலையில் தடைபட்டு நிற்கும் 'ஜயசிக்குறு' நடவடிக்கை விரைவில் முடிக்கப்பட வேண்டும் என்ற காலத்தின் கட்டாயம் இராணுவத்திற்கு ஏற்பட்டுள்ளது. இதனால் ஏற்கனவே தோல்வியில் முடிந்துவிட்ட தனது தந்திரோபாயத்திற்கு மாற்றீடாகப் புதிய தந்திரோபாயத்தை இராணுவம் வேண்டி நின்கிறது.**

இது குறித்து கொழும்பிலுள்ள செய்தியாளர்களும், இராணுவ ஆய்வாளர்களும்கூடச் சில தகவல்களை வெளியிட்டுள்ளனர். அவர்களின் அபிப்பிராயப்படி, மாகாணசபைத் தேர்தலுக்கு முன்னதாக மாங்குளத்தையாவது இராணுவம் கைப்பற்ற வேண்டும் என அரசாங்கத்தரப்பு விரும்புவதாகக் குறிப்பிடுகின்றனர்.

அவ்வாறு முடிக்கப்படும் பட்சத்தில் அதனைத் தேர்தல் மூலதனமாக்கி தேர்தலை எதிர் கொள்ளலாம் என அரசு கருதுகின்றது. அவ்வாறு இல்லாமல் 'ஜயசிக்குறு' நடவடிக்கையில் குறிப்பிட்ட காலத்திற்குள் வெற்றி ஈட்டாது போனால் ஈட்டுவதென்பது இலகுவானதல்ல. தேர்தல் தமக்குச் சாதகமாக அமையமாட்டாது என்பது ஆட்சியாளர்களுக்கு நன்கே தெரியும். இந்த நிலையில் இராணுவத் தலைமை மீது அரசாங்கம் 'ஜயசிக்குறு'வை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என அழுத்தம் போடுவது தவிர்க்க முடியாத நிலையில் உள்ளது.

அரசியல் அழுத்தம் ஒருபுறம் இருக்க சிறீலங்கா இராணுவத்தைப் பொறுத்து 'ஜயசிக்குறு'வின் முடிவு சேற்றில் வைத்த காலை எடுத்துக் கொள்வதற்கு மேற்கொள்ளும் முயற்சி போன்றதாகும். ஏனெனில், ஏற்கனவே 'ஜயசிக்குறு' நடவடிக்கை சிறீலங்கா இராணுவத்தின் தொழில்சார் திறமையைக் கேள்விக்குரிய தாக்கியுள்ளது. ஒரு வருடத்துக்கு மேலாகியும் ஒரு நடவடிக்கையை முடிக்க முடியவில்லை என்பது பாராட்டுதலுக்குரியதொன்றல்ல.

அத்தோடு, இன்னமும் நான்கு மாத காலத்திற்குள் மீண்டும் மாரி காலம் ஆரம்பமாகவுள்ளது. ஆகையினால் அம்மாரிகாலத்திற்கு முன்னதாகவாவது இந் நடவடிக்கை முடிக்கப்பட்டாக வேண்டும். அவ்வாறு முடிக்கப்படாது விட்டால் அடுத்த மாரிகாலம் வன்னியில் இராணுவத்திற்கு உகந்ததாக இருக்கப் போவதில்லை என்பதை இராணுவத் தலைமை புரிந்து கொண்டும் உள்ளது.



இதனைத் தவிர, சிறீலங்காவின் தற்போதைய இராணுவத் தளபதி லெப் ஜெனரல் றோஹான் தளுவத்த தனது பதவிக் காலத்திற்கு முன் இந் நடவடிக்கையை முடித்துவைக்க விரும்புவதும் தவறானதொன்றல்ல. தளபதி தளுவத்த பெரும்பாலும் இவ்வருடம் டிசம்பர் மாதத்துடன் ஓய்வு பெறுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஆகையினால் இவ்வாண்டின் இறுதிக்குள் – அதாவது மாரிகாலத்திற்கு முன்னதாக இந் நடவடிக்கையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான முயற்சிகளில் ஈடுபடுவது எதிர்பார்க்கத்தக்க தொன்றே. இல்லாவிடில், அவர் தனது எதிர்காலத்தையிட்டு மகிழ்ச்சியடைவதற்கு எதுவும் இல்லாது போய்விடும்.

இந்த நிலையில்தான் 'ஜயசிக்குறு' நடவடிக்கைக்கான புதிய தந்திரோபாயம் தேவையாகவுள்ளது. ஏனெனில், பழைய தந்திரோபாயத்தின் அடிப்படையிலோ அன்றி மூலத் திட்டத்தின் அடிப்படையிலோ 'ஜயசிக்குறு' நடவடிக்கையை காலத்தின் கட்டாயத்திற்கு ஏற்ப முன்னோக்கி நகர்த்திச் செல்வது சாத்தியமானதாக இருக்கப்போவதில்லை. இது கடந்த ஒருவருடகால நடவடிக்கை மூலம் உணர்த்தப்பட்டுவிட்டதொன்றாகிவிட்டது.

ஆகையினால், புதிய தந்திரோபாயமும், நகர்வுத் திட்டம் குறித்தும் ஆராயப்படவேண்டிய தேவை தவிர்க்க முடியாததொன்றாக எழுந்துள்ளன. இது குறித்து இராணுவத் தலைமைப் பீடம் எதனையும் வெளிப்படுத்தவில்லை. ஆயினும், இராணுவ ஆய்வாளர்களின் கருத்துக்களின் அடிப்படையிலும், இராணுவம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளின் அடிப்படையிலும் புதிய தந்திரோபாயத்தில் இடம்பெறலாம் என சில அம்சங்கள் எதிர்பார்க்கக்கூடியவையாகவுள்ளன.

இதில் பல முனைகளில் நடவடிக்கைகளை ஆரம்பித்தல் என்பது முக்கிய ஆய்விற்குரியதாக இருக்க வாய்ப்புண்டு. சில தினங்களுக்கு முன் 'றொய்ட்டர்' செய்தியாளருக்கு கருத்து வெளியிட்ட இராணுவ அதிகாரி ஒருவரும் இதனைச் சுட்டிக்காட்டியிருந்தார். ஆகையினால் வீதிக்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குத் தெற்கிலும் வடக்கிலும் இருந்து நடவடிக்கைகளை ஆரம்பித்தல் நோக்கமாக இருக்கலாம். அதாவது, மாங்குளம் பகுதியிலும் கிளிநொச்சிப் பகுதியிலும் நடவடிக்கைகளை ஆரம்பித்தலாகும். கிளிநொச்சியிலும் ஆனையிறவிலும் இராணுவம் குவிக்கப்படுவதாக வெளியாகும் தகவல்கள் இக்கருத்துக்கு வலுச் சேர்ப்பவையாக உள்ளன. அவ்வாறில்லாவிடில் தீவுப் பகுதியில் நிலைகொண்டிருந்த இராணுவத்தை ஒரு தேவையுமின்றி முழுமையாக ஆனையிறவுக்கு நகர்த்த வேண்டிய அவசியம் உருவாகி இருக்கமாட்டாது எனக் கருதப்படுகிறது.

இந்த ரீதியில், பல முனைத் தாக்குதல் ஒன்றிற்கு மேற்பட்ட முனைகள் மூலம் புலிகளின் பலத்தைப் பிரிப்பதனால் இராணுவத்தின் முன்னேற்றம் இலகுவாக அமையலாம் என இராணுவத் தரப்பு கருதலாம்.

அடுத்ததாகப் புதிய திசைகளின் நகர்வுகளை மேற்கொள்வதன் மூலம் புலிகளைப் பரந்த பிரதேசத்தில் போரிடவும் அதேசமயம் புலிகளுக்கு குழப்பத்தை ஏற்படுத்துவதன் மூலம் நடவடிக்கைகளின் அனுகூலங்களை ஏற்படுத்திக் கொள்வதுமாகும். எடுத்துக்காட்டாகப் பழைய கண்டி வீதியை அண்டி மேற்கொள்ளப்படும் நகர்வுகள் மூலம் அவ் வீதியையே திறப்பதற்கு இராணுவம் சிந்திக்க மாட்டாது எனக்கூற முடியாது.

ஆகையினால், இதுபோன்றோ அன்றி இதைவிடவும் மாறுபாடான தந்திரோபாயங்களையோ கைக்கொண்டு 'ஜயசிக்குறு' நடவடிக்கையை விரைவில் முடிவுக்குக் கொண்டுவர இராணுவம் முயலக்கூடும். ஏனெனில், காலத்தின் அழுத்தமானது 'ஜயசிக்குறு' நடவடிக்கை எவ்வாறேனும் முடிவிற்குக் கொண்டு வருமாறு நிர்ப்பந்திக்கின்றது என்பதே யதார்த்தமாயுள்ளது.

இவ்வாறாக மாற்றம் செய்யப்பட்ட தந்திரோபாயத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது தான் ஜூன் தொடக்கத்தில் ஆரம்பிக்கப்பட்ட நகர்வு முயற்சியா? என்ற கேள்வியும் இல்லாமல் இல்லை. ஏனெனில், இந்த நகர்வு பிரதான வீதியை நோக்கியதாக அமைந்திருக்காமை இக்கேள்விக்குக் காரணமாகிறது. அதாவது, நகர்வும்— மோதலும் பழைய கண்டிவீதியை அண்டியதாக அமைந்திருந்தன.

'ஜயசிக்குறு' நடவடிக்கையில் இராணுவம் பல தடவை நீண்டதூர நகர்வுகளை மேற்கொண்டிருப்பினும் தற்பொழுது அம்பகாமம் நோக்கிய நகர்வும் அவ்வாறானதா? அதாவது, பிரதான வீதியை வேறொரு வழியால் எட்டுவதற்கான நகர்வா என்பதில் ஐயத்திற்கு இடமுண்டு. ஏனெனில், அப் பகுதியைச் சூழவுள்ள அடர்காடு— பிரதான வீதி நோக்கிய நகர்விற்கு இடையூறு விளைவிக்கத்தக்கதாகும். ஆகையினால் அம்பகாமம் நோக்கிய நகர்வு குறித்து வேறு நோக்கில் சிந்திக்கவும் இடமுண்டு.

இதன் காரணமாகவே இராணுவம் புதிய தந்திரோபாயத்தின் அடிப்படையில் நகர்வை மேற்கொண்டதா என எண்ணவைக்கிறது. ஆனால் இராணுவம் இன்று புதிய தந்திரோபாயத்தைக் கைக்கொள்கின்றதோ இல்லையோ, ஆனால், அதற்கு 'ஜயசிக்குறு' நடவடிக்கையை விரைவில் முடிவுக்குக் கொண்டுவரவேண்டிய தேவையுள்ளது. இல்லாவிடில் தனது தோல்வியை அது சிறிது காலத்தின் பின் விரும்பியோ விரும்பாமலோ ஏற்றுக் கொள்ளவேண்டி வரலாம்.

**ஜெயராஜ்**

# ராஜீவ் காந்தி கொலை வழக்கு – குற்றஞ் சாட்டப்பட்டோருக்காக நிதி திரட்டுவது தவறானதல்ல!

**தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன்**

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டோருக்காக உச்ச நீதிமன்றத்தில் வழக்கு நடத்த நிதி திரட்டுவதில் எந்தத் தவறும் கிடையாது. இவ்வாறு தமிழர் தேசிய இயக்கத் தலைவரும் 26 தமிழர்கள் உயிர்காப்பு வழக்கின் நிதிக் குழுத் தலைவருமான திரு.நெடுமாறன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

ராஜீவ் கொலை வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டவர்களின் வழக்கை உச்ச நீதிமன்றத்தில் நடத்த குழு அமைக்கப்பட்டு நிதி திரட்டப்படுகிறது. பொதுமக்கள் நிதியை இதற்கு வாரி வழங்குகின்றார்கள் எனத் தெரிவித்த அவர் இந்திய நாட்டு சட்டங்களின் படி வழக்குகளை நடாத்த நிதி திரட்டுவது குற்றமல்ல எனவும் மேலும் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தை கொச்சைப் படுத்த வேண்டும் என்றே தொடுக்கப்பட்ட இந்தப் பொய் வழக்கை உச்ச நீதிமன்றத்திற்கு கொண்டுசென்று உண்மையை நிலைநாட்ட நாங்கள் முயற்சி செய்கிறோம். இதில் எந்தத் தவறும் கிடையாது என அவர் தெரிவித்தார்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பெரும் இழப்பை சந்தித்துள்ள சந்திரிகாவின் யுத்த மூலதனம்!



மூன்றரை வருடங்களுக்கு மேலாக ஆட்சி அதிகாரத்தில் இருக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் 'அரசியல் மூலதனம்' யுத்தத்தில் வெற்றி என்பதே ஆகும். இதற்காக, 17 வருடகால ஐ.தே.க ஆட்சியை வீழ்த்துவதற்காக அவர் வழங்கிய தேர்தல் வாக்குறுதிகளைக்கூட முற்றாகக் கைவிடவும் தயாராக இருந்தார்.

அத்தனை தூரம் 'யுத்தத்தில் வெற்றி' என்பது பெரும் இலாபம் ஈட்டும் ஒரு அம்சமாக இருக்கும் என்றே கருதப்பட்டது. தாம் ஆட்சிக்கு வந்தால் யுத்தத்திற்குச் செலவிடப்படும் 2000 கோடி ரூபாக்கள் உடனடியாக அபிவிருத்திப் பணிகளுக்கு திருப்புவதற்கு ஏற்ற விதத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என தேர்தல் வாக்குறுதி அளித்த சந்திரிகா குமாரதுங்கா ஆட்சிக்கு வந்தபின்னர் முன்னைய செலவீட்டைவிட 2500 கோடி ரூபா வரை மேலதிகமாக யுத்தத்திற்கு ஒதுக்கீடு செய்யும் அளவிற்கு தனது யுத்தத்திற்கான முதலீட்டில் அவருக்கு நம்பிக்கை இருந்துள்ளது.

அந்த அளவிற்கு 'யுத்தத்தின் வெற்றி'யில் காட்டிய ஆர்வமானது சிங்களப்பேரினவாதத்தில் அவர் கொண்டிருந்த நம்பிக்கையின் அடிப்படையிலானதே ஆகும். ஆனால் ஆரம்பத்தில் யுத்தத்தில் சில இலாபங்கள் கிட்டியபோதும் பின்னர் யுத்தம் ஆட்சியாளர் எதிர்பார்த்த வெற்றியைமட்டுமல்ல, எதிர்பார்த்த திசையில்கூடச் செல்லவில்லை.

இதேசமயம், யுத்தமானது பல எதிர்விளைவுகளை கொடுக்கும் பாரியதொரு சுமையாக மாறியது. ஒருபுறம் பெரும் தொகை யுத்தச் செலவீடானது சிறீலங்காவின் பொருளாதாரத்தை வெகுவாகப் பாதித்தது.

ஏனெனில், இச் செலவீடானது ஆசியாவிலேயே சிறீலங்கா வடகொரியாவிற்கு அடுத்து இரண்டாவது பெரிய யுத்தச் செலவீடு செய்யும் நாடாக மாற்றியுள்ளது. அதாவது, தேசிய உற்பத்தியில் வடகொரியா 7.2 வீதத்தையும், சிறீலங்கா 7.1 வீதத்தையும் யுத்தத்திற்குச் செலவீடு செய்கின்றன. இந்தவகையில் பாகிஸ்தான் 5.5 வீதத்தையும் இந்தியா 2.2 வீதத்தையும் செலவீடு செய்கின்றன.

**அங்கவீனமான படையினர், அரசாங்கம் தமக்கு போதிய அளவிற்கு உதவி வழங்கவில்லை எனக் குற்றம் சாட்டி வருவதோடு தமக்கென ஓர் சங்கத்தையும் அமைத்துப் போராடத் தயாராகி வருகின்றனர்.**

இதன் காரணமாக அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான நிதிப்பற்றாக்குறை பொருளாதார வளர்ச்சியை வெகுவாகப் பாதிப்பதாக இருந்தது. இது நாட்டில் வேலையற்றோர் பிரச்சினையை அதிகரித்ததோடு மக்களின் பொருளாதார வாழ்வைப் பெரிதும் பாதித்தது.

மறுபுறம் யுத்தமானது பெரும் அழிவு சக்தியாகவும் மாறியது. இதில் மனித வளத்திற்கு ஏற்பட்டிருக்கும் பாதிப்பு ஒருபுறம் இருக்க பொருளாதார அழிவுகள் உற்பத்தியில் கணிசமான வீழ்ச்சியை உண்டு பண்ணுவதாக மாறியது. யுத்தம் இடம்பெறும் பிரதேசங்களின் உற்பத்தி நடவடிக்கைகள் முற்றாகத் தடைப்பட்டுள்ள அதேவேளை சொத்துடமைக்கும், மூலதனங்களுக்கும் பெரும் அழிவுகளும் ஏற்பட்டன. இதனால் பொருளாதார நடவடிக்கைகளுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்களுடன் சொத்தழிவு, மூலதன இழப்புக்களும் ஏற்பட்டன. இவ்வாறு 1996–இல் ஏற்பட்ட இழப்பீடானது 11650 கோடி ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

இவற்றைத் தவிர யுத்தம் இடம்பெறும் பிரதேசத்திற்கு வெளியிலும் குறிப்பாக கொழும்பில் இடம்பெறும் பாரிய குண்டுவெடிப்புக்கள் குண்டுத்தாக்குதல்கள் பெரும் பொருளாதார அழிவை மட்டுமல்ல சந்தி



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ரிகா அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைக்கு பெரும் இன்னல் விளைவிப்பனவாகவும் உள்ளன.

அதாவது வெளிநாட்டு மூலதன வருகை, வெளிநாட்டு உல்லாசப் பயணிகளின் வருகை என்பன இவற்றால் பெரும் பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளன. இதனால் பெரும் வருமான இழப்பு ஏற்பட்டுள்ளதோடு இத்துறைகளில் பெருந் தொகையில் இடப்பட்ட மூலதனமும் நட்டத்தினால் கரைந்து செல்லும் நிலையே காணப்படுகின்றது.

இதனால் ஒரு புறம் யுத்தத்தின் சுமை மக்கள் மத்தியில் ஏறிக் கொண்டிருக்கையில் மறுபுறம் யுத்தத்தின் போது இராணுவ ஆளணிகளில் ஏற்படும் பாதிப்புக்கள் பெரும் நெருக்கடிமிக்கதாக மாறியுள்ளது. எடுத்துக்காட்டாக மூன்றாம் கட்ட ஈழப்போரில் 7750–க்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். இதே சமயம் 15.500–க்கு மேற்பட்ட படையினர் காயத்திற்குள்ளாகியுள்ளனர். இதில் கணிசமான தொகையினர் அங்கவீனமாகியுள்ளனர்.

இவர்கள் இன்று யுத்தத்தின் மேலதிக சுமையாக சிறீலங்கா அரசிற்கு உள்ளதோடு நெருக்கடிதரும் தரப்பினராகவும் மாறியுள்ளனர். இதில் முக்கியமானவர்களாக போர் முனையில் காணாமல்போய் விட்டனர் என சிறீலங்கா அரசு அறிவித்துள்ள இராணுவத்தினரின் பெற்றோர் உறவினர் அரசிற்குத் தொடர்ச்சியாக கொடுத்துவரும் அழுத்தம் உள்ளது. இவர்கள் தமது காணாமல்போன பிள்ளைகள், உறவினர்கள் பற்றி முடிவுகளை, அரசு அறிவிக்கவேண்டும் எனக் கோருகின்றனர்.

இதேவேளை, அங்கவீனமான படையினர் அரசாங்கம் தமக்கு போதிய அளவிற்கு உதவி வழங்கவில்லை எனக் குற்றம் சாட்டி வருவதோடு தமக்கென ஓர் சங்கத்தையும் அமைத்துப் போராடத் தயாராகி வருகின்றனர்.



பலவீனமான எமது இனத்தின் மிகவும் பலம் வாய்ந்த ஆயுதமாகவே நான் கரும்புலிகளை உருவாக்கினேன். கரும்புலிகள் எமது இனத்தின் தற்காப்புக் கவசங்கள்; போராட்டப் பாதையின் தடை நீக்கிகள்.

**- தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்.**

இவ்வாறாக ஆயுதப் படைத் தரப்பில் இருந்தோ அன்றி அவர்களைச் சார்ந்தவர்கள் தரப்பில் இருந்தோ அரசாங்கத்திற்கு நெருக்கடி அதிகரித்துக் கொண்டிருக்கும் அதே வேளை இறந்த படையினருக்கான நஷ்டஈடு மற்றும் சம்பளம் வழங்குதல் என்பதும் பெரும் பொருளாதாரச்சுமையாகி வருகின்றது.

ஏனெனில், படையினர் இறப்பு வீதம் என்றுமில்லாதவாறு மூன்றாம் கட்டப்போரில் அதிகரித்துள்ளது. இதனால், பெரும் தொகை நஷ்டஈடு வழங்கவேண்டிய நிர்ப்பந்தமும், படையினர் இல்லாதபோதும் மாதாந்தச் சம்பளமும் தொடர்ந்து வழங்க வேண்டிய கட்டாயமும் அரசிற்கு எழுந்துள்ளது. இதனால் இராணுவ ஒதுக்கீட்டில் கணிசமான செலவை அரசு இதற்கென ஒதுக்கவேண்டிய அவசியத்தையும் உருவாக்கியுள்ளது. இச்செலவீடுகள் யுத்தம் முடிவடைந்தாலும்கூட அரசினால் நிறுத்தப்பட முடியாதவையாகவே இருக்கும்.

இந்த வகையில் 'யுத்தமானது' சந்திரிகா அரசாங்கம் எதிர்பார்த்த வெற்றியைத் தேடிக் கொடுக்காதது மட்டுமல்ல, புதிய நெருக்கடிகள் பலவற்றை உருவாக்குவதாகவுமே உள்ளது. இதனை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூடப் பிரதிபலிக்காமல் இல்லை. கடந்த சில வாரங்களுக்கு முன் ஜெனீவாவில் இடம்பெற்ற கருத்தரங்கொன்றில், "அபிவிருத்தி அடைந்துவரும் ஆசியாவில் சுகாதார சேவைகள்" என்ற தலைப்பில் பேசிய அவர் "சிவில் யுத்தத்தினால் சீர்குலைக்கப்பட்டிருக்கும் இலங்கை அதன் உடனடிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு முன்னேற்றப் பாதையில் செல்ல சர்வதேச அமைப்புக்களும் வெளிநாடுகளும் தாராளமாக உதவவேண்டும்" எனக் கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்த வகையில், சந்திரிகா குமாரதுங்க அரசாங்கத்தின் யுத்தத்திற்கான முதலீடு பெரும் நஷ்டத்தினையே அதற்கு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. ஒருபுறம் யுத்தத்தில் வெற்றி கிட்டவில்லை என்பதோடு, மறுபுறம் பெரும் அழிவையும் கொடுப்பதாகவுமே அது இருந்துள்ளது. அதாவது யுத்தத்தினால் எதிர்பார்த்த அரசியல் அறுவடை அரசிற்குக் கிடைக்காதது மட்டுமல்ல புதிய சுமைகளையும் அரசிற்கு அது ஏற்றியுள்ளது.

கெல்மன்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## பதவியில் ஏற்றிய ஏணிகளை

# எட்டி உதைக்கும் சந்திரிகா அரசு

பொ.ஐ.முன்னணி அரசாங்கத்திற்கும் சமுர்த்தி விவசாய ஊக்குவிப்பு முகவர்களுக்கும் இடையிலான முரண்பாடுகள் வளர்ந்து இன்று எச்சரிக்கைகளும் சவால்களும் விடும் அளவிற்கு நிலைமை ஏற்பட்டு வருகின்றது.

"அரசாங்கத்திற்கு எதிராகச் செயற்பட்டு அதனை இக்கட்டான நிலைக்குத் தள்ள முயலும் சமுர்த்தி, விவசாய ஊக்குவிப்பு முகவர்கள் வேலை நீக்கம் செய்யப்படுவார்கள்" என அரசாங்கம் எச்சரிக்கை செய்துள்ள அதேவேளை தமது போராட்டம் தொடரும் எனவும் அரசாங்கத்தால் இயலுமானால் தம்மீது நடவடிக்கை எடுத்துப் பார்க்கட்டும் என இம் முகவர்களின் சங்கம் சவால் விட்டுள்ளது.

1988–இல் பதவி ஏற்ற ஜனாதிபதி பிரேமதாசாவின் வறுமை ஒழிப்புத் திட்டத்தை (ஜனசவிய) நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பொ.ஐ.மு அறிமுகப்படுத்திய திட்டமே 'சமுர்த்தி' ஆகும். சந்திரிகா தலைமையிலான பொ.ஐ.மு அரசாங்கம் தனது தேர்தல் வாக்குறுதி ஒன்றிற்கு இணங்க இத் திட்டத்தை நடைமுறைப் படுத்தியது.

வடக்கு கிழக்கின் பல பகுதிகளில் இச் சமுர்த்தி திட்டம் அமுல்செய்யப் படாத போதிலும் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் இதனைச் செயற்படுத்த 33 ஆயிரம் இளைஞர், யுவதிகள் முகவர்களாக நியமிக்கப்பட்டனர். இவர்கள் பட்டியல் அடிப்படையில் நியமிக்கப்பட்டனர். இந்த 33 ஆயிரம் பேரும் கடந்த பொதுத் தேர்தலின் போதும் ஜனாதிபதி தேர்தலின் போதும் பொ.ஐ.மு–க்கு ஆதரவாக தீவிரப் பிரச்சாரங்களை மேற்கொண்டு அதன் வெற்றிக்கு உழைத்தவர்கள். அதாவது இவர்கள் பொ.ஐ.மு–வின் தீவிர ஆதரவாளர்களாகும். இவர்கள் ஆளும் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களின் சிபாரிசுப் பட்டியலின் அடிப்படையிலேயே பெரும்பாலும் நியமனம் பெற்றனர். இந் நியமனம் வழங்கப்பட்ட பின்னர் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல்களிலும் இவர்கள் அரசாங்கத்திற்கு ஆதரவாகவே பிரச்சாரங்களில் ஈடுபட்டனர்.



இந் நிலையில், இந்த இளைஞர்கள் தமது நியமனம் நிரந்தரமாக்கப்பட வேண்டும் எனவும், தமக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட வேண்டும் எனவும் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தனர். இந்தக் கோரிக்கைகள் அமைச்சர்கள், கட்சிச் செயலாளர், சிறிலங்கா ஜனாதிபதியும் கட்சியின் தலைவியுமான சந்திரிகா என அனைவரிடமும் சமர்ப்பிக்கப்பட்டும் கூட எவரும் இது குறித்துக் கவனம் செலுத்தவில்லை என சமுர்த்தி விவசாய ஊக்குவிப்பு முகவர்கள் சங்கத் தலைவர் ஜகத் புஸ்பகுமார என்பவர் தெரிவிக்கிறார்.

இதனையடுத்து பிரதேச ரீதியான போராட்டங்களை மேற்படி சங்கம் ஆரம்பித்து நடத்தியது. இதற்கும் செவிமடுக்க அரசாங்கம் தவறிய போது கொழும்பில் ஆர்ப்பாட்டமொன்றை இச் சங்கம் நடத்தியது.

இதனையடுத்து இவர்களை அழைத்த சமுர்த்தி, இளைஞர் விவகார அமைச்சர் எஸ்.பி. திசநாயக்கா இவர்களுடைய கோரிக்கைகள் குறித்து பரிசீலிக்க சம்மதம் தெரிவித்திருந்தார். ஆனால் மேற்கொண்டு எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என சமுர்த்தி, விவசாய ஊக்குவிப்பு முகவர்கள் சங்கம் தெரிவிக்கின்றது.

இந்த நிலையில் கடந்த மே தினத்தை அரசாங்க மேதின நிகழ்வு



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

களுக்குப் புறம்பாக தனித்துக் கொண்டாட சங்கம் முடிவு செய்திருந்தது. இதற்கான அனுமதியை முதலில் பொலிஸார் வழங்கியிருந்த போதும் இறுதி நேரத்தில் ஊர்வலமோ பொதுக் கூட்டமோ நடத்தக்கூடாது என தடை விதிக்கப்பட்டது.

தடையை மீறி கொழும்பு பொரளைச் சந்தியை நோக்கி ஊர்வலமாக சென்ற முகவர்கள் மீது பிரதி அமைச்சர் ஒருவரால் ஏவி விடப்பட்ட குண்டர்கள் தாக்குதல் நடத்தியதாகவும், கூட்டம் நடைபெற விருந்த பகுதியை சூழ்ந்து கொண்ட பொலிஸார் அப்பகுதிக்குள் எவரும் நுழைந்துவிடாது தடுத்து விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மொனராகலவில் நடைபெற்ற ஜனாதிபதி இடம்பெயர் சேவையின் போது அப்பகுதியில் போராட்டம் ஒன்றை நடத்த ஏற்பாடு செய்த சமுர்த்தி முகவர்கள் சங்க உறுப்பினர் தாக்கப்பட்டிருக்கிறார்.

மேலும் கொழும்பு பத்தரமுல்லவில் காணி அமைச்சரும் பொ.ஐ.மு–ன் பொதுச் செயலாளருமான தி.மு.ஜெயரட்ணவின் அலுவலகம் முன் ஆர்ப்பாட்டம் செய்த சமுர்த்தி விவசாய ஊக்குவிப்பு முகவர்கள் மிரட்டப்பட்டிருக்கிறார்கள்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக 'சமுர்த்தி முகவர்கள் தமது கடமைகளை ஒழுங்காகச் செய்ய வேண்டும். கடமைகளைத் தட்டிக் கழித்து அரசாங்கத்தை இக்கட்டான நிலைக்குள் தள்ள முயலும் சமுர்த்தி முகவர்கள் சேவையிலிருந்து அகற்றப்படுவர்' என சமுர்த்தி இளைஞர் விவகார, விளையாட்டுத் துறை அமைச்சர் எஸ்.பி.திசநாயக்கா எச்சரிக்கை செய்திருக்கிறார்.

இவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் அதிகாரமும் பிரதேச சபை செயலாளருக்கு வழங்கப்பட்டுள்ளது. இவர்கள் பட்டியல் அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டுள்ளதால் நிரந்தர நியமனம் கோர முடியாது என்பது மட்டுமல்ல, சேவையிலிருந்து அகற்றப்பட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கவும் முடியாது என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை சமுர்த்தி, விவசாய ஊக்குவிப்பாளர் சங்கத்தின் போராட்டங்களில் முன்னணியில் நின்று செயற்பட்ட 2000 முகவர்கள் இடைநிறுத்தம் அல்லது பணி நிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவர்கள் தமது கடமைகளை ஒழுங்காகச் செய்யவில்லை என குற்றஞ்சாட்டப்பட்டுள்ளனர்.

இது அமைச்சரின் கூற்றுக்கள் செயற்படுத்தப்படுவதையும் போராட்டம் செய்வோர் பதவி நீக்கம் செய்யப்படுவார்கள் என்பதையும் வெளிப்படுத்துகிறது.

அதேவேளை இவ்வாறான போராட்டங்களை நடத்துபவர்கள் சமுர்த்தி திட்டத்திற்குள் ஊடுருவியுள்ள ஐ.தே.க, ஜே.வி.பி கட்சிகளைச் சேர்ந்தவர்கள் என அரசாங்கம் குற்றஞ்சுமத்தியுள்ளது. ஆகவே சமுர்த்தி முகவர்களின் எதிர்காலத்தில் நடத்தத் திட்டமிட்டுள்ள போராட்டங்கள் எவ்விதம் நசுக்கப்படப்போகின்றது என்பது தெளிவாகிவிட்ட நிலையில் 'அனைத்துக்கும் தயார் – அரசாங்கம் செய்வதைச் செய்யட்டும்' என சவால் விடுத்து தொடர்ச்சியான போராட்டங்களில் ஈடுபட முகவர்கள் சங்கம் திட்டமிட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

சமுர்த்தி முகவர்களைப் பொறுத்தவரை தமது நியமனம் நிரந்தரமாக்கப்படுவதானால் இந்த அரசாங்கத்தின் பதவிக் காலத்திலேயே செய்யப்படக்கூடும் என திடமாக நம்புகின்றனர். ஏனெனில் பொ.ஐ.மு ஆதரவாளர்கள் என்ற அடிப்படையில் நியமனம் பெற்றுள்ள இவர்களுக்கு ஐ.தே.க ஆட்சிப் பீடம் ஏறினால் நிரந்தர நியமனம் கிடைப்பது அரிதாகவே இருக்கும். அனேகமாக சமுர்த்தித் திட்டமே இல்லாது ஒழிக்கப்படலாம் என்பதை கடந்தகால வரலாறு காட்டுகிறது. எனவே இவ் அரசின் பதவிக்காலத்தில் தமது பதவியை உறுதிப்படுத்திக் கொள்ள முயல்கின்றனர்.

ஆனால் அரசாங்கத்தைப் பொறுத்தவரை யுத்தத்தினால் பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கி வேலை வாய்ப்புக்களையோ சம்பள உயர்வையோ வழங்கக்கூடிய நிலையில் இல்லை. இதனால் உலக வங்கியின் சிபாரிசுக்கு இணங்க விவசாயிகளுக்கான மானியங்கள், அத்தியாவசியப் பொருட்களுக்கான மானியங்கள் என்பவற்றை வெட்டிவிட்டுள்ளது. தொழிலாளர்கள்– அரச ஊழியர்களின் மேலதிக நேர வேலை ஊதியங்களை குறைத்துள்ளது. சம்பள உயர்வுக் கோரிக்கைகளை உதாசீனம் செய்துள்ளது. சுருக்கமாகக் கூறின் அரசு மக்களுக்கோ அல்லது தனது ஊழியர்களுக்கோ சலுகை வழங்கக் கூடிய நிலையில் இல்லை.

இதனை மூடி மறைப்பதற்காக இவ்வாறாக சலுகை கோரி நடத்தும் போராட்டங்களை தேசவிரோத, அரசாங்க விரோதப்போராட்டங்களாகவும் ஐ.தே.க–வினரின் அரசு எதிர்ப்பு நடவடிக்கைகளாகவும் ஜே.வி.பி–யினரின் கிளர்ச்சிகளாகவும் சித்தரிக்க முயல்கிறது.

இதேவிதமான அணுகுமுறையையே சமுர்த்தி ஊழியர்கள் விவகாரத்திலும் அரசு கைக்கொண்டுள்ளது எனலாம். அதாவது இந்தப் போராட்டம் சமுர்த்தி இயக்கத்திற்குள் ஊடுருவியுள்ள ஐ.தே.க வினரதும், ஜே.வி.பி–யினரதும் அரசாங்க எதிர்ப்பு நடவடிக்கையாக சுட்டிக் காட்ட முயல்வதுடன் அவ்வாறு வலியுறுத்துவதற்கு சுமார் 2000 பேரை பணி நீக்கம் செய்துள்ளது.

இவ்வாறாக அரசாங்கத்தின் – தனது ஆதரவாளர்களுக்கெதிரான இந் நடவடிக்கையினால் சமுர்த்தி விவசாய ஊக்குவிப்பு முகவர்கள் பெரும் கொதிப்படைந்துள்ளனர். 'ஏறிய ஏணியையே தட்டிவிழுத்தும்' நடவடிக்கை என இவர்கள் இதனை விபரிக்கின்றனர்.

அதாவது அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை தென்னிலங்கை இடதுசாரிகள், இடதுசாரிப் போக்குள்ள



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புத்திஜீவிகள், பத்திரிகைச் சுதந்திரம், மனித உரிமை என பல்வேறு கோஷங்களை எழுப்பும் பிரமுகர்கள், சிறீமானி அத்துலத் முதலி தலைமையிலான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி, சந்திரிகாவின் சமாதான வேடத்தை நம்பி அவருக்கு வாக்களித்த தமிழ் வாக்காளர் வரிசையில் சமுர்த்தி முகவர்களையும் கொண்டுபோய்ச் சேர்த்துள்ளது எனலாம். நிலமை இவ்வாறாக இருக்க சமுர்த்தி விவசாய முகவர்களை இடைநிறுத்தி அவர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமிக்குமாறும் அவர்களின் தொகையை அரைவாசியாக்குமாறும் உலக வங்கி சிபாரிசு செய்துள்ளதாக செய்திகள் வந்துள்ளன.

நிதி நெருக்கடியைச் சமாளிக்க இலாபமீட்டும் அரச நிறுவனங்களையே விற்றுவிட முயலும் சந்திரிகா அரசாங்கம் சமுர்த்தி அமைப்பைப் பொறுத்து எவ்வாறான நடவடிக்கையை எடுக்க முயலும் என்பது ஊகிக்கமுடியாத ஒன்றல்ல. ஆனால் இவ்வாறான நடவடிக்கை எதிர்காலத்தில் பொ.ஐ.மு—க்கு என்ன விளைவை ஏற்படுத்தும் என்பதும் வெளிப்படையானதொன்றே ஆகும்.

**வேலவன்**

# கைதாகிய இளைஞர்கள் பலர் ரகசிய முகாமில் தடுத்து வைப்பு

## அவசர நடவடிக்கைக்கு பரராஜசிங்கம் எம்.பி கோரிக்கை

சிறீலங்கா படையினரினால் கைதாகி காணாமல் போனதாகக் கருதப்பட்ட 30-ஆம் வீட்டுத் திட்டத்தைச் சேர்ந்த அந்தோனி தயானந்தன் என்ற தமிழ் இளைஞர் அண்மையில் தனது தாயாருக்கு எழுதியுள்ள கடிதத்தில் தான் தற்பொழுது ஒரு இரகசிய தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இக்கடிதம் சம்பந்தமான புகார் தொடர்பாக பூரண விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதன் மூலம் இது போன்ற சிறீலங்காப் படைகளால் கைதாகிக் காணாமல் போனதாக கருதப்படும் பல நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்களின் நிலை சம்பந்தமாக கண்டறிய முடியுமென மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் மட்டு. பாராளுமன்ற உறுப்பினரும் தமிழர் விடுதலை கூட்டணி பாராளுமன்றக்குழுத் தலைவருமான ஜோசப் பரராஜசிங்கம் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது சம்பந்தமாக ஜோசப் பரராஜசிங்கம் எம்.பி மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவரான முன்னாள் நீதிபதி ஓ. எஸ் செனிவிரத்தினவுக்கு அனுப்பி வைத்துள்ள அவசர தொலைநகல் கடிதத்தில் தெரிவித்திருக்கின்றார்.

மட்டக்களப்பு கருவேப்பங்கேணி 30-ஆம் வீட்டுத் திட்டத்தினைச் சேர்ந்த அந்தோனி தயானந்தன் 1991-ஆம் ஆண்டு சிறீலங்காப் படையினரினால் கைதாகி பின்பு ஏனைய தமிழ் இளைஞர்களைப் போன்று காணாமல் போனதாக கருதப்பட்டார். இரண்டு ஆண்டுகளுக்குப் பின்பு அவர் தனது தாயாருக்கு எழுதிய கடிதத்தில் தான் சிறீலங்கா படையினரினால் கைதுசெய்யப்பட்டு கொழும்பு மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அறிவித்திருக்கின்றார்.

அதன்பின்பு அவரிடம் இருந்து எவ்விதக் கடிதங்களும் தாயாருக்கு கிடைக்கவில்லை. அண்மையில் அவர் தனது தாயாருக்கு எழுதியுள்ள கடிதத்தில் தான் மகரகம புற்றுநோய் வைத்தியசாலைக்கு அருகில் உள்ள ஒரு இடத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும், அங்கு தன்னைப் போல் பலர் தகரங்களில் வாளிகள், கூரைப்பீலிகள் போன்றவற்றை தயாரிப்பதில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர் எனவும் தன்னை எப்படியாவது விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டிருக்கின்றார். இது தொடர்பாக உடனடியாக விசாரணை மேற்கொள்ளுமாறு ஜோசப் பரராஜசிங்கம் கேட்டுக்கொண்டுள்ளார்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பெரும் சோதனை களமாகிவிட்ட 'தலைநகரில்' தமிழர் வாழ்வு !

கொழும்பில் தமிழர்கள் காரணமின்றி கைது செய்யப்படுவது வழமையான விடயம்தான் எனினும், சுற்றிவளைப்புக்கள் மூலம் ஆயிரக்கணக்கானோர் அண்மையில் கைது செய்யப்பட்டதும், அது குறித்து பல உள்நாட்டு வெளிநாட்டு அமைப்புகள் கண்டனம் செய்ததும் அண்மைக்கால சம்பவங்கள் ஆகும்.

சந்திரிகா அரசாங்கத்தின் அனுசரணையுடன் சிங்களப் படைகள் நடத்திய வகை தொகையற்ற கைதுகளுக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் எழுந்த கடும் ஆட்சேபனைகளையடுத்து சிறீலங்கா அரசாங்கம் இந்தக் கைதுகளைத் 'தவிர்க்க' புதிய பல திட்டங்களை அறிவித்துள்ளது.

கொழும்பில் வாழும் தமிழ் மக்களுக்கு விஷேட அடையாள அட்டை வழங்குதல், தமிழர்கள் அனைவரினதும் விபரங்களைத் திரட்டி அவற்றை கணனியில் சேமித்துவைத்தல், கொழும்புக்கு வரும் தமிழர்களுக்கு அரசாங்கமே தனது செலவில் 'சுகாதார வசதிகளுடன் கூடிய" தங்குமிடங்களை அமைத்து வழங்குதல்..... என இந்த திட்டங்கள் பல்வேறு வடிவங்களிலும் விரிவடைந்து கொண்டே செல்கின்றன.

கடந்தமாதம் இந்தக் கைதுகள் குறித்து சிறீலங்கா பாராளுமன்றத்தில் ஒத்திவைப்புப் பிரேரணை ஒன்று கொண்டு வரப்பட்டது. இதன்போது சிறீலங்காவின் நீதி, அரசியல் விவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் பாதுகாப்பு அமைச்சுக்கு மூன்று விடயங்களைச் சிபார்சு செய்திருந்தார்.



இந்தப் பிரேரணை வருவதற்கு முன்னர் சிறீலங்காவின் சட்டமா அதிபர் இருமுறை அரசியல் கட்சிகள், தமிழ்க் குழுக்கள் என்பவற்றின் பிரதிநிதிகளுடன் கூடி விவாதித்து அதிலிருந்து கிடைத்த பெறுபேறுகளே இந்த மூன்று விடயங்களும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

முதலாவது, கொழும்பில் தற்போது வாழும் தமிழர்களை இரண்டு வகையாக பிரித்த அமைச்சர், முதலாவது பிரிவு கொழும்பில் நிரந்தரமாக பல வருடங்களாக வாழும் தமிழர்கள். இவர்களுக்கு பொலிஸ் நிலையங்களிலுள்ள பதிவுகளே போதும். ஆனால் தற்போதைய நிலையில் விஷேட அடையாள அட்டை இவர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்பதாகும்.

வடக்கு கிழக்கில் எந்தப் பகுதியை இராணுவம் ஆக்கிரமிக்கின்ற போதும் அது முதல் செய்யும்வேலை இராணுவ அடையாள அட்டை வழங்குவதாகும். அத்துடன் வடமாகாணத்திலிருந்து கொழும்புக்குச் செல்ல விரும்பும் மக்கள் இராணுவத்தின் பல்வேறு வடிகட்டல்களின் பின்னரே கொழும்பு செல்ல அனுமதிக்கப்படுகின்றனர். அதாவது, பல்வேறு வழிகளிலும் விசாரணை நடத்தி அவர்கள் "பயங்கரவாதிகள்" இல்லை. அப்பாவிகளே என்று உறுதிப்படுத்திய பின்னர் அனுமதிக் கடிதத்துடனேயே கொழும்பு செல்ல முடிகிறது.

கொழும்பிற்குச் சென்ற பின்பும் பொலிஸ் பதிவு, வதிவிடப்பதிவு என பல்வேறு விதப்பதிவுகள். இவற்றினால் அரசாங்கம் நினைக்கின்ற பலன் கிட்டவில்லையானால், புதிய பதிவுகளாலும், அடையாள அட்டைகளாலும், கணனி மயப்படுத்தலாலும் புதிதாக என்ன கிட்டப் போகிறது? என்பது அமைச்சர் பீரிஸூக்கு மட்டுமே தெரிந்த விடயம்.

வடக்கிலிருந்து கொழும்பிற்குச் செல்பவர் தேசிய அடையாள அட்டை, கொழும்பு செல்வதற்கான அனுமதிக் கடிதம், கொழும்பில் பொலிஸ் பதிவு, வதிவிடப்பதிவு



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவற்றுடன் கொழும்பில் கொடுக்கப்படும் தற்காலிக அடையாள அட்டையையும் கொண்டுசெல்ல வேண்டிய நிலையே ஏற்படும். இதில் ஏதாவது ஒன்றை தவறவிட்டால் அல்லது மறதியாக விட்டுச்சென்றால் அதற்காகவே கைதாக வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவார். அதாவது தமிழர் ஒருவர் கைது செய்யப்படுவதற்கு புதிய ஒரு காரணம் உருவாகிறது என்பதே இதனால் விளையப்போகிறது.

அடுத்ததாக கொழும்பில் நிரந்தரமாக வாழும் தமிழர்களின் குழுக்களை அமைத்து அவர்கள் மூலம் அப்பாவிகளை இனம் காணல் என்பது நடைமுறையில் எவ்வளவு தூரம் சாத்தியமாகக்கூடும்? கொழும்பில் நிரந்தரமாக வாழும் இவர்களுக்கு வடக்கு கிழக்கு மாகாணங்களிலிருந்து செல்லும் எத்தனை பேரை தெரியப்போகிறது? எனவே இவர்களை ஏனையோரின் சிபார்சு அல்லது லஞ்சம் மூலம் அணுகும் நிலையே ஏற்படும்.

இதேவேளை கொழும்பில் வாழ்வோர் தொடர்பான பதிவுகள் ஏற்கனவே பொலிசார் வசம் உள்ளது. தமிழர் ஒருவர் கைது செய்யப்படும் போது இப்பதிவுகள் பரிசீலிக்கப்பட்டே அவர் மீது மேல் நடவடிக்கை எடுக்கப்படுவதாக கூறப்படுகிறது.

ஆனால் இவ்வாறான பதிவு செய்யும் நடைமுறை கடந்த 15 வருடங்களாக காலத்துக்கு காலம் இறுக்கமாக்கப்பட்டு வந்தும், கொழும்பில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்கள் குறைந்தபாடில்லை. குண்டு வெடிப்பில் சம்பந்தப்படுபவர்கள் மிகத் திருத்தமான பதிவுகளைக் கொண்டிருப்பதாகவும் அண்மையில் விமானப்படைத் தலைமை அலுவலகம் முன்னால் குண்டு வெடிப்பை நடத்தியவர் மூன்று முறை சுற்றிவளைப்பின் போது கைதாகி பின்னர் விடுவிக்கப்பட்டவர் என்றும் சிறீலங்காவின் சட்டமா அதிபர் கூறியுள்ளார். எனவே இத்தகைய தகவல்களை கணனிமயப் படுத்துவது என்ன பயனை விளைவிக்கப் போகிறது?

**வவுனியாவில் நலன்புரி நிலையங்கள் என்ற பெயரில் தடுப்பு முகாம்களை அமைத்துள்ள சந்திரிகா அரசாங்கம் கொழும்பிலும் அவ்வாறே அமைத்து தமிழ் மக்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த மேற்கொள்ளும் முயற்சியே இது.**

இவை எல்லாவற்றுக்கும் மேலாக கொழும்பில் அரசாங்கமே விடுதிகளை அமைத்து அவற்றில் மட்டுமே தமிழர்கள் தங்கலாம் என்ற நடைமுறையையும் ஏற்படுத்தப்போவதாக அரசாங்கம் அறிவித்திருக்கிறது. இதற்கு தமிழர்கள் சுகாதார வசதிகளற்ற விடுதிகளில் தங்குகிறார்கள். இந்தக் குறைபாட்டைப் போக்கவே இத்திட்டம் என்றும் சொல்லப்படுகிறது.

ஆனால் கூறப்படும் காரணம் என்னவாக இருப்பினும் இது கொழும்பில் சென்று தங்கும் தமிழர்களை கண்காணிக்க மேற்கொள்ளும் நடவடிக்கை என்பது வெளிப்படையானதாகும். ஆனால், கொழும்பிற்கு சென்று தங்கும் தமிழர்கள் அனைவருக்கும் அரசாங்கம் விடுதி அமைத்துக் கொடுப்பது என்பது உடனடிச் சாத்தியமற்ற ஒன்றாகும். அத்துடன் வவுனியாவில் நலன்புரி நிலையங்கள் என்ற பெயரில் தடுப்பு முகாம்களை அமைத்துள்ள சந்திரிகா அரசாங்கம் கொழும்பிலும் அவ்வாறே அமைத்து தமிழ் மக்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த மேற்கொள்ளும் முயற்சியே இது.

எனவே அரசாங்கம் இவ்வாறு காலத்துக்கு காலம் அறிவிக்கும் திட்டங்கள் தமிழ் மக்களின் சுமைகளைக் குறைப்பதாக வெளியுலகிற்கு காட்டும் அதேவேளை, அவர்களின் சிரமங்களை அதிகரிப்பனவாகவே உள்ளது. மறுபக்கம் இத் திட்டங்களால் அரசாங்கத்திற்கு எதுவித நன்மையும் கிட்டுவதில்லை.

அதேவேளை, இத்திட்டங்கள் ஒருபுறமிருக்க சட்டங்கள் நடைமுறைகள், அறிவிப்புக்கள் என்பவற்றை மீறி படையினரின் அத்துமீறல்கள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. உதாரணமாக கொழும்பிலுள்ள சோதனைச் சாவடியில் நிற்கும் ஒரு சிப்பாயிற்கு தமிழர் ஒருவருக்கு பொலிசார் வழங்கிய வதிவிட அனுமதியைக் கோரி பரிசீலிக்க அதிகாரமில்லை என சட்டமா அதிபர் கூறுகிறார். ஆனால், நடைமுறையில் அனுமதிப்பத்திரத்தை வைத்திருக்காத தமிழர்கள் கைதுசெய்யப்படுகின்றனர்.

நள்ளிரவுக் கைதுகள், சுற்றி வளைப்பின்போது குடியிருப்பாளர்களைப் படம்பிடித்தல், ஆயுதம் இருப்பதாக சந்தேகிக்கும் கட்டடங்களை இடித்தல் என்பவற்றுக்கு எந்தச் சட்டத்தின் கீழும் படையினருக்கு அதிகாரமில்லை என சிறீலங்காவின் அதிகார தரப்பு வெளிக்கு கூறுகிறது. ஆனால் நடைமுறையில் இவை அனைத்தும் தாராளமாகவே நடைபெறுகின்றன.

இந்த நிலையில் அரசாங்கம் வெளியிடும் இந்த அறிவிப்புகள், தமிழர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு உடனுக்குடன் பரிகாரம் காண்பது போல காட்டவே உதவுகிறது. அத்துடன் மிகப்பெரும் அநீதிகள் அவமானங்களை தாங்களே செய்துவிட்டு இப்பொழுது அப்படிச் செய்வதில்லை எனக் கூறுவதும் உலகை ஏமாற்றும் செயல்களே ஆகும்.

**வேலவன்**



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யாழ் குடாநாட்டின் மீது 1995–இல் பாரிய படையெடுப்பை சந்திரிகா குமாரதுங்கா தலைமையிலான சிறீலங்கா அரசு நடத்தியபோது கூறப்பட்ட காரணங்களில் ஒன்றாக இப்படை நடவடிக்கையானது யாழ். மக்களை விடுதலைப் புலிகளின் பிடியிலிருந்து மீட்பதே எனத் தெரிவிக்கப்பட்டது. அதாவது, புலிகளின் ஒடுக்குமுறையில் இருந்து தமிழ் மக்களை 'சுதந்திர மனிதர்கள்' ஆக்குவதே குறிக்கோள் எனக் கூறப்பட்டது.

ஆனால் விடுதலைப் புலிகள் இயக்கமே தமிழ்மக்களின் விடுதலைக்காகப் போராடும் இயக்கம் என்பதைப்புலிகள் இயக்கம் அழிந்து போயிருக்கவேண்டும். ஆனால் அவ்வாறு எதுவும் ஏற்படாது விடுதலைப் புலிகள் இயக்கம் என்றும் நிலைத்து நிற்பதோடு பெரும் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதென்பதும் அது மக்கள் ஆதரவு பெற்ற – மக்களுக்காகப் போராடும் விடுதலை இயக்கம் என்பதனாலேயே ஆகும்.

ஆகையினால் தமிழ் மக்களின் அரசியல் சுதந்திரத்தை அங்கீகரித்து அவர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதானால் அதனை மேற்கொள்ள விரும்பும் சிங்கள ஆட்சியாளர்கள் எவருமே விடுதலைப்புலிகளுடனேயே வெளியேற்றிய பின்னர் அரசாங்கம் தமிழ் மக்களின் பொருளாதார – சமூக வாழ்வு மேம்படவும் கலை, கலாச்சார நிகழ்வுகள் மேம்படுவதற்குமான நடவடிக்கைகளை மேற்கொண்டதா? ஆனால், அங்கிருந்து வரும் தகவல்கள் எவையுமே அங்கு இடம்பெற்றதாக தெரிவிக்கவில்லை. அவ்வாறானால் அங்கு கிடைக்கும் சுதந்திரம்தான் என்ன? அங்கு சுதந்திரம் பெற்றவர்களாக உள்ளவர்கள் யார்?.

அங்கு உண்மையில் சுதந்திர மனிதர்கள் என்று நடமாடுபவர்கள் தேசத்துரோகிகள் ஆகும். தமிழ் மக்களின் விடுதலைக்கான போராட்

# குடாநாட்டில் சுதந்திரம் பெற்ற துரோகிகளும் – சமூக விரோதிகளும்

தும் தமிழ் மக்கள் சுதந்திரமாகவும், பாதுகாப்புடனும் வாழவேண்டும் என்பதோடு, ஓர் உன்னத சமுதாயமாக உருவாகவேண்டும் என்ற அடிப்படை இலட்சியத்துடன் போராடும் இயக்கம் என்பதும் பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயமாகும். இதன் அடிப்படையிலேயே விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு தமிழ் மக்கள் தமது ஆதரவை அளித்து வந்தனர்/ வருகின்றனர்.

அவ்வாறு இல்லாவிடில் விடுதலைப்புலிகள் இயக்கம் தமக்கு எதிராக வந்த அரசியல் சவால்களையோ அன்றி இராணுவ சவால்களையோ எதிர்த்து போரிட்டிருக்கவோ பெரும்பாலானவற்றில் வெற்றிகொண்டிருக்கவோ முடியாது. ஆகக் குறைந்தது இந்திய இராணுவம் இலங்கையில் நிலைகொண்டிருந்த போதே விடுபேச்சுவார்த்தைகளை நடத்தவேண்டும். தமிழ் மக்களின் சுதந்திர வாழ்வை உறுதிப்படுத்த வேண்டும்.

ஆனால், தமிழ் மக்களை விடுவிக்கப் போவதாகக் கூறிய சந்திரிகா அரசாங்கம் யாழ். குடா நாட்டின் மீது இராணுவத்தை ஏவியது. உலகின் எப்பகுதியிலுமே ஓர் இனத்தின் மீது இராணுவ மேலாதிக்கத்தை நிலை நிறுத்துவதை அவ்வினத்தின் விடுதலைக்கான நடவடிக்கை எனச் சித்தரித்துக் காட்டுவதில்லை. அவ்வாறு காட்ட முனைந்தும் வெற்றி பெற்றதும் இல்லை. ஆனால் சந்திரிகா குமாரதுங்க அரசாங்கமோ தமது நடவடிக்கை தமிழ் மக்களை விடுவிப்பதற்கான நடவடிக்கை என்றே கூறியது.

அவ்வாறானால், விடுதலைப் புலிகளை குடாநாட்டில் இருந்து டம் என கூறிக்கொண்டு ஆயுதம் தாங்கிய சில குழுக்கள் பிற்காலத்தில் தேசவிரோதிகளாகவும், சமூக விரோதிகளாகவும் மாறினர். அரசியல் ரீதியாகவும் – இராணுவ ரீதியாகவும் தமிழரின் விடுதலைப் போராட்டத்தைக் காட்டிக் கொடுக்க முயன்ற இக்குழுக்கள் விடுதலைப் புலிகளினாலும், தமிழ் மக்களினாலும் தமிழர் தாயகத்தில் இருந்து வெளியேற்றப்பட்டனர்.

அவ்வாறு இல்லாது இத்தமிழ் குழுக்கள் மக்கள் உரிமைகளுக்கான போராட்டத்தை நடத்தியிருந்தாலோ அன்றி மக்கள் விரோத செயல்களில் ஈடுபடாது இருந்தாலோ அவர்கள் ஒருபோதும் தமிழர் பிரதேசத்தில் இருந்து வெளியேற வேண்டிய தேவை வந்திருக்காது. வெளியேற்றியிருக்கவும் முடியாது. எவ்வளவு



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நெருக்கடிகள் வந்தபோதும் விடுதலைப்புலிகள் இயக்கம் தமிழர் தாயகத்தில் இருந்து வெளியேற்ற முடியாமல் போனதையோ இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

இவ்வாறு மக்கள் விரோத சக்திகளாக செயற்பட்டதினால் வெளியேற்றப்பட்டவர்களே இன்று யாழ். குடாநாட்டில் 'சுதந்திரமான' மனிதர்களாக ஆக்கப்பட்டுள்ளார்கள். அதாவது தமிழர் விடுதலைப் போராட்டத்தினை தமது சுயநலத்திற்காகக் காட்டிக் கொடுத்தவர்களே இன்று யாழ் குடாநாட்டில் சுதந்திர மனிதர்களாகவும், சுதந்திரம் பற்றிப் பேசுபவர்களாகவும் பவனி வந்து கொண்டிருக்கிறார்கள்.

அடுத்ததாகச் சந்திரிகா அரசாங்கத்தினால் சுதந்திரமாக விடுவிக்கப்பட்டவர்கள் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் யாழ். குடாநாட்டில் அடக்கி ஒடுக்கப்பட்ட சமூக விரோதிகளாகும். அதாவது, கயவர்களும், கசிப்பு வியாபாரிகளும், சமூகத்தை சீர்கெடுக்கும் திரைப்படங்களை வெளியிடுவோரும், சமூகநல நோக்கற்ற சுயநலமிகளுமே ஆகும்.

யாழ்.குடாநாட்டில் இருந்து இன்று வெளிவரும் பத்திரிகை ஒன்று விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் யாழ்.குடாநாடு இருந்த காலம் என எழுதாது விடிலும் இரண்டு வருடங்களுக்கு முன்னர் கட்டுப்பாடுகளுடனும், ஒழுக்கத்துடனும் இருந்த யாழ் சமூகம் இன்று பெரும் சமூகச் சீரழிவை நோக்கிப் போய்க்கொண்டு இருக்கின்றது. கேட்பதற்கு யாரும் அற்ற நிலையே நிலவுகின்றது. பெற்றோரே உமது பிள்ளைகளில் நீங்கள் கவனமாக இருங்கள் என பெற்றோரை எச்சரிக்கின்றது.

இதனையே யாழ்.குடாநாட்டில் உள்ள சமூக நலன் விரும்பிகள் கூட தமக்குக் கிடைக்கும் சந்தர்ப்பங்களில் மேடைகளிலும், கூட்டங்களிலும் எச்சரிக்கின்றனர். இன்று போதைப் பொருள் பாவனையில் இருந்து மோசமான ஆபாசத் திரைப் படங்கள் வரை யாழ். சமூகத்தைச் சீரழிக்கத் தொடங்கியிருப்பதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

அந்தளவிற்கு யாழ். குடாநாட்டில் சமூகச் சீர்கேடும் கலாச்சார அழிவுமே வேகமாகியுள்ளது. சந்திக்கு சந்தி கசிப்புக் கடைகள். இக்கடைகள் நடத்தப்படுவதற்கு கட்டுப்பாடோ அன்றி யார் யாருக்கு விற்பனை செய்யக்கூடாது என்ற கட்டுப்பாடோ இல்லை. இதனால், கசிப்பானது யாழ். குடாநாட்டில் எங்கும் பரந்து விரிந்து ஆறாக ஓடுகின்றது. இதைத் தவிர சாராய பார்களும் போதிய அளவில் உள்ளன.

**அண்மையில் ஒரு பிரபல பாடசாலைக்கு அண்மைாக ஆபாசத் திரைப்படங்கள் திரையிட்ட ஓர் வீடியோத் திரையரங்கு குறித்து செய்தி வெளியிட்டமைக்காக அத் திரையரங்கு உரிமையாளர் பத்திரிகைக்கு எதிராக சுவரொட்டிகளை ஒட்டிப் போராட்டம் நடத்தினாராம்.**

ஏற்கனவே தட்டுப்பாடாகவும், கட்டுப்பாடாகவும் இருந்த 'சிகரட்'டும் போதிய அளவில் பாவனைக்கு வந்துள்ளது. பாடசாலை மாணவர்கள் பாடசாலை சீருடையுடன் சந்திகளில் நின்று சிகரட் புகைக்கும் நிகழ்வு சாதாரணமாகியுள்ளது. என யாழ். பத்திரிகை ஒன்று தெரிவிக்கும் தகவலானது மாணவர் சமுதாயம் எங்குநோக்கி விரைந்து கொண்டிருக்கின்றது என்பதைக் காட்டுவதாகவே உள்ளது.

இதே போன்றே வீடியோ சினிமாக்களும் வீட்டிற்கு வீடு முளைத்துள்ளன. யாழ் நகர்ப் பகுதியில் 125 வரையில் வீடியோ சினிமாக்கள் உள்ளன. இவை காலை, மாலை என்ற கட்டுப்பாடு மட்டுமல்ல எந்த வகையிலான படங்களைத் திரையிடுதல் என்ற கட்டுப்பாடுமின்றி படங்களைத் திரையிடுகின்றன. அண்மையில் ஒரு பிரபல பாடசாலைக்கு அண்மையாக ஆபாசத் திரைப்படங்கள் திரையிட்ட ஓர் வீடியோத் திரையரங்கு குறித்து செய்தி வெளியிட்டமைக்காக அத் திரையரங்கு உரிமையாளர் பத்திரிகைக்கு எதிராக சுவரொட்டிகளை ஒட்டிப் போராட்டம் நடத்தினாராம். இவ்வாறாக வீடியோ சினிமாக்கள் யாழ் இளைஞர் யுவதிகளை கலாச்சாரச் சீரழிவை நோக்கி வெகுவேகமாக இழுத்துச் செல்கின்றது என கவலைகள் வெளியிடப்படுகின்றன.

இவை தவிர திருட்டுக்கள் சர்வ சாதாரணமானவை. திருட்டுக் கொடுத்தவர்கள் இராணுவத்திலோ அன்றி பொலிசிலோ முறையிடவும் அச்சம். ஏனெனில், திருட்டுக் கொடுத்தவர்களைத் திருடியவன் 'புலிகளுடன் தொடர்புடையவர்கள்' என சிக்கவைத்துவிடுவான். இதனால் தனது சொந்தப் பொருளைத் திருடிச் செல்பவரைக் கூட தடுத்து நிறுத்தவோ அன்றி முறைப்பாடு செய்து நீதி விசாரணைக்கு உட்படுத்தவோ முடியாத அவலம்.

இந்த வகையில் சந்திரிகா அரசாங்கம் தேசவிரோதிகளுக்கும் சமூக விரோதிகளுக்குமே யாழ்.குடாநாட்டில் சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்துள்ளது. அத்தோடு தமிழ் சமுதாயத்தின் கலைபண்பாட்டுச் சீர்கேட்டிற்கும் அது வழிவகை செய்து கொடுத்துள்ளது. அதாவது தமிழ் சமுதாயம் ஓர் ஆரோக்கியமான விடுதலை உணர்வு கொண்ட சமுதாயமாக இருப்பதை மாற்றி ஒரு சீரழிவு மிக்க சமுதாயமாக, விடுதலை உணர்வை இழந்த சமூகமாக உருவாக்கும் நோக்குடனேயே சந்திரிகா அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது. இது எதிர் காலத் தமிழ் சமூகத்தின் விடுதலை உணர்வை இல்லாது ஒழித்துவிடும் நோக்கம் கொண்டதாகும்.

ரமணன்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வரலாறு


# நாற்பது ஆண்டுகளும் தமிழர்களும்

**மே 22 தமிழர்கள் வரலாற்றிலே ஒரு முக்கிய பதிவாகின்றது. புதிய தசாப்தத்தின் திறவுகோலாகவும் அமைகிறது. இந்த நாளை தமிழன் எவனும் மறந்துவிட முடியாது. இந்த கறைபடிந்த நாள்தான் எம் தலைவனின் மனத்திரையிலும் ஆழமான வடுவாக பதிந்தது. இன்றைக்கு 40 ஆண்டுகள் முன்னே சென்றால் அந்த கறைபடிந்த வரலாறு கண்கூடாகத்தெரியும்.**

இலங்கைத் தேசத்தை உரு வாக்காது சிங்கள தேசத்தை உருவாக்கும் சட்டம். அதுதான் தனிச் சிங்களச் சட்டம். 1958 ஜூன் பாராளுமன்றம் நோக்கி வந்தது. இச் சட்டத்திற்கு ஆதரவாக 66 பேரும், எதிராக 29 பேரும் வாக்களித்தனர். இதனைத் தொடர்ந்து இரண்டு முக்கிய நிகழ்வுகள் நடைபெற்றன. ஒன்று தமிழிற்கு கூடுதலான உரி மைகள் வழங்கக்கூடாது எனக்கோரி பொருளியல்துறை பேராசிரியர் எப். ஆர்.ஜெயசூரியா பாராளுமன்ற வளாகத்தினுள் உண்ணாவிரதம் நடாத்தினார். அடுத்தது தமிழரசுக் கட்சியினர் காலிமுகத்திடலில் நடாத் திய சத்தியாக்கிரக போராட்டம்.

உண்ணாவிரதம் இருந்த ஜெய சூரியா பத்திரிகையினருக்கு பேட்டி யளிக்கையில் பிரதமர் பண்டார நாயக்கா இலங்கைத் தீவை தென் னிந்தியாவின் ஒரு பகுதியாக மாற்ற முனைகின்றார் எனக் குற்றம் சாட் டினார். பின்னர் பண்டாரநாயக்க ஜெயசூரியாவைச் சந்தித்த போது உண்ணாவிரதம் கைவிடப்பட்டது. இவ் உண்ணாவிரத போராட்டத்தில் ஒரு உள்நோக்கம் அடங்கியிருந்தது. அதாவது சிறீலங்கா சுதந்திர கட்சி யினரும் சிங்களப் பேரினவாதிகளும் கொண்டு வந்த தனிச் சிங்களச் சட்டத்தை நியாயப்படுத்துவதற்கு அவர்களால் மேற்கொள்ளப்பட்ட ராஜதந்திர நடவடிக்கை இவ் உண் ணாவிரதப் போராட்டம்.

ஆனால் அரசுக்கு முன்கூட்டியே அறிவித்து விட்டு காலிமுகத்திடலில் நடாத்தப்பட்ட சத்தியாக்கிரகப் போராட்டம் பொலிசார் முன்னி லையிலேயே சிங்களப் பேரினவாதிக ளால் சத்தியாக்கிரிகள் தாக்கப் பட்டு காயப்படுத்தப்பட்டு குழப்பப் பட்டது. இப் போராட்டம் தொடர் பாக சிங்கள மக்களைத் தூண்டி விடும் வகையில் பிரதமர் பண்டார நாயக்கா வானொலியில் உரையாற்றி






தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

னார். எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தலைமையில் தமிழர் படை பாராளு மன்றத்தை கைப்பற்ற வருவதை தவறாகவே விளங்கிக் கொண்டு கொதிப்புற்று தமிழர்களைத் தாக்கி னர். பாராளுமன்றத்தையும் சுற்றி பெரும் திரளான சிங்கள மக்கள் குவிந்தனர். இந் நிகழ்வுகளால் தனிச் சிங்களச் சட்டம் தொடர்பாக எழுந்த பதற்ற நிலையை சிங்களப் பேரினவாதம் தமக்கு சாதகமாகவே பயன்படுத்திக்கொண்டது.

இந் நடவடிக்கையினை எதிர்த்து தமிழரசு கட்சியினர் திருமலை யாத்திரை சென்றனர். இப்பிரச் சினை தொடர்பாக தீர்வு காணும் பொருட்டு அரசுக்கு ஒரு வருட காலக்கெடு விதித்தனர். தவறின் போராட்டத்தில் ஈடுபடப்போவ தாகவும் அறிவித்தது. காலக்கெடு முடிவுறும் கட்டத்தில் ஒரு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இதனை எதிர்த்து ஜே.ஆர்.ஜெயவர்த்தனா மேற்கொண்ட கண்டியாத்திரையும் புத்தபிக்குகளின் நெருக்கடிகளும் வற் புறுத்தல்களும் 09.04.1958–ல் ஒப்பந் தத்தை கிழித்தெறிய வைத்தது.

இதே காலப் பகுதியில்தான் தென்னிலங்கையில் ஏற்பட்ட பொரு ளாதார நெருக்கடி வேலை நிறுத்தம் வரைசென்று அரசிற்கு பெரும் பிரச்சினைகளை ஏற்படுத்தியது. இதனைக் கலவரமாக்கி, இராணு வத்தை அனுப்பி அடக்கியும் கொண் டது. அத்துடன் இது தமிழரின் சதி என்றும் பிரசாரப்படுத்தியது. இதில் வெற்றியும் கண்டது.

தென்னிலங்கையில் ஏற்படும் அர சியல் நெருக்கடிகளைத் தீர்க்க சிங்க ளப் பேரினவாதம் தமிழர்களை தாக்குவதும் கொல்வதுமே அதற் குரிய தீர்வாக வகுத்துக் கொள்கிறது. இது, இன்று தொடர்வதை நாம் அறிவோம். இப்படியாக அன்று தென்னிலங்கையில் ஏற்பட்ட அரசி யல் நெருக்கடிகளைத் தீர்க்க ஒரு திட்டம் வகுத்தது. அது வதந்தி அடிப்படையில் எழுந்தவையாகும். வவுனியா, மட்டக்களப்பு, திருமலை பகுதியில் இருந்து தமிழர் படை தென்னிலங்கையில் உள்ள முக்கிய கேந்திர நிலையை கைப்பற்றவருவ தாகவும் சிங்கள ஆசிரியை ஒருத்தி யின் மார்புகள் அறுக்கப்பட்டு கொல் லப்பட்டதாகவும், தனிப்பட்ட கார ணங்களுக்காக கொல்லப்பட்ட முன் னாள் மேயர் கெனிவரசன்னா தமிழர்களால் இனக்கொலை செய் யப்பட்டார் என வதந்திகள் பரவி யது. இவ்வேளையில் பண்டார நாயக்கா வானொலி மூலம் ஆற்றிய உரை வதந்திகளுக்கு மெருகூட்டுவது போலவும் அது கொழுந்துவிட்டு எரிவதற்கும் வாய்ப்பாக அமைந் தது. ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக




தூண்டப்பட்டு தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த சிங்களப் பேரின வாதம் இவ் வதந்தியை அடுத்து தனது கோர தாண்டவத்தை கட்ட விழ்த்துவிட்டது. இவ் இனக் கலவ ரம் எப்போதும் வெடிக்கக் கூடிய தயார் நிலையில் இருந்தாலும் அன்று வெடிப்பதற்கு உடனடிக் காரணமாக அமைந்தது இவ் வதந்தி யேயாகும்.

**அருணா**

கறைபடிந்த அந்த வரலாறு 22.05.1958 அன்று அரங்கேறியது. தமிழர் பிரயாணம் செய்த புகை யிரதம் வழிமறிக்கப்பட்டு தாக்கப் பட்டதன் விளைவாக பலர் உயிரி ழந்தனர், இதேவேளை வெவ்வேறு பகுதிகளில் தமிழர்கள் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டு, பெண்கள் வயது பேதமின்றி பாலியல் வல் லுறவுக்குட்படுத்தப்பட்டு, குழந்தை கள், முதியவர்கள் என்ற வயது பேதமின்றி கொதிக்கும் தாரப் பீப் பாக்களில் போடப்பட்டு கொலை செய்யப்பட்டனர். அத்துடன் அவர் களின் சொத்துக்களும் சூறையாடப் பட்டன.

உடுத்த உடையுடனேயே தமிழன் அலைந்தான். இந்த கோர நிகழ்வில் தமிழர்கள் பெரும் எண்ணிக்கையில் கொல்லப்பட்டனர்.

அப்போது பிரதமர் பண்டார நாயக்காவை சந்தித்த ஒரு குழுவினர் நிலைமைகளை விளக்கினர். நிலை மைகளை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர அவசரகால நிலையை பிறப்பிக்குமாறு கேட்டனர். அதற்கு அவர் மறுத்துவிட்டார்.

கலவரம் வெடித்து ஆறு நாட்க ளின் பின்னரே அவசரகால நிலை பிறப்பிக்க உத்தரவிட்டார். தமிழன் பட்ட அந்த அவலத்தைக் கண்டு சிங்களப் பேரினவாதம் பெருமைப் பட்டுக் கொண்டது. இவ் இனப்படு கொலைக்கு தூபம் இட்டவர் அப்போதைய பிரதமரான பண்டார நாயக்கா. தந்தை தொடக்கி வைத்த இனப்படுகொலை மகளின் ஆட்சி யில் என்றும் இல்லாதவகையில் இன்று விஸ்வரூபம் எடுத்துள்ளது.

இந்த கறைபடிந்து போன கோர நிகழ்வு நாள் தமிழீழ தேசியத் தலைவ ரின் மனதில் ஆழமாகப் பதிந்து அவரைப் போராடத் தூண்டியதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

1958–ல் ஏற்பட்ட அனர்த்தத்தின் அனுபவம் தமிழ்மக்களுக்கு ஒரு தனியான அரசின் தேவையை



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வலியுறுத்தியது. இதன் அடிப்படையிலேயே 14.05.1975–ல் நடைபெற்ற வட்டுக்கோட்டை மகாநாடு தமிழனுக்கு ஒரு தனியரசை பிரகடனப் படுத்தியது. இதனை முன்வைத்து 1977–ல் நடந்த பொதுத் தேர்தலில் தமிழீழ தனியரசுக்கான அங்கீகாரத்தினை தமிழ்மக்கள் வழங்கினார்கள். அதைப்பொறுக்க முடியாத சிங்களம் மீண்டும் அதாவது 1977 ஐப்பசியில் மீண்டும் ஒரு இனப்படு கொலையை நடாத்தி பெரும் எண்ணிக்கையில் கொன்று குவித்தது. இதன் பின்னர் நடைபெற்ற 1981–1983 கலவரங்கள் ஆயுதப் போராட்டத்தினை முனைப்படையச்செய்தது. இக் கலவரங்கள் தமிழ் மக்களை தமிழீழம் நோக்கிய பயணத்திற்கு தயார்படுத்தியது.

1958–ம் ஆண்டு இக் கலவரம் நடைபெற்று கடந்த மே 22 உடன் 40 ஆண்டுகள் பூர்த்தியாகின. இந்த 40 ஆண்டுகளில் சிங்களப் பேரினவாதம் சாதித்தது தான் என்ன? மாறாக உலகம் வியக்கும் தலைவர் தமிழ் மக்களுக்கு கிடைத்திருக்கின்றார்.

தியாகத்துக்கே இலக்கணம் கூறும் ஓர் தமிழர் சேனை உருவாகியிருக்கின்றது.

40 ஆண்டு பூர்த்தியாகும் வேளையில் தமிழீழ தேசத்தின் இதயமாகிய வன்னி நிலப்பரப்பில் ஜெயசிக்குறு என்னும் பெயருடன் பெரும் இராணுவ நடவடிக்கையை சிறீலங்கா ஆரம்பித்தது. ஆனால் நடந்தது என்ன? வைத்த காலை எடுக்க முடியாமல் திணறிக் கொண்டிருக்கிறது. 190 வருடங்களுக்கு முன் அன்னிய ஏகாதிபத்திய படைகளுடன் வாள் கொண்டு போராடி வீரசுவர்க்கம் அடைந்த பண்டார வன்னியன் மண்ணிலேயே தமிழர் சேனை இன்று புதிய சரிதம் வரைகிறது. அன்றும் இன்றும் காலம் மாறுபட்டாலும் தமிழர்களின் வீரமும் தியாகமும் இம்மியளவும் மாறவில்லை. மாறாக புத்துயிர் பெற்றுள்ளது. 40 ஆண்டுகளுக்கு முன் சிங்களப் பேரினவாதம் இதே தமிழனில்தான் தான் நினைத்ததை எல்லாம் பரீட்சித்துப் பார்த்தது. ஆனால் அதே தமிழன்தான் இன்று போர்க் கோலம் பூண்டு நிற்கின்றான். பெரும் எடுப்பிலேயே ஆரம்பித்த ஜெயசிக்குறு நடவடிக்கையை வன்னிக்காட்டிலே முடக்கி வைத்திருக்கிறான். ஜெயசிக்குறு ஆரம்பித்து ஓராண்டுப் பூர்த்தி வெற்றி விழாவாக கொண்டாடுகிறான். தமிழரின் வீரம், தியாகத்தைக் கணக்கிடத் தவறி அன்று ஒரு சிங்களப் பேரினவாதம் கூக்குரல் இட்டது. 'போர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம்' இன்று காலம் மாறிப் போய் விட்டது. போரைக் கட்டவிழ்த்து விட்ட உங்கள் முற்றத்திற்கே போர் விரிந்து வந்துவிட்டது. அன்றைய காலம் வேறு இன்றைய காலம் வேறு; இது பிரபாகரனின் யுகம். போரைத் தொடக்கியவர்களே போரை நிறுத்த வேண்டும். எமது போராட்டம் உயிர்வாழ்வதற்கான போராட்டம். இந்த 40 ஆண்டு காலத்தில் எம்மை நாமே பார்க்கின்றோம்.

> இது பிரபாகரனின் யுகம்.போரைத் தொடக்கிய வர்ளே போரை நிறுத்த வேண்டும். எமது போராட்டம் உயிர்வாழ்வதற்கான போராட்டம். இந்த 40 ஆண்டு காலத்தில் எம்மை நாமே பார்க்கின்றோம். இரண்டு கால்களையும் சேர்த்து நின்று பார்க்கின்றோம். நாங்கள் வளர்ந்துவிட்டோம். நன்றாக வளர்ந்து விட்டோம்



மற்றவர்கள் இன்புற்றிருக்க வேண்டும் என்பதற்காக தன்னை இல்லாதொழிக்கத் துணிவது தெய்வீகத் துறவறம். அந்தத் தெய்வீகப் பிறவிகள்தான் கரும்புலிகள்.

– தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

இரண்டு கால்களையும் சேர்த்து நின்று பார்க்கின்றோம். நாங்கள் வளர்ந்துவிட்டோம். நன்றாக வளர்ந்து விட்டோம்.

அந்த கறைபடிந்து போன வரலாற்றில் உயிர் கொடுத்த எம் தமிழ் உடன் பிறப்புக்களே உங்கள் மரணம் வீண் போகவில்லை. உங்களுடைய மரணம்தான் தமிழினத்துக்கு உலகம் வியக்கும் ஒப்பற்ற மாபெரும் காலத்தின் தலைவனைத் தந்திருக்கின்றது. அந்தத் தலைவரினால்தான் தமிழர் தேசம் பலம் பெற்றிருக்கிறது. நீங்கள் உயிர் கொடுத்த அந்த வேளை நாங்கள் உங்கள் பக்கத்தில் இல்லை. உங்கள் முகங்கள் எங்களுக்கு தெரியாது. ஆனால் நீங்கள் தந்துவிட்டுப் போன அந்த தலைவரின் முகத்தில் உங்களையும் அவரின் மனத்தின் வெளிப்பாட்டின் உங்கள் உள்ளத்தின் உணர்வுகளையும் நாங்கள் பார்க்கின்றோம். அவருடைய வழியில் தமிழர் தேசம் செல்கின்றது. சுதந்திர தமிழீழ தேசத்தில் உங்கள் நினைவுகள் என்றும் வாழும்.

★★★



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஜே.வி.பி.யின் மூன்றாவது கிளர்ச்சி;

## அரசின் ஒடுக்கு முறைக்கான "அலாரம்"?

மூன்றாவது தடவையாகவும் ஜே.வி.பி யினர் நாட்டில் ஆயுதக் கிளர்ச்சியொன்றை நடத்தத் தயாராகி வருகின்றனர் என்ற ஒரு பிரச்சாரத்தை அண்மையில் சிறீலங்கா அரசாங்கம் முடுக்கிவிட்டுள்ளது. இதற்கு ஆதாரமாக இவ் அமைப்பின் இரகசிய தகவல் துறைப் பிரிவின் முன்னால் தலைவரான கலாநிதி கமால் தர்மதாச என்பவர், "ஜே.வி.பி. உறுப்பினர்கள் தற்சமயம் தொழிற்சங்கங்கள், மாணவர் அமைப்புகள், அரசாங்க நிறுவனங்கள் என்பனவற்றில் ஊடுருவி உள்ளனர். நாட்டில் விரைவில் கிளர்ச்சி ஒன்றை ஆரம்பிப்பதே இவர்களின் நோக்கம்" என தெரிவித்துள்ளதாக அரசாங்கம் கூறுகின்றது.

இதேவேளை சிறீலங்காவின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த "ஜே.வி.பி. யினர் தமக்கு வழங்கப்பட்டுள்ள சுதந்திரத்தை தவறான வழியில் பாவிக்க முற்பட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்" என எச்சரிக்கை செய்துள்ளார்.

மேலும், தான் எடுக்கும் நடவடிக்கைகளுக்காக தன்னை கெட்ட மனிதன் என யாரும் கூறக்கூடாது என்றும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை "நாட்டின்" பல்வேறு பகுதிகளிலும் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்கள், கொள்ளைகளுக்கும் ஜே.வி.பி.யினருக்கும் இடையில் தொடர்பு ஏதும் இருக்கிறதா? என்பது குறித்து சிறீலங்காவின் புலனாய்வுத்துறையினர் ஆராய்ந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆனால், ஜே.வி.பி இயக்கம் மீண்டும் ஆயுதப் போராட்டத்தில் இறங்குமா? அதற்குத்தயார் படுத்துகிறதா? என்பவற்றைவிட அரசாங்கம் இவ்வாறு அறிக்கைகளை வெளியிடுவதன் நோக்கம் என்ன? என ஆராய்ந்தால் இவ்வாறான ஒரு பிரச்சாரம் அரசாங்கத்திற்கு தற்போது முக்கிய தேவையாகவுள்ளது தெரியவரும்.

பல்வேறு வாக்குறுதிகளையும் அள்ளிவீசி ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்ட சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான பொதுஜனஐக்கிய முன்னணி அரசாங்கம் இன்று அவ் வாக்குறுதிகளில் ஒன்றைத்தானும் நிறைவேற்றாத நிலையில் தனது மூன்றாண்டு ஆட்சிக் காலத்தைப் பூர்த்திசெய்துவிட்டது. இனிவரும் காலங்களிலாவது இவ்வாக்குறுதிகளை நிறைவேற்றக்கூடிய நிலையில் அது இல்லை என்றே கூறலாம்.

> "சமாதானத்துக்கான யுத்தத்தை" நடத்தி தமிழ் மக்களின் வாழ்க்கையைச் சீரழித்துவரும் சந்திரிகா அரசாங்கம், யுத்தத்தில் பல பின்னடைவுகளைச் சந்தித்துள்ள நிலையில், தனது பங்கிற்கு சிங்கள இளைஞர்களையும் படுகொலை செய்ய திட்டமிட்டுவருகிறதா?

இந் நிலையில் சந்திரிகா அரசாங்கத்திற்கு எதிரான தொழிற்சங்கப் போராட்டங்கள் முனைப்புப் பெற்று அரசாங்கத்திற்கு நெருக்கடிகளைக் கொடுத்து வருகின்றன. சந்திரிகா அரசாங்கம் தனது ஒரே மூலதனமாகக் கொண்டிருக்கும் யுத்தம் பல பின்னடைவுகளைச் சந்தித்து விரிவாக்கம் பெற்றுக்கொண்டிருப்பதால் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, தொழிலாளர்களின் கோரிக்கைகளுக்கு செவிமடுக்க முடியாத நிலைக்கு அரசாங்கத்தைத் தள்ளியுள்ளது.

இந்நிலையில் தொழிலாளர்கள் நடத்திவரும் போராட்டங்களை அரசாங்கத்திற்கும், நாட்டிற்கும் எதிரான சதி என்று காட்டி அப் போராட்டங்களை இரும்புக்கரம் கொண்டு நசுக்கிவிட அரசு திட்டம் போட்டுள்ளது. இதற்காக இத் தொழிற்சங்கங்களில் ஜே.வி.பி.யினர் ஊடுருவியுள்ளனர் போன்ற தோற்றத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்தி



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஜே.வி.பி.யின் நடவடிக்கைகளை ஒடுக்குவது என்ற போர்வையில் தொழிலாளர் போராட்டங்களை ஒடுக்கிவிட முயல்கிறது.

மேலும் யுத்தத்தினால் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக வேலை வாய்ப்பற்ற இளைஞர்களின் தொகை பெருகி வருகின்றது. இதன் காரணமாக பெருமளவு சிங்கள இளைஞர்கள் விரக்தியடைந்த நிலையில் உள்ளனர். இவர்கள் ஜே.வி.பி.யின் பக்கம் சேர்ந்துவிடுவார்களோ? என்ற அச்சம் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்திற்கு ஏற்பட்டு வருகிறது. அண்மையில் நடந்த மேதின நிகழ்வுகளில் ஜே.வி.பி ஊர்வலங்களிலும் கூட்டங்களிலும் பெருமளவு இளைஞர்கள் கலந்துகொண்டமையும், அரசாங்கம் நடத்திய மேதின நிகழ்வுகளில் எதிர்பார்த்தளவு மக்கள் பங்கேற்காமையும் அரசாங்கத்திற்கு ஜே.வி.பி. குறித்த அச்சத்தை ஏற்படுத்தியிருப்பதாக அவதானிகள் கூறுகின்றனர்.

இந்த நிலையில் எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் பெரும் சவாலை எதிர்நோக்கி இருக்கும் அரசாங்கம் ஜே.வி.பி.யின் வளர்ச்சியைக் கண்டு அஞ்சுவதாகவும் அதனை எவ்வாறாவது ஒடுக்கிவிடுவதற்குத் திட்டம் தீட்டிவருவதாகவும் ஜே.வி.பி.யினர் குற்றம் சாட்டுகின்றனர்.

அண்மையில் இது குறித்து கருத்துக் கூறிய ஜே.வி.பி பிரமுகர் ஒருவர், "அரசியல்வாதிகள் மாகாணசபைத் தேர்தலுக்காக துப்பாக்கிகளைத் துடைத்துக் கொண்டிருக்கின்றனர்" என்றார்.

அத்துடன் அண்மையில் பல்கலைக்கழகம் ஒன்றில் மாணவர்களிடையே ஏற்பட்ட கைகலப்பொன்றை ஜே.வி.பி.யினருடன் சம்பந்தப்படுத்தியிருப்பதையும் ஜே.வி.பி. பிரமுகர் ஒருவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந் நிலையில், எதிர்காலத்தில் எழக்கூடிய தொழிலாளர் போராட்டங்கள், இளைஞர்கள் அமைதியின்மை, பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டங்களை ஜே.வி.பி.யினர் நடத்தும் கிளர்ச்சிகளை அடக்குதல் என்ற ரீதியில் சந்திரிகா அரசாங்கமும் கையாளப் போகிறதா? என்ற கேள்வி எழுகின்றது.

அவ்வாறான ஒரு நிலையைத் தோற்றுவிப்பதற்கான அடித்தளம் இடும் வேலைகளை சந்திரிகா அரசு ஆரம்பித்துவிட்டதாகவே அதன் அண்மைக்கால அறிவிப்புக்களும், நடவடிக்கைகளும் காட்டுகின்றன. உதாரணமாக சுமார் ஒன்றரை மாதத்துக்கும் மேலாக தபால் ஊழியர்கள் நடத்தி வந்த போராட்டத்தை நசுக்க படையினரைப் பயன்படுத்திய அரசாங்கம் கைதுசெய்யப்பட்ட தொழிற் சங்கத் தலைவர்களில் எட்டுப்பேர் ஜே.வி.பி.யினர் என கூறியது.

இவ்வாறாக படிப்படியாக ஜே.வி.பி.யினரையும், இளைஞர்களையும் நெருக்கடிக்குள் தள்ளி, அவர்களை தலைமறைவு வாழ்க்கைக்கு உட்படுத்தி தென்னிலங்கையில் மீண்டும் ஒரு இரத்தகளரியை ஏற்படுத்தவே சந்திரிகா அரசாங்கம் முயலுகிறது. தற்போதைய பிரதமரும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் தாயாருமாகிய சிறிமாவின் ஆட்சிக் காலத்தில் பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட சுமார் 20.000 சிங்கள இளைஞர்கள் அரச படைகளால் கொல்லப்பட்டனர். பின்னர் பிரேமதாசவின் ஆட்சிக்காலத்தில் சுமார் 60 ஆயிரம் சிங்கள இளைஞர், யுவதிகள் கொல்லப்பட்டனர்.

பிரேமதாசவின் ஆட்சிக்காலத்தில் கொல்லப்பட்டவர்களின் எலும்புக்கூடுகளை தோண்டி மக்களுக்கு காட்டி ஆட்சிபீடமேறிய சந்திரிகா அரசாங்கம் கொல்லப்பட்ட இளைஞர்களுக்காக – புதைகுழி எலும்புகளுக்காக – முதலைக்கண்ணீர் வடித்ததை மறந்து புதிய புதை குழிகளை வெட்டத் தயாராகி வருகிறதா? என்பதே இன்றுள்ள கேள்வியாகும்.

"சமாதானத்துக்கான யுத்தத்தை" நடத்தி தமிழ் மக்களின் வாழ்க்கையைச் சீரழித்துவரும் சந்திரிகா அரசாங்கம், யுத்தத்தில் பல பின்னடைவுகளைச் சந்தித்துள்ள நிலையில், தனது பங்கிற்கு சிங்கள இளைஞர்களையும் படுகொலை செய்ய திட்டமிட்டுவருகிறதா?

ரத்வத்த தன்னை "கெட்டமனிதனாக்க வேண்டாம்" என கூறுவது இக்கேள்விகளுக்கு "ஆம்" என்ற பதிலையே தருகின்றது.

**வேலவன்**






தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## சிறுகதை

# உறவு

அலுவலகம்விட்டு அவன் வெளியே வந்த போது ஐந்து மணியாகிக் கொண்டிருந்தது. வெய்யில் நன்றாக குறைந்திருந்தது. மெலிதாய் காற்றுக்கூட வீசியது.

கிளிநொச்சியிலிருந்து இடம்பெயர்ந்து வந்த பிறகு இந்தக் காணிக்குள் நீளம் நீளமாய் கொட்டில்கள் போடப்பட்டு அலுவலகம் இயங்கிக் கொண்டிருந்தது, அரச அலுவலகங்களுக்கும் அவல நிலைதான். இப்போது இன்னொரு கிளிநொச்சியாக ஸ்கந்தபுரம் உருமாறியிருக்கிறது. கிளிநொச்சியிலிருந்து பத்து மைல் தூரம் உட்புறமாக உள்ள இந்த இடம் கூட பாதுகாப்பானதா என்று தெரியவில்லை.

இப்போது இரண்டு நாளாக உளவு விமானம் அடிக்கடி வந்து போகிறது. இன்று காலையிலிருந்தே கிபிர் விமானங்கள் இரண்டு மூன்று தடவைகள் வந்து கிளிநொச்சியை சுற்றி குண்டு போட்டுவிட்டு போய் விட்டன. போரின் தீவிரம் மனதை நெருடியது.

அவன் பக்கத்து கொட்டிலில் குவித்திருந்த சைக்கிள்களுள் தனது சைக்கிளை எடுத்துக் கொண்டு வெளியே வந்தான். அலுவலகம் முடிந்த உடனேயே பாதிப்பேர் வீடுகளுக்குப்போய் விட்டார்கள். மீதிப்பேர் கூட்டம் கூட்டமாய் நின்று கதைத்துக் கொண்டிருந்தார்கள். அவனைப் போலவே வீட்டுக்குப்போக அவசரம் காட்டாதவர்கள்.

அவன் சைக்கிளை உருட்டிக் கொண்டு ஒழுங்கையில் இறங்கினான். மணலுக்குள் உருட்டுவதே கஷ்டமாய் இருந்தது. பகல் முழுவதும் குனிந்து அமர்ந்த நிலையில் வேலை பார்த்ததில் முதுகில் வலித்தது ஒரே அலுப்பாக இருந்தது. வீட்டுக்குப் போகும் ஆர்வம்கூட இல்லை. 34 வயதில் இந்த சலிப்பு வந்தது எத்தனை துரதிஷ்டம் என்று நினைத்துப் பார்த்தான். வீட்டுக்குப் போய் என்னதான் செய்வது.....

போனதும் முகம், கை, கால் கழுவி விட்டு வர அம்மாவோ அக்காவோ அல்லது வாணியோ கொண்டு வந்து தேனீர் தருவார்கள்.



அதைக் குடித்து விட்டு முற்றத்து மரக்குற்றியில் அமர்ந்து தெருவை வேடிக்கை பார்க்க வேண்டியதுதான். அக்காவின் ஆறு வயது மகன் கீதனின் விளையாட்டுக்கள் தான் ஒரே ஆறுதல். அப்பாவை இழந்த துயரம் புரியாத வயது.... குண்டு வீச்சில் சிதறிய அப்பாவின் சாவின் கொடூரம் விளங்காத வயது...

மடியில் வந்து அமர்ந்து அவன் முகம் திருப்பி மாமா.... வாணிச் சித்தி எனக்கு பந்து தரமாட்டாவாம்..... அம்மா எனக்கு இண்டைக்கு அடிச்சவ..... மாமா நீங்கள் அம்மாவுக்குப் பேசிவிடுங்கோ...

என்று வரிசையாய் அவன் தரும் முறைப்பாடுகள். இவனால்தான் எத்தனையோ கவலைகள் மறக்க முடிகிறது. அவனைவிட்டால் வேறு என்ன சந்தோஷம் மிச்சமாய் இருக்கிறது... பொழுது சரிய இந்தியச் செய்தி... வெரித்தாஸ் தமிழ்ப்பணி— பி.பி.ஸி.தமிழோசை என்று தொடர்ந்து செய்திகளைக் கேட்டுவிட்டு... இடம்பெயர்ந்து ஓடிவந்து அவசரமாய் போட்ட அந்தச் சிறு வீட்டின் ஒடுககமான விறாந்தையில் பாய் விரித்து படுக்க வேண்டியதுதான் படுத்தாலும் நித்திரை வராது, நந்தினியின் நினைவுதான் வரும். இரண்டு வருட மணவாழ்க்கை இவ்வளவு தூரம் கசந்து போய்விட்டதே என்ற ஆற்றாமையில் மனம் கலங்கும்.

பொருத்தமற்ற கல்யாணத்தை நடத்தி வைத்த கடவுள் மீது கோபம் வரும். ஆரம்பநாட்களில் அலுவலகம் முடிந்து வீடு திரும்பும் அந்த நிமிஷத்துக்காக எவ்வளவு தூரம் காத்திருப்பான். கிளிநொச்சியில் வேலை விட்டபின் சைக்கிளில் ஒரு மிதி மிதித்தால் பத்து நிமிடத்தில் கனகபுரம் போய்விடலாம். முற்றத்தில் குரோட்டன்ஸ் செடிகள் சூழ்ந்த வீடு. நந்தினி எவ்வளவு சந்தோஷமாய் வாசலில் நிற்பாள். இன்றைக்கு எப்படி அவள் அத்தனை தூரம் மாறிப் போனாள்.... பார்க்கப் போனால் அவனது குடும்பத்தைத்தான் அவளுக்குப் பிடிக்காமல் போய்விட்டது எனலாம். அநியாயமாய் குண்டு வீச்சுக்கு அத்தானை இழந்துவிட்ட அக்கா, கல்யாணத்திற்காக காத்து நிற்கும் தங்கை வாணி, அம்மா இவர்களை வைத்து கவனிக்கின்ற அவனுடைய கடமை... இவை அவளுக்குப் பிடிக்கவில்லை. கொஞ்சம் வசதியாய் செல்லமாய் வளர்ந்தவள். தர்மபுரத்தில் வீடு, வாசல், வயல் என்று வசதியான வீடு. அந்த மாதிரி இருந்தவளால் அவனது சுமைகளை ஏற்றுக்கொள்ள முடியா



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மற் போய்விட்டது. இதுதான் அவர்களுக்குள் அடிப்படையான பிரச்சினையாக முளைவிட்டது.

நந்தினி அவனுடன் வாழ்ந்த இரண்டு வருஷங்களிலும் இவர்களை வருத்தியதே அதிகம்.

குத்தலும் இளக்காரமுமாய் என்ன வாய் அவளுக்கு... நினைத்தாலே வெறுத்துப் போகிறது அவனுக்கு. அலட்சியமும் அடுத்தவரை தூக்கியெறிந்து பேசும் குணமும் அவளுக்கு இயல்பாகவே இருந்தது. அந்த பிடிவாதம்... தான் நினைத்ததை சாதிக்கும் வீம்பு... அவர்களிடையே சின்னச்சின்ன விஷயங்களிலும் விரிசலையே ஏற்படுத்தியது.

தனியாய் போய் இருக்க வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தாள். தந்தை இல்லாத நிலையில் அவனையே ஆதாரமாய் பற்றியிருக்கும் குடும்பம்...

அவனால் விட்டு விலக முடியாது.

இங்கே வந்த பிறகு... இந்தக் கரும்புத் தோட்டத்தில் வீடு போட்டு இருந்த பிறகு தான் அவள் பிடிவாதமும் அதிகரித்தது. ஒவ்வொன்றுக்கும் குற்றம் சொல்லி அம்மாவுடன் சண்டை போட்டாள் இடையே அவன்தான் படாதபாடு படவேண்டிய தாயிற்று. இந்த நெருக்கடி வாழ்க்கையை இயல்பாய் அவனால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அந்த வசதியின்மைகளை சொல்லிச்சொல்லி ஒவ்வொன்றையும் பெரிதுபடுத்தி.... அவனுக்கு கோபமும் எரிச்சலும் திமிறிக் கொண்டு எழுந்தது.

கடைசியாய் ஆறு மாதத்துக்கு முன்னால் ஒரு பிரிவு நிரந்தரமாக ஏற்பட்டுவிட்டது. அந்த பிரிவுக்கு முதல் இரண்டு நாளாய் ஒரே அழுகையும் ஆர்ப்பாட்டமும்....

'இப்படி என்னால இருக்க ஏலாது முருகன் கோயிலடிப் பக்கம் ஒரு வீடு இருக்காம் வாங்கோ நாங்கள் அங்க போய் இருப்பம்'

'என்னெண்டு நந்தினி அப்படி போய் இருக்கிறது. இதுகளுக்கு ஆற்ற உதவி...'

'அப்ப இவைக்கே உழைச்சுக் கொண்டு இருந்திருக்கலாமே..... என்னை ஏன் கல்யாணம் செய்த னீங்கள்...'

அவளின் கோப முகத்தை அவன் உற்றுப் பார்த்தான், வருகிற கோபத்துக்கு கையை நீட்டிவிடுவோமோ என்றுகூட பயந்தான். இவள் இப்படிக் கதைப்பது இவர்கள் காதில் விழுந்து விடுமோ என்று கவலைப் பட்டான்.

'ஏன் சத்தம் போடுறாய் நந்தினி மெள்ளக் கதை உனக்கு இங்க என்ன பிரச்சினை...'

'என்னால இப்பிடி இங்க இருக்க ஏலாது...'

'அது தான் ஏன் எண்டு கேட்கிறன்'

'எனக்கு மூச்சடைக்கிற மாதிரி இருக்கு'

'உனக்கு மட்டுமில்லை இங்க எல்லாற்ற வாழ்க்கையும் இப்பிடித் தான் இருக்கு'

'அதெல்லாம் எனக்கு தெரியாது. தனியப் போய் இருப்பம் இல்லாட்டி நான் தர்மபுரம் போறன்'

பின்ன போ..... சுள்ளென்று சொன்னான்.

'அம்மாவும் அக்காவும் பதறிப் போய் "நீ பேசாமல் இரடா" என்று அதட்டினார்கள்'

அன்று முழுவதும் அவள் சாப்பிடவில்லை. முகத்தை தூக்கி வைத்துக் கொண்டிருந்தாள். அம்மாவும் அக்காவும் எவ்வளவோ கேட்டும் அவள் சாப்பிடவில்லை.

மறுநாள் அதிகாலை தன் உடுப்புக்களை எடுத்துக் கொண்டு கரும்புத் தோட்டத்திலிருந்து ஸ்கந்தபுரம் பஸ் நிலையம் வரை நடந்தே போனாள். காலையில் ஏழரை மணிக்கு ஒரு பஸ் புதுக்குடியிருப்புக்குப் போகும் அதில் போனால் தர்மபுரத்தில் அவள் வீட்டுக்கு அருகிலேயே இறங்கிக் கொள்ளலாம். நந்தினி புறப்படும் போது அம்மா எத்தனை கெஞ்சினாள்... அவனுக்கு வந்த கோபத்தில் அவளுக்கு நாலு அறை கொடுக்கலாமா என்றிருந்தது.

அவன் பேசாமலே இருந்துவிட்டான்.

ஒரு நல்ல பெண்ணை தெரிவு செய்ய முடியாமற் போய்விட்டதே என்று மனம் மிகவும் நொந்துபோய் விட்டது.

அம்மாவும் அக்காவும் எத்தனை தூரம் அழுதார்கள்.... அவனது நிலையைப் பார்க்க அவர்களுக்கு தாங்கவில்லை.

நீ போய் நந்தினியைக் கூட்டிவா தம்பி. தனியாய் ஒரு வீடு பார்த்து ரெண்டுபேரும் இருங்கோ. நாங்கள் எப்படியோ சமாளிச்சுக்கொள்ளுவம். நாலு பேருக்கு தெரிஞ்சா மரியாதை இல்ல தம்பி, உன்ரை வாழ்வு வீணாய்ப் போகக்கூடாது... போய்க் கூட்டி வா.... அம்மா அவனிடம் எத்தனையோ தடவைகள் கெஞ்சி அழுதாள்.



அவன் போகவில்லை.

அவளின் செய்கையை நினைத்து அத்தனை கோபமும் எரிச்சலும்... ஏதோ நடக்கிறபடி நடக்கட்டும், அதுக்காக அவளைப் போய்க் கெஞ்சிக் கொண்டிருக்க முடியாது... என்று சொல்லிவிட்டான். அவளோடு



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வாழ்ந்த வரை போதும்.... என்றாகிவிட்டது.

மணல் ஒழுங்கை முடியும் வரை சைக்கிளை உருட்டிக்கொண்டு போய் அப்பால் செம்மண் பாதையில் சைக்கிளில் ஏறி மிதித்தான். மாலை நேரத் தெரு பரபரப்பாய் நெரிசலாய் இருந்தது. வேர்த்து வடிகின்ற... களைப்பான.... கவலையான முகங்கள் அவனைப் போலவே, கலைந்த தலையும் புழுதி படிந்த முகமுமாய் வீட்டுக்கு வந்து முகம் கழுவி தேனீர் குடித்து முற்றத்து மரக் குற்றியில் அமர்ந்து கொண்டான். கீதனின் விளையாட்டும் சிரிப்பும் மனதை சிறிது லேசாக்கியது.

தெருவில் சனங்களின் நடமாட்டம்.... தெருவின் எதிர்ப்பக்க பெட்டிக் கடை வாசலில் சிறு கூட்டம்...

'ரெண்டு நாளாய் பொம்பர் பறக்குதல்லே, ஷெல் அடிப்பாங்கள் எண்டு நினைச்சு முறிப்பு சனங்கள் எல்லாம் வெளிக்கிட்டு வருதுகளாம். இண்டைக்கும் வந்து எங்க கொட்டினாங்களோ தெரியேல்ல, பெரிய சண்டை தொடங்கப் போகுது போல கிடக்கு'.

அம்மா வட திசை பார்த்துச் சொல்லி பெரு மூச்சு விட்டாள். அப்போது தான் சர் என்ற இரைச்சலுடன் அவர்கள் காணி வாசலில் ஒரு மோட்டார் சைக்கிள் வந்து நின்றது.

அதிலிருந்து இறங்கி வந்தவன்.... காந்தன். நந்தினியின் ஒன்றுவிட்ட தம்பி. அவனைக் கண்டதும் விருட்டென்று எழுந்து வாசலுக்குப் போனாள்.

'அத்தான்.... '

'என்ன காந்தன்...'

நெஞ்சுக்குள் இலேசான கலவரம்–

'கிபீர் வந்து சித்தப்பா வீட்டுக்கு மேலே குண்டு போட்டுட்டுது. நந்தினி அக்காவுக்குக் காயம்....'

'கடவுளே' என்று... அம்மா பதறினாள்.

'புதுக்குடியிருப்பு ஆஸ்பத்திரிக்கு நந்தினி அக்காவைக் கொண்டு போயிற்றினம். பெரிய காயம் இல்லை. தோளிலையும் கையிலையும்தான். நான் உங்களுக்குச் சொல்ல ஓடியாறன்.'

அந்தச் செய்தியில் மனம் அதிரத்தான் செய்தது.

'நாலு பேர் செத்திட்டினம், சுத்தி எல்லா இடமும் கருகிப் போய்க் கிடக்கு, சித்தப்பாக்கும் சின்னக் காயம், போகிற போக்கில குண்டைப் போட்டிட்டுப் போட்டாங்கள்.'

அம்மா அக்காவிடம் திரும்பி 'தம்பியின்ர உடுப்புகளை எடுத்து பையில் குடுத்து விடுபிள்ளை.... தம்பி கெதியாய் வெளிக்கிடு....' என்று அவசரப்பட்டாள்.

'ஓம் அத்தான் கெதியாய் வாங்கோ பொழு பட முதல் இரணைமடு குளக்கட்டு கடந்திட வேண்டும்'

அடுத்த ஐந்தாவது நிமிடம் அவனையும் சுமந்து கொண்டு மோட்டார் சைக்கிள் விரைந்தது.

இரவு பத்து மணிக்கு புதுக்குடியிருப்பு ஆஸ்பத்திரியை அடையும் வரை அவன் நெஞ்சு தவித்துக் கொண்டிருந்தது. முதலில் ஆஸ்பத்திரிக்கு உள்ளே அனுமதி மறுத்து.... பின் அவன் நிலமையைப் பார்த்து வார்ட்டுக்குள் அனுமதித்தார்கள்.

நிலத்தில் பாய் போட்டு நெருக்கமாய்ப் படுத்திருந்தவர்களைக் கடந்து உள்ளே போனான். இரவின் அமைதியைக் கலைத்தபடி முனகலும் சிணுங்கலும்.... மூலைக்கட்டிலில் தோள், கை, கால்களில் வெள்ளைநிற கட்டுக்களுடன் நந்தினி படுத்திருந்தாள். பக்கத்தில் நின்ற அவள் அம்மா அவனைக் கண்டதும் அழத்தொடங்கினாள்.

நெஞ்சில் சில்லிட்ட உணர்வுடன் நந்தினியின் கையைப் பிடித்து நந்தினி என்றான். வேதனை படிந்திருந்த அவள் முகத்தை கலவரத்தோடு பார்த்து மீண்டும் நந்தினி என்றான். ம்... என்ற முனகலோடு கண்களைத் திறந்தாள். அவனை உணர்ந்ததும் கண்களில் நீர் திரண்டு காதோரம் வழிந்தது. அவனால் தாங்க முடியவில்லை.

பயப்படாத நந்தினி... உனக்கு சுகம் வந்திடும்.

நான் பக்கத்தில இருக்கிறன். நீ ஒண்டுக்கும் பயப்பிடாத...

அவள் கைகளை பரிவோடு ஆறுதலாய் அழுத்தினான்.

தாமரைச் செல்வி



**இது கரும்புலிகள் சகாப்தம் இடியும் மின்னலுமாகப் புலிகள் போர்க்கோலம் பூண்டுவிட்ட காலம்.**

**- தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்.**

## உன் பதிப்புகள்

நீண்ட உன் பயணத்தை ஒரு

தடவை திரும்பிப் பார்
தொலைவினும் கூட சிறிதாய் மிகச்
சிறியதாய் தெரியும் உன் சுவடுகள்.
ஆம் அவைதான் உன் வாழ்வின்
பதிப்புகள்
அந்தச் சாலையினோரம்
அவற்றுடன் தெரிகிறதே ஒரு சில
நிழல்கள்
அவை உன் இளைப்பாறும்
இடங்களா? இல்லை; அவைதான்
உன் முயற்சியின் தடைகள்.
ஆழமாகப் பதிந்து கொள்ளும் உன்
சுவடுகள் நிச்சயம்
முட்களைக் களைந்தே செல்லும்;
நல்லதோர் பாதையினை புதிதாய்
அமைக்கும்
அவ்வழியே இன்னும் பல சுவடுகள்.

—சுதா



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 'இஸ்லாமிய அணுக்குண்டினை'



## அமெரிக்காவால் தடுக்க முடியவில்லை

உலகில் பலரும் எதிர்பார்த்திருந்தது போலவே பாகிஸ்தான் அணுகுண்டுப் பரிசோதனைகளை நடத்தி முடித்துள்ளது. ஆப்கான் எல்லையோரத்திலுள்ள 'சாகி' மலைப்பகுதித் தளத்தில் இப் பரிசோதனைகள் வெற்றிகரமாக நடத்தப்பட்டதாகப் பாகிஸ்தான் அறிவித்தது.

பாகிஸ்தானின் இவ் அணுகுண்டுப் பரிசோதனை குறித்து ஆச்சரியப்படுவதற்கோ அன்றி அதிர்ச்சியடைவதற்கோ எதுவுமே இல்லை. சில சமயம் பாகிஸ்தான் இவ் அணுகுண்டுப் பரிசோதனைகளை நடத்தாது விட்டிருப்பின் தான் அது அதிர்ச்சி ஊட்டுவதாகவும், ஆச்சரியம் அளிக்கக்கூடியதாகவும் இருந்திருக்கக்கூடும்.

பாகிஸ்தான் ஏற்கனவே அணுகுண்டுகளைக் கொண்டிருந்தது என்பது பரவலாக உலகில் நம்பப்பட்ட விவகாரமாகவே இருந்துள்ளது. முன்னாள் பாகிஸ்தான் பிரதமர் பெனார்சீர் பூட்டோ, தற்போதைய பிரதமர் நவாப்ஷெரீப், பாகிஸ்தான் இராணுவத் தளபதி ஆகியோர் ஏற்கனவே பாகிஸ்தான் அணுவாயுத வல்லமையைக் கொண்டுள்ளதாக அறிவிப்பும் செய்திருந்தனர். இதே சமயம், பாகிஸ்தானிடம் 11 வருடங்களுக்கு முன்னதாகவே அணு ஆயுதம் இருந்ததாக இந்திய பாதுகாப்பு அமைச்சு உறுதிசெய்தது.

இந்த நிலையில், பாகிஸ்தான் மேற்கொண்ட அணுகுண்டு வெடிப்புகள் உத்தியோகபூர்வமாக அணுவாயுத அரசாகத் தன்னைப் பிரகடனம் செய்துகொள்ளும் நடவடிக்கையே ஆகும். மறுவளமாகக் கூறுவதானால் இந்தியா பெற்றுக்கொண்ட அணுவாயுத வல்லமையை தானும் பெற்றுக்கொண்டுள்ளதாக உலகிற்கு பகிரங்கமாக வெளிப்படுத்தும் முயற்சியே ஆகும்.



இந்தியா அணுகுண்டு பரிசோதனையை நடத்திய போது உலக நாடுகள் பலவும் இந்தியா மீது பலத்த கண்டனத்தைத் தெரிவித்தன. இதே வேளை, பாகிஸ்தான் அணுகுண்டு சோதனைகளை நடத்தவிடாமல் தடுப்பதற்கு பெரும் இராஜீக முயற்சியிலும் இறங்கின. ஆனால், பாகிஸ்தானின் அணுகுண்டு சோதனை மூலம் இம் முயற்சிகள் யாவும் தோல்வியில் முடிவுற்றன.

பாகிஸ்தான் அணுகுண்டுப் பரிசோதனையில் ஈடுபடாது தடுக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபாடு காட்டிய நாடு அமெரிக்காவாகும். இந்தியா அணுவாயுத சோதனை நடத்தியதைத் தொடர்ந்து அமெரிக்க ஜனாதிபதி பில் கிளிண்டன் ஒரு விஷேட தூதுக்குழுவை பாகிஸ்தானுக்கு அனுப்பிவைத்தார்.

அமெரிக்க துணை அரசுத்துறைச் செயலர் ஸ்ரோக்ஸ் ரல் பூட் தலைமையில் அனுப்பப்பட்ட இக்குழு பிரதமர் நவாப்ஷெரீப் உட்பட பலருடனும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டது. இப் பேச்சுவார்த்தைகளின் போது பாகிஸ்தான் அணுவாயுத சோதனைகளைத் தவிர்க்கும் பட்சத்தில் அதற்குக் கிடைக்கக்கூடிய அரசியல் – பொருளாதார அனுகூலங்கள் பலவற்றை சுட்டிக்காட்ட அமெரிக்காவினதும்– மேற்குலகினதும் அதிக சலுகை பெறும் நாடாக பாகிஸ்தான் மாறும் என ஆசை காட்டப்பட்டது.

இதனை, பாகிஸ்தானின் அணுகுண்டு வெடிப்புத் தொடர்பாக அமெரிக்க அதிபர் பில் கிளின்டன்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தெரிவித்த கருத்துக்களே நிரூபிப்பனவாக உள்ளன. அவர், 'இந்தியா நடத்திய சோதனைக்கு பதில் தருவது போல் சோதனை நடத்தி நிதானம் காட்டத் தவறியதன் மூலம் தனது பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கான உண்மையிலேயே விலை மதிப்பற்ற வாய்ப்பை பாகிஸ்தான் இழந்துவிட்டது' எனத் தெரிவித்தார்.

இதேபோன்றதொரு நிலையையே ஜப்பான், அவுஸ்ரேதிலியா போன்ற நாடுகள் கடைப்பிடித்தன. ஆனால், பாகிஸ்தான் அரசாங்கம் கருத்திற் கொள்ளவில்லை. கருத்திற் கொள்ளும் நிலையிலும் இருக்கவில்லை. பாகிஸ்தான் இவ் அணு ஆயுத விடயத்தில் சீனாவின் கருத்துக்களுக்கு மட்டுமே செவிசாய்க்கும் நிலையில் இருந்தது என்பதே யதார்த்தமானதாக இருந்தது.

இதற்குக் காரணமும் இல்லாமல் இல்லை. பாகிஸ்தான் இன்று நடுத்தரவீச்சு ஏவுகணைகள் மற்றும் அணுவாயுதம் பெறுவதற்கு சீனாவே உதவியது என்பது வெளிப்படையானதாகும். சீனா இதனை மறுப்பினும் உலகில் பெரும்பாலானோர் அவ்வாறே நம்புகின்றனர். இந்த நிலையில் சீனாவின் அங்கீகாரம், ஆலோசனை என்பவற்றைத் தவிர வேறு எவருடைய ஆலோசனைகளையும் ஏற்பதற்குப் பாகிஸ்தான் தயாராக இல்லை.

இதனை இந்தியா அணுகுண்டு பரிசோதனைகள் செய்த உடனேயே பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் ஆலோசனை பெறுவதற்காகச் சீனா சென்றதில் இருந்தே புரிந்து கொள்ளமுடியும். அமெரிக்கா பாகிஸ்தானுக்கு பொருளாதார– இராணுவ உதவிகளைச் செய்யும் முக்கிய நாடுகளில் ஒன்றாக இருக்கலாம். ஆனால் சீனா போன்று காத்திரமான இராணுவ உதவிகளை கட்டுப்பாடற்ற ரீதியில் பெற்றுக்கொள்வதற்கு அமெரிக்கா ஏற்றதொரு நாடல்ல. அமெரிக்க ஆட்சியாளர்கள் சில சமயம் இதற்கு ஆதரவாக இருப்பினும்கூட, அந்நாட்டுச் சட்டதிட்டங்கள் அதற்கு ஏற்றவையாக இல்லை.

இதே சமயம், அமெரிக்காவைப் பொறுத்து இவ்விவகாரமானது தனியாக அணுவாயுதப் பரவல் தடை என்பதுடன் தொடர்புபட்டதல்ல, இஸ்லாமிய நாடு ஒன்று அணுகுண்டைப் பெறுவதைத் தடை செய்யும் நீண்டகால குறிக்கோளுடன் கூடியதும் ஆகும்.

அதாவது பாகிஸ்தான் அணுகுண்டை தயார் செய்யும் ஆற்றலைப் பெற்றுக்கொண்டதாக தகவல்கள் வெளியானபோதே அது 'இஸ்லாமியக் குண்டு' என்றே வர்ணிக்கவும்பட்டது. இவ்வாறு 'இஸ்லாமியக் குண்டு' ஒன்று தயார் செய்யப்படுமானால், தென்மேற்கு ஆசியாவில் பாகிஸ்தானின் முக்கியத்துவம் அதிகரிப்பதோடு, தென்மேற்கு ஆசியாவையும் பதற்றத்திற்கு உள்ளாக்கும் ஒன்றாக இருக்கும் என்றே கருதப்பட்டது.

இதன் காரணமாக அணுவாயுத பரவல் என்பது ஒரு புறம் 'இஸ்லாமியக் குண்டு' உருவாவதைத் தடுத்துவிட வேண்டும் என்ற நிலையிலுமே அமெரிக்கா பாகிஸ்தானின் அணுவாயுத விடயத்தில் தீவிர அக்கறை காட்டியது. இந்தியாவுக்கு எதிரான பாகிஸ்தானின் ஆயுதப் போட்டியில் நேரடியாகவும், மறைமுகமாகவும் நீண்டகாலமாக உதவிவரும் அமெரிக்கா இந்தியா அணுவாயுத நாடாகப் பிரகடனப்படுத்திய பின்னரும் இதன் காரணமாகவே பாகிஸ்தானைத் தடுத்துவிட முயன்றது. ஆனால், இதனைப் பாகிஸ்தானும் புரிந்தே இருந்தது.



இந் நிலையில்தான் அமெரிக்க ஜனாதிபதி இறுதி நேரத்தில் தொலைபேசி மூலம் விடுத்த கோரிக்கைகூட பாகிஸ்தான் பிரதமரால் நிராகரிக்கப்பட்டு அணுகுண்டு பரிசோதனை நடத்திமுடிக்கப்பட்டது. இந்த நிலையில் பாகிஸ்தான் அணுகுண்டுப் பரிசோதனையை தடுத்து நிறுத்தும் அமெரிக்காவினதும், அதன் மேற்குலக கூட்டாளிகளினதும் முயற்சி தோல்வி கண்டுள்ளதென்பது தவறான மதிப்பீடாகாது.

அமெரிக்காவும் சரி, அதன் மேற்குலக கூட்டாளிகளும் சரி உலகில் அணுவாயுத பரவல் தொடர்பாக கொண்டுள்ள நிலைப்பாடானது ஒருதலைப்பட்சமானது என்பது வெளிப்படையானது. அதாவது, அமெரிக்கா தனது அணுவாயுத வல்லமையில் சிறிதைத்தானும் குறைக்கத் தயாரற்ற நிலையில் – ஏனைய நாடுகள் அணுவாயுதங்களை உற்பத்தி செய்வதைத் தடுக்கமுனைவது அணுவாயுத ஏகபோகத்தை அனுபவிக்க முற்படும் செயலே ஆகும்.

ஆகையினால், இந்தியாவையோ அன்றி பாகிஸ்தானையோ அணுகுண்டுப் பரிசோதனைகளை நடத்தவிடாமல் தடுக்கும் தார்மீக பலம் அமெரிக்காவிற்கு இல்லை. ஆனால், அமெரிக்காவின் நிலைப்பாட்டிற்கு மாறான நிலையில் இந்தியாவோ அன்றி பாகிஸ்தானோ அணுகுண்டு பரிசோதனைகளை மேற்கொண்டால் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க வேண்டிவரும் என்பதும் வெளிப்படையானதாகும்.

அதிலும், குறிப்பாக பாகிஸ்தானை இது பெருமளவில் பாதிக்கும் ஒன்றாக இருக்கும் என்பதிலும் ஐயமில்லை. ஏற்கனவே தனது தேசிய வருமானத்தில் 6.5 சதவீதத்திற்கு மேல், இராணுவச் செலவீட்டிற்கு ஒதுக்கியுள்ள பாகிஸ்தான் பொருளாதாரம் பல நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளது. இதனைப் பாகிஸ்தான் பிரதமர் எச்சரிக்காமலும் இல்லை.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவ்வாறு இருந்தும் பாகிஸ்தான் தனது அணுசக்தி வல்லமையை நிரூபிக்கவேண்டிய நிர்ப்பந்தம் உருவானமைக்கு பிரதமர் நவாப்ஷெரீப் கூறுவது போன்று இந்தியாவில் இருந்து எழுந்துள்ள ஆக்கிரமிப்பு அச்சுறுத்தல் எனக்கூறுவது உண்மைக்கு மாறானதாகவே இருக்கும்.

உண்மையில் நவாப்ஷெரீப்பிற்கு எழுந்துள்ள நெருக்கடியானது உள்நாட்டு அரசியல், இராணுவ நெருக்கடியே ஆகும். அதாவது, அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலகநாடுகளின் கோரிக்கை சலுகை அறிவிப்புக்கள் என்பனவற்றையும் மீறி பாகிஸ்தான் அணுகுண்டை அதற்காகவே வெடிக்க வைக்கவேண்டிய நிலை உருவானது.

பாகிஸ்தான் அரசியலில் இந்தியாவிற்கு எதிரான பகை உணர்வைவிட வேறு எந்த அம்சமும் அதனை மீற முதன்மை பெற்றுவிடமுடியாது. இந்த நிலையில், இந்தியா அணுகுண்டு வெடிப்புக்களைத் தொடர்ந்து நவாப்ஷெரீப் அரசாங்கம் அணுகுண்டுத் தயாரிப்புக்களை விரும்பியோ அன்றி விரும்பாமலோ மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகியது.

அதற்கு அரசாங்கம் தயங்குமாயின் அரசியல் ரீதியாகவும் – ஏன் இராணுவ ரீதியில்கூட நவாப்ஷெரீப் அரசாங்கம் உள்நாட்டில் பெரும் நெருக்கடிக்கு முகம் கொடுக்க வேண்டிவரும். ஏனெனில், இவ் விவகாரத்தை எதிர்க்கட்சி தனது அரசியல் ஆதாயத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளத் தயங்கமாட்டாது. எதிர்க்கட்சித் தலைவியான பெனாசீர் பூட்டோ ஏற்கனவே நவாப்ஷெரீப் அரசாங்கம் பாதுகாப்பு நடவடிக்கையில் தவறிழைத்துவிட்டது எனக் குற்றம் சாட்டியிருந்தார்.

இதேவேளை பாகிஸ்தான் இராணுவம் இந்தியாவின் அணுகுண்டு பரிசோதனைக்கு மாற்றான தனது சோதனைகளை வலியுறுத்தத் தவறியிருக்காது. இந்தியாவுடன் நீண்ட பகையுடன் வளர்க்கப்பட்ட பாகிஸ்தான் இராணுவம், பாகிஸ்தான் அரசியலிலும் பலமான செல்வாக்கு மிக்கது. ஆகையினால், இராணுவத்தின் கோரிக்கையை நிராகரிக்கவோ அன்றி புறம் தள்ளவோ தீர்மானம் எதையும் எடுத்துவிட முடியாது. ஏற்கனவே பாகிஸ்தானின் சுதந்திர கால வரலாற்றில் அரைவாசிக் காலம் பாகிஸ்தான் அரசு இராணுவ ஆட்சியில் இருந்ததும், பாகிஸ்தானில் ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட பிரதமர் ஒருவர் இராணுவ ஆட்சியில் தூக்கிலிடப்பட்டமையும் மறந்துவிடக்கூடிய அரசியல் அல்ல.

இந்த நிலையில்தான் பாகிஸ்தானை ஒரு அணுவாயுத அரசாக அதன் பிரதமர் நவாப்ஷெரீப் பிரகடனப்படுத்திக் கொண்டுள்ளார். இதன் மூலம் பாகிஸ்தான் பல பொருளாதார அசௌகரியங்களை எதிர்நோக்கவேண்டி வருவதும் தவிர்க்க முடியாதே போகலாம்.

அத்தோடு, பாகிஸ்தானுக்கு அமெரிக்காவில் இருந்து கிடைக்கப்பெறும் இராணுவ உதவிகள் தடைப்படுவதற்கான வாய்ப்புக்களும் உண்டு. அவ்வாறு தடைப்படுமானால், பாகிஸ்தான் இராணுவமும் சில நெருக்கடிகளுக்கு உள்ளாகலாம். அதிலும் குறிப்பாக அமெரிக்க விமானங்களைப் பெருமளவில் கொண்டுள்ள பாகிஸ்தான் விமானப்படை நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க வேண்டிவரலாம்.

ஆனால் எது எவ்வாறு இருப்பினும் அமெரிக்காவின் முயற்சி தோல்வியுற்றதோடு அணுவாயுத பரவல் தொடர்பாகவும், தென் ஆசியா, தென் மேற்கு ஆசியா குறிப்பாக இஸ்லாமிய நாடுகள் தொடர்பாகவும் அமெரிக்கா கடைப்பிடிக்க முயன்ற இராணுவச் சமநிலை குழப்பத்திற்கு உள்ளாகியுள்ளது எனவும் கூறமுடியும்.

**ரமணன்**

# மாகாணசபைத் தேர்தலுக்கு முன் மாங்குளம் கைப்பற்றப்பட வேண்டும்

## ஜனாதிபதி சந்திரிகா விரும்புகிறாராம்

சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மாங்குளத்தை கைப்பற்றிவிட்ட செய்தியுடன் மாகாணசபைத் தேர்தலை சந்திக்க விரும்புவதாக ஐலண்ட் பத்திரிகையின் பாதுகாப்புச் செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

மாங்குளம் கைப்பற்றப்பட்டுவிட்டது; 'ஜயசிக்குறு' இறுதிக்கட்டத்தை அண்மித்துவிட்டது என்ற செய்தியுடன் மாகாணசபைத் தேர்தலைச் சந்திக்கவே அவர் பெரிதும் விரும்புவதாகவும் மேலும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் ஆகஸ்ட் மாதத்தில் மாகாணசபை தேர்தல்கள் நடைபெறவுள்ளதாக செய்திகள் வெளிவந்தமை தெரிந்ததே.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# முடிவிற்கு வந்த சுகாட்டோவின் மூன்று தசாப்த ஆட்சி!

இந்தோனேஷியா

இன்று செய்தி ஊடகங்களினூடே பரவலாக அடிபடும் விடயம் ஒன்று இந்தோனேஷிய நாட்டில் மாணவர்களும், மக்களும் 32 வருடங்களாக இராணுவத்தின் முழு ஆதரவைப் பெற்று ஆட்சி புரிந்த, அமெரிக்காவின் நல்லாசிகளைப் பெற்றுக்கொண்ட ஜனாதிபதியான சுகாட்டோ தனது பதவியை இராஜினாமா செய்யுமளவிற்கு கொண்டு வந்த போராட்டங்களேயாகும்.

ஆசிய நாடுகளில் ஒன்றான இந்தோனேஷியா கிட்டத்தட்ட 13.000 தீவுகளைக் கொண்ட நாடாகும். இதில் மக்கள் வசிக்கக்கூடிய தீவுகள் கிட்டத்தட்ட 6000 தீவுகளேயாகும்.

ஒல்லாந்தின் குடியேற்ற நாடான இந்தோனேஷியா 1942–இல் ஜப்பானின் ஆக்கிரமிப்பின் கீழ் வந்தது. 1949–இல் இது சுதந்திர நாடாக தன்னைப் பிரகடனப்படுத்திக் கொண்டாலும் 1965–ஆம் ஆண்டளவிலேயே ஒல்லாந்தரின் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டது எனலாம்.

1965–ஆம் ஆண்டு இதன் ஜனாதிபதியாக சுகர்ணோ பதவிக்கு வந்தார். அப்பொழுது நாட்டில் இடதுசாரிகளான கம்யூனிஸ்டுகள் இவருக்கெதிராகப் போராட்டமொன்றைத் துவக்கினர். ஆசியாவில் பிரமாண்ட தொழிற்சங்கமான சொப்சி இந்தோனேஷியக் கம்யூனிஸ்டுகளின் கட்டுப்பாட்டிலேயே இயங்கி வந்தது. 20 இலட்சத்திற்கும் மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்டதாகவே சொப்சி விளங்கியது. ஐடிட் என்பவர் இதற்குத் தலைமை தாங்கினார்.

கம்யூனிஸ்டுகளின் நெருக்குதலுக்கும், தனது ஆட்சி கவிழ்ந்து விடுமோ என்பதிலும் பயமடைந்த சுகர்ணோ இதை முறியடிப்பதற்கு இராணுவத்திலிருந்த சுகாட்டோவின் உதவியை நாடவேண்டி வந்தது. இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அரசியலில் முன்னுக்கு வந்த சுகாட்டோ ஐந்து இலட்சத்திற்கும் மேற்பட்ட இந்தோனேஷியக் கம்யூனிஸ்டுகளை வேட்டையாடி இரகசியமாகக் கொன்று குவித்ததன் மூலம் இந்தோனேஷிய அரசுக்கு இருந்த ஆபத்தை இல்லாதொழித்தார்.

வரங்கொடுத்த பரம சிவனின் தலையிலேயே கைவைக்கத் துணிந்த பகாசுரன் போன்று தன்னை நியமித்த சுகர்ணோவையே வீட்டுக் காவலில் வைத்துவிட்டு ஆட்சியை சுகாட்டோ தனதாக்கிக் கொண்டார். இதற்கு அமெரிக்காவின் நல்லாசியும், இராணுவத்தினரின் ஒத்துழைப்பும் இவருக்குக் கிடைத்தது.

இவ்விதம் 1966–ம் ஆண்டு ஆட்சிக்கு வந்த சுகாட்டோ அன்றிலிருந்து இந்தோனேஷியாவில் நடைபெற்ற போராட்டங்கள் அனைத்தையும் இராணுவத்தின் இரும்புக் கரம் கொண்டு நசுக்கி இந்தோனேஷியாவின் முடிசூடா மன்னராகவே திகழ்ந்தார்.

> **தனக்கு இந்தோனேஷியாவில் எதிர்ப்பு எந்த ரூபத்திலும் வெளிவராது, தான் தொடர்ந்து இறக்கும் வரை ஜனாதிபதியாக இருக்கலாம் என கனவு கண்டுகொண்டிருந்த சுகாட்டோவின் அபிலாஷைகளுக்கு ஆப்புவைத்தவர்கள் இந்தோனேஷிய பல்கலைக்கழக மாணவர்கள் என்றால் அது மிகையாகாது.**



சுகர்ணோ வீட்டுக்காவலிலிருந்த போதே மரணத்தைத் தழுவிக் கொண்டார். அவரது மகளான மேகாவதி சுகர்ணோ இந்தோனேஷிய அரசியலில் அடிக்கடி அறிக்கைகளை விடுத்தும், ஜனநாயக ஆட்சியொன்றை அமைப்பதற்காகப் போராடப் போவதாக அறைகூவல் விடுத்தும் அரசியல் அரங்கில் முன்னணிக்கு வருவதற்கு அவரால் முடியவில்லை.

இந்தோனேஷிய மக்கள் இந்து, பௌத்த, முஸ்லிம், கிறிஸ்தவ இனத்தவர்களாவார். ஆயினும் அங்கு முஸ்லிம்களின் செல்வாக்கே மேலோங்கியுள்ளது.

சமீப காலத்தில் கிழக்கு ஆசிய நாடுகளில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சி இந்தோனேஷியாவைப் பெரிதும் பாதித்தது. இந்தோனேஷிய நாணயமான ருப்பியா தேடுவாரற்ற ஒரு நாணயமாகியது. உலக வங்கியின் உத்தரவின் பேரில் எரிபொருள், உணவுப் பொருட்கள், அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றங்கள் மக்களைப் பெரிதும் பாதித்தன.

இப் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு மேற்கொண்ட முயற்சிகளும் வெற்றிபெறவில்லை. உலக வங்கி போன்றவை இதில் இருந்து மீள்வதற்கு நிதி உதவிகளை அளிக்க முன்வந்தனவாயி



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## முல்லை மாவட்டத்தில் 5,250 சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்வதில்லை

முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போது பாடசாலைக்குச் செல்லாமல் உள்ள ஐந்து வயதிற்கும் 14 வயதிற்கும் இடைப்பட்ட மாணவர்களின் தொகை 5,250 எனத் தெரியவந்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட கல்வித் திணைக்களத்தால் இறுதியாகப் பெற்ற புள்ளி விபரங்களின் படியே 5,250 மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லாமல் உள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

பாடசாலைக்குச் செல்லாமல் உள்ள மாணவர்களில் அனேகமானவர்கள் வறுமையின் காரணத்தாலே செல்லாமல் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## இராணுவம் தப்பி ஓடுவதாலேயே ஜெயசிக்குறு பின்னடைகிறது

ஜெயசிக்குறுவின் முன்னேற்ற முயற்சிகள் தொடர்ந்து பின் தங்கி நிற்கக் காரணம், அதிகளவிலான படையினர் தப்பி ஓடிக் கொண்டிருப்பதே என இராணுவத் தளபதி றொகான் தளுவத்தை தெரிவித்துள்ளார்.

இவர் மேலும் தெரிவிக்கையில் இதுவரை சுமார் 19000 பேருக்கும் அதிகமானோர் படையில் இருந்து தப்பி ஓடியுள்ளனரென்றும் இவர்களது பொறுப்பற்ற செயலாலேயே முன்னேற்றம் தடைப்பட்டுள்ளது என்றும் தெரிவித்த இவர் யுத்தத்தை வெற்றிப் பாதையில் இட்டுச் செல்ல சகல சிங்கள இளைஞர்களும் ஒன்றுபட்டு முன்வர வேண்டும் என அழைப்பு விடுத்துள்ளார்.

னும், அவற்றின் நிபந்தனைகளை முற்றுமுழுதாக ஏற்றுச் செயற்படுத்தும் அளவிற்கு இந்தோனேஷியாவில் அரசியல் சூழ்நிலை சாதகமாக இருக்கவில்லை.

சுகாட்டோவின் குடும்பத்தினரும், உறவினரும் சொந்தம் கொண்டாடும் சொத்துக்களின் மதிப்பு கிட்டத்தட்ட 400 கோடி அமெரிக்க டொலர்களாகும். கிட்டத்தட்ட இந்தோனேஷிய பொருளாதாரத்தைச் சீரமைக்க இந்தளவு நிதியையே உலக வங்கியிடம் கடனாக பெறவேண்டிய நிலையிலேயே இந்தோனேஷியா உள்ளது.

இந்தோனேஷியாவின் வங்கிகள், எரிபொருள் நிறுவனங்கள், வனப் பகுதி, தொலைக்காட்சி, வானளாவ உயர்ந்த கட்டிடங்கள் ஆகியவையின் உரிமையாளர்களாக சுகாட்டோவின் ஆறு புதல்வர்களும், மூன்று மருமக்களுமே பிரதான பங்குதாரர்களாக விளங்குகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தோனேஷியாவில் 1966–க்குப் பிறகு சுதந்திரமான ஜனநாயகத் தேர்தல் ஒன்று நடைபெறவேயில்லை. 1000–ற்கும் மேற்பட்ட மக்கள் பிரதிநிதிகளும், இராணுவ உயர்திகாரிகளுமே ஜனாதிபதியை பதவிக்கு கொண்டுவருவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். இது ஒரு வகையில் சுகாட்டோ தனது பதவியை தொடர்ந்தும் தக்கவைத்துக் கொள்வதற்கு உருவாக்கிய ஏற்பாடாகவே இருந்தது.

தனக்கு இந்தோனேஷியாவில் எதிர்ப்பு எந்த ரூபத்திலும் வெளிவராது, தான் தொடர்ந்து இறக்கும் வரை ஜனாதிபதியாக இருக்கலாம் என கனவு கண்டுகொண்டிருந்த சுகாட்டோவின் அபிலாஷைகளுக்கு ஆப்பு வைத்தவர்கள் இந்தோனேஷிய பல்கலைக்கழக மாணவர்கள் என்றால் அது மிகையாகாது. இந்தோனேசியப் பல்கலைக்கழக மாணவர்கள் தலைநகர் ஜகார்த்தாவின் வீதிகளை ஆக்கிரமித்துக் கொண்டு நடாத்திய தொடர்ச்சியான போராட்டங்கள் பல கோடி ரூபா சொத்துக்களின் நஷ்டத்தையும் 500–க்கும் மேற்பட்ட உயிரிழப்புக்களையும் கண்டது.

இப் போராட்டங்களின் வளர்ச்சி இந்தோனேஷியப் பாராளுமன்றத்தின் சபாநாயகர் மற்றும் அரசியல்வாதிகள், ஏன் சுகாட்டோவுக்கு கண்மூடி ஆதரவளித்த அமெரிக்காவைக் கூட சுகாட்டோவை இராஜினாமா செய்யுமாறு கோரவைத்தது.

இடையறாத இந்தோனேஷிய மக்களின் போராட்டத்திற்கு முகங்கொடுக்கமுடியாத சுகாட்டோ கடைசியாக இராஜினாமா செய்யவேண்டிய கட்டாயத்திற்கு உள்ளானார். ஆயினும் இவரது ஆதரவாளரான ஒருவரே தற்போது ஜனாதிபதியாகப் பதவிப்பிரமாணம் செய்து கொண்டுள்ளார். இவருக்கு இராணுவத்தினரின் பக்கபலமும் உள்ளது.

ஆயினும் இன்று இந்தோனேஷியாவில் நடைபெறும் ஆர்ப்பாட்டங்களில் முன்னணிப் பாத்திரம் வகிக்கும் முஹார்மதிய முஸ்லிம் இயக்கத்தின் தலைவரான அமீர்ராயிஸ்–சுகாட்டோவும், அவரது குடும்பத்தினர், உறவினர் யாவரும் நீதியான, சுதந்திரமான நீதி விசாரணைக்கு முன் நிறுத்தப்பட வேண்டுமென கோரியுள்ளார்.

சுகாட்டோ தனது இராஜினாமாவை சமர்ப்பித்த போது இந்தோனேஷிய பாராளுமன்றத்தை முற்றுகையிட்டிருந்த இந்தோனேஷியப் பல்கலைக்கழக மாணவர்கள் ஆனந்தக்கூத்தாடினர்.

சுகாட்டோவை பதவி இறக்கப் போராடிய பல்கலைக்கழக மாணவர்களும், மத அமைப்புக்களும் சுகாட்டோ இராஜினாமாச் செய்ததை அடுத்து தமது போராட்டத்தைக் கைவிடுவார்களா? அல்லது நல்லதொரு ஆட்சி வேண்டுமென தொடர்ந்து போராடுவார்களா? போராட்டங்களை நசுக்கி அழிப்பதில் பெரும் அனுபவம் கொண்ட இந்தோனேஷிய இராணுவத்தினரால் அடக்கி ஒடுக்கப்படுவார்களா? ஜனாதிபதி சுகாட்டோவும் அவரது உறவினர்களும் நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்படுவார்களா? பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

**க. புஸ்பராஜன்**



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# யாழ்முரி 98

## இசை நிகழ்வு



தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் சுவிஸ் கிளையினரால் நடாத்தப்பட்ட யாழ் முரி 98 போட்டி இசை நிகழ்வு.







1ம் இடம் - தமிழீழ இசைக்குழு. டென்மார்க்
2ம் இடம் - விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகம் சுவிஸ்.
3ம் இடம் - லட்சுமி இசைக்குழுவினர். சுவிஸ்.
4ம் இடம் - பாசல் சங்கமம் இசைக்குழுவினர். சுவிஸ்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எங்களை வெற்றிகொள்ள எத்தனை
உதவிகள் எதிரிக்கு.....



தமிழா இன்னுமேன் தயக்கம்....
எமது கைகளில் தமிழீழம் தவழ்ந்திட
நிதி வழங்குவோம் எமது சேனைக்கு.

அச்சுப்பதிப்பு வாசன் அச்சகம் 0181 646 2885